



வட்டத்தில் கல்கி
KALKI
14.9.86
ரு.1.50
கல்கி
அழகிய
ச்சாரவரத்தை
அலங்கோலப்
டுத்தாதீர்கள்!
மலைவாசி
மக்களுடன்
ஒரு நாள்!

ஒவ்வொரு சிறு துளியும் அதிக பட்ச பலன் கொடுக்கும்படி செய்வதற்கு எம்.ஆர்.எல்லில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு எவ்விதம் செயல்படுகிறது?



இயற்கை அளித்த மிகவும் விலை மதிப்பற்ற எண்ணெய் வளத்திலிருந்து முழுமையான பலனைப் பெறுவது எப்படி என்பது குறித்து எம்.ஆர்.எல்லில் ஆராய்ச்சி நடந்து வருகிறது. கச்சா எண்ணெயிலிருந்து புதுப் புதுப் பொருட்களைப் பெற்றிடவும் சோதனைகள் நடந்து கொண்டே இருக்கின்றன. இயற்கை அளித்துள்ள எரிபொருள் நாளுக்கு நாள் குறைந்து வரும் தற்போதைய நிலையில் இந்த எரிபொருளிலிருந்து அதிகபட்ச பலனை இந்தியா பெற வேண்டும் என்பதே இந்த ஆராய்ச்சியின் நோக்கம்.

1984-இல் கார்ப்பரேட் திட்டத்தின்படி அமைக்கப்பட்ட எம்.ஆர்.எல்லின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவானது, இந்திய அரசு அறிவியல் மற்றும் தொழில் நுணுக்கத்துறையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே, இந்தத் துறை இரு புதிய திட்டங்களை நிறைவேற்றியுள்ளது.

- உற்பத்தி அளவு, உற்பத்தி முறை சம்பந்தப்பட்ட அளவுகள் ஆகியவற்றில் உச்ச நிலையை எட்டுவதற்கும், புதிய கிரியா ஊக்கிகள் உருவாவதற்கு உதவும் வகையிலும் ஒரு பரீட்சார்த்த எப்.சி.சி. ஆலை அமைக்கப்பட்டுள்ளது.
- புதிய கிரியா ஊக்கிகள் உருவாவதற்காக சென்னையில் உள்ள இந்திய தொழில் நுணுக்கக் கல்லூரியில் எம்.ஆர்.எல். ஆதரவில் ஆராய்ச்சித் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

பல்வேறு கச்சா எண்ணெய் வகைகள், பெட்ரோ கெமிக்கல் இடைநிலைப் பொருட்கள், லூப் எண்ணெயிலிருந்து பிரிக்கப்படும் பொருட்கள் ஆகியவை பற்றிய ஆராய்ச்சியும் நடத்தப்பட்டு வருகிறது. உற்பத்தி முறையில் ஏற்படுகிற இடையூறுகளை அகற்றி உற்பத்தியைப் பெருக்குவது, ஹெக்ஸேன் போன்ற கரைப்பான்கள், ப்யூட்டிலின், ப்யூட்டாடயின் போன்ற பெட்ரோ கெமிக்கல் மூலப் பொருட்களை உற்பத்தி செய்வது பாலிப்யூட்டாடயின் மற்றும் இதர ரசாயன ரப்பர் வகைகளைத் தயாரிப்பது ஆகியவற்றுக்கான சாத்தியக் கூறுகளையும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு ஆராய்ந்து வருகிறது.

நாட்டின் வளத்தைப் பெருக்க உதவும் நேசக்கரம் — எம்.ஆர்

மதராஸ் ரிஃபைனரீஸ் லிமிடெட்

477-482 அண்ணா சாலை
நந்தனம்
சென்னை-600 035



• கரபுன்னை மரங்களுக்கு நடுவில்...

அழகிய பிச்சாவரத்தை அலங்கோலம் ஆக்காதீர்கள்!

கல்கத்தாவிலிருக்கும் சுந்தர வனக் காடுகளுக்கு அடுத்தபடியாகக் கரபுன்னை மரங்கள் மண்டிக் கிடக்கும் இடம், நமது பிச்சாவரக் காடுகள்தான். கரபுன்னை போன்ற அரிய மரங்களையும் ஏராளமான மருத்துவ மூலிகைகளையும் உள்ளடக்கிக் கொண்டு ஒரு தீவாய்ப் பரந்து கிடக்கிறது பிச்சாவரம். 'இயற்கையை ரசிக்கத் தெரிந்தவர்களுக்கு அது ஒரு பூலோக சொர்க்கம்!' என்று நண்பர்களெல்லாம் வியந்து சொன்னதை மனத்தில் வைத்துக் கொண்டு நாங்களும் போனோம்.

சிதம்பரத்திலிருந்து சுமார் பதினாறு கி.மீ. தொலைவில் இருக்கும் பிச்சாவரத்திற்குப் போனபோது, 'ச்சே! இவ்வளவுதானா!' என்றாகிவிட்டது.

காரணம், நாம் செல்லும் டவுன் பஸ்கள் நம்மை இறக்கி விடும் இடம் அப்படியொரு பொட்டல் வெளி. நிற்கக் கூட நிழலில்லாததால், தாகம்விரட்டப் பக்கத்திலிருக்கும் தமிழ்நாடு சுற்றுலா வாரியத்தினரால் நடத்தப்படும் ஒரு சிறிய ரெஸ்டாரண்டுக்குள்நுழைகிறோம்.

''குடிக்கிறதுக்கு ஏதாவது கிடைக்குமுங்களா?'' அங்கிருக்கும் ஊழியர்களிடம் விசாரிக்கிறோம்.

''இருக்குங்க சார்! கூல்டிரிங்க்ஸ், டீ, காப்பி... எது வேணுமுங்க?''

''நாக்கு வறளுது. கூல்டிரிங்க்ஸே ஏதாவது குடுங்க. அதோட கூட்டா ஏதாவது டிபன் கிடைக்குமுங்களா?''

''இங்கே டிபனெல்லாம் கிடையாதுங்க. அதுக்குப் படகில் ஏறி... அதோ தெரியுது பாருங்க. அங்கிருக்கிற ரெஸ்டாரெண்டுக்குத்தான் போவணும்! அங்கே போய்ச் சாப்பிடணும்னு நாங்க ப்ரியாவே படகிலே கொண்டு போய்க் கொண்டு வந்துடுவமுங்க!''

''அப்படீங்களா? அதுதான் ஒரிஜினல் பிச்சாவரம்னு சொல்லுங்க!''

''பின்னே, இந்தப் பொட்டல் வெளியைப்பார்த்துஇதுதான்பிச்சாவரம்னு முடிவு கட்டிட்டீங்களா?''

''ஆமாங்க! அதுசரி; ஏன் இதைப் பொட்டல் வெளியா வெச்சிருக்கணும்? ஏதாவது மரங்கள், செடிகள், பூந்தோட்டம்னு... ஏதாவது போட்டுக் குளுமையா வெச்சிருக்கலாமே?''

''வெச்சிடலாங்க. அதுக்கெல்லாம்தண்ணி வேண்டாம்ங்களா?''

''தண்ணின்னதும்தான் ஞாபகம் வருது. இன்னும் கொஞ்சம் தண்ணி கொடுங்க. தாகமே அடங்க மாட்டேங்குது!''

''அதுதாங்களே சிக்கல்! தண்ணி பிரச்னைதான் பெரும் பிரச்னைன்னு சொல்றோம்!''

''என்னங்க இது! டூரிஸ்ட் சென்டர்னு சொல்லிக்கிட்டு, தண்ணி இல்லேன்னா எப்படி? ஜனங்க எப்படி வருவாங்க?''



• அமைச்சர் வி. வி. சுவாமிநாதன்

''ஜனங்களெல்லாம் ஆர்வமா வர்றாங்கன்னு யாருங்க சொன்னது? வரும் போது இருக்கிற ஆர்வம் போகும் போது இருக்காது. அந்த அளவுக்குத் தண்ணிக்குத் தவிச்சுப் போயிடுவாங்க! அதுவும் குழந்தை குட்டிகளோடு வர்றவங்கபாடு... படுமோசம்னுதான்



"ஜெயித்த எம். எல். ஏ., ஐம்பதினாயிரம் பேருக்குக் கடிதம் மூலம் நன்றி தெரிவித்தாருன்னு சொல்றீங்களே, எதுக்குங்க அவ்வளவு செலவு? நேரிலேயே போய் நன்றி சொல்லியிருக்கலாமே!"

"நீங்க ஒண்ணு! வெளியூரிலிருந்து வந்து அவருக்கு ஓட்டுப் போட்டவங்க அத்தனை பேருக்கும் எப்படிங்க நேரிலே போய் நன்றி சொல்லிக்கிட்டு இருக்க முடியும்?"

— நவபாரதி



"அதென்ன வெற்றி பெற்ற எம். எல். ஏ.க்குப் பாராட்டு விழாவும், வழியனுப்பு விழாவும் னு போட்டிருக்காங்களே!"

"இனிமே அவர் இந்தத் தொகுதிப் பக்கமே வரமாட்டாரில்லையா, அதனால தான் விழாவை அப்படி ஏற்பாடு செய்திருக்காங்க!"

— நவபாரதி

சொல்லணும்!"

"ஏங்க, அரசாங்கம் இந்தப் பிரச்னையைக் கவனிக்கவே இல்லீங்களா?"

"கவனிக்காமே என்னங்க! இங்கேர்ந்து சுமார் எட்டு கி. மீ. தூரத்திலிருக்கிற அனுபவம் பட்டுலேர்ந்து ஒரு தனி பைப் லைனே போட்டு எடுத்துக்கிட்டுதான் வந்தாங்க. ஆனா, இடைல இருக்கிற ஊர் ஜனங்க, அவுங்க பற்றாக் குறைக்கு பைப் லைன்லே ஓட்டை போட்டு எடுத்திடறாங்க. அதனாலதான் இங்கே வர்றதேயில்லே. என்ன செஞ்சும் அந்த ஜனங்களைத் தடுக்கவே முடியலே. வேறு வழி? லாரிகளில் விலைக்கு வாங்கிக் கொண்டு வந்துதான் சமாளிச்சுக்கிட்டு இருக்கோம். ஆயிரக்கணக்கில் கூட்டம் வர்ற சனி, ஞாயிறுகளில்தான் சிரமம்!"

"சரிங்க! படகிலே போய்ச் சுத்திப் பார்க்கலாமா? படகு கிடைக்குமா?"

"ஓ, தாராளமா! தலைக்கு மூணு ரூபா சார்ஜ் பண்றோம். ஒரு மணி நேரம் சுத்திக் காட்டி அழைச்சுக்கிட்டு வருவோம். டூரிஸம் போட்களே இருக்கு. தனியார் போட்களும் இருக்கு. தனியார் போட்களையும் நாங்க தான் கண்ட்ரோல் பண்றோம். இல்லேன்னா, தீவா இருக்கிற இந்தப் பாரஸ்டுக்குள்ளே போகும் போது என்ன நடக்கும்னு யாருங்க கண்டது? வாங்க போவலாம்!"


படகில் ஏறிச் சென்றோம். இரண்டு பக்கங்களிலும் கரபுன்னை மரங்கள் மண்டிக் கிடக்கும் இயற்கைக் கால்வாய்களில் நிரம்பியிருக்கும் உப்பு நீரில் மிதந்து போகும் போது, படகுத் துடுப்புக்களின் சப்தமே ஒரு சங்கீதமாய்... காட்டுப் பறவைகளின் குரல்களே தேவகானங்களாய்... நிஜமாகவே இயற்கையை ரசிக்கத் தெரிந்தவர்களுக்குச் சொர்க்க போகம்தான்!

படகோட்டி அலுக்கும் வரை பயணம் செய்துவிட்டு, மறுகரையில் உள்ள ரெஸ்டாரெண்டுக்கு எங்கள் படகைத் திருப்பிய போது, அங்குள்ள காட்டேஜில் ஒருநாள் தங்கியிருந்து விட்டுத் திரும்பிக் கொண்டிருந்த பெல்ஜியத்தைச் சேர்ந்த டேனியல் (விளம்பரக் கம்பெனி நடத்துபவர்) — மேரி (குழந்தை எழுத்தாளர்) தம்பதியைச் சந்தித்தோம். அவர்களிடம் பிச்சாவரத்தைப் பற்றிக் கேட்ட போது, "ஓ! வாட் அன் எக்ஸலண்ட் பிளேஸ்!" என்று இருவரும் ஒரே குரலில் சொன்னது சிறிதும் மிகைப்படுத்தப்பட்டதல்ல.

உள்ளே கட்டப்பட்டிருக்கும் ஆறு காட்டேஜ்களையும் பத்து படுக்கைகளைக் கொண்ட இளைஞர் விடுதியையும், ரெஸ்டாரெண்டையும் பார்த்துவிட்டுத் திரும்பிய போது, படகோட்டிகள் அனைவரும் வந்து எங்களைச் சூழ்ந்து கொண்டு, "சார் நீங்க இவ்வளவு விலாவாரியா விசாரித்ததிலேர்ந்தும், போட்டோ எல்லாம் புடிச்சதிலேர்ந்தும் நீங்க பேப்பர்காரங்கதான்கிறது புரிஞ்சு போச்சு. அதனால இங்கே படகோட்டிங்களா இருக்கிற ஏழு பேரையும் பர்மனெண்ட்



• டேனியல் — மேரி தம்பதியினர்.



• கரைக்கு அப்பால்தான் அழகு...

பண்ணணும்னு எழுதுங்க சார். அதோட இந்த டூரிஸ்ட் சென்டரை சிதம்பரத்திலுள்ள தமிழ்நாடு சுற்றுலா மையத்தின் மானேஜர் தான் பார்த்துக்கிறார். அது சரிப்படாது. இதுக்குன்னு ஒரு தனி மானேஜர் போட ணும்னு எழுதுங்க சார்!'' என்றார்கள்.

ஆக, பிச்சாவரம் என்பது இயற்கையை ரசிக்கத் தெரிந்தவர்களுக்கு மட்டும்தான் இனிமையான இடம். மற்றபடி, குழந்தை குட்டிகளோடு பிக்னிக் போனால், குழந்தை களைக் கவர்கிற மாதிரி அங்கு ஏதும் இல்லை. ஏன் அப்படி?

சிதம்பரத்தில் கைத்தறித் துறை அமைச்சர் வி. வி. சுவாமிநாதனைச் சந்தித்துக் கேட்ட போது, ''சார், ஒரு ரகசியம் சொல்றேன், கேளுங்க. பிச்சாவரத்திலிருக்கிற சுரபுன்னை போன்ற அரிய மரங்களெல்லாம் மிகவும் சென்ஸிடிவ் டைப்பானவை. அதிக மனித நடமாட்டம் அவைகளுக்குப் பிடிக்காது. அதனால் அவற்றின் வளர்ச்சியே பாதிக்கப் பட்டு அவை அழிந்து போகும் வாய்ப்பும் உண்டு. அதனால் மோட்டார் படகு சப்தம் கூட அந்தப் பகுதியிலே கேட்கக் கூடா துன்னு பிரெஞ்சு விஞ்ஞானி ஒருவர் எச்ச ரிக்கை செஞ்சார். அதையும் மீறித்தான் அதை டூரிஸ்ட் மையமாக்கினோம். அதனால ரொம்பவும் ஜாக்கிரதையா இருக்க வேண்டி யிருக்கு. எனவேதான் உள்ளே ஆறு காட் டேஜ்களுக்குமேல் கட்டலை. முன் பகுதியில் டெவலப் செய்யத்தான் போகிறோம். தண் ணீர்ப் பிரச்னையைப் போக்க கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைச் செயல்படுத்தப் போகிறோம். அப்படிச் செய்தால் அதுவே டூரிஸ்ட்டுகளையும்கவருமல்லவா! இவற்றோடு முன் பக்கம் பதின்மூன்று லட்சம் செலவில் ஒரு ரெஸ்டாரெண்டும், கட்டத்திட்டமிட்டுள் ளோம்!'' என்றார் அமைச்சர்.

'டூரிஸ்டுகள் நடமாட்டம் அதிகமானால் சுரபுன்னை மரங்களே அழிந்து போகும்; பிச்சாவரத்தின் இயற்கை அழகே கெட்டுப் போகும் என்றால் இங்கு சுற்றுலா அபிவிருத் தித் திட்டமே வேண்டாம்; அழகிய பிச்சா வரத்தை அலங்கோலமாக்கி விடாதீர்கள்!' என்றுதான் கூறத் தோன்றுகிறது.

பிச்சாவரம் போன்ற இடங்களைச் சிரமங் களைப்பொறுத்துக்கொண்டும் கஷ்டங்களைச் சகித்துக் கொண்டும் போய்ப் பார்ப்பதி லேயே ஓர் அலாதி இன்பம் இருக்கிறது. அப்படிக் கஷ்டப்பட்டாவது போய்ப் பார்ப் பவர்கள் உண்மையாகவே இயற்கை எழிலை ரசிப்பவர்களாக இருப்பார்கள். அவர்கள் படாத பாடுபட்டு இறுதியில் பெரும் திருப்தி முழுமையானதாகவும் இருக்கும்.

— எஸ். சந்திரமௌலி.

மேலட்டையில்: அழகிய பிச்சாவரத் தின் ஒரு காட்சி.

மேலட்டை வண்ணப்படங்களும், தென் னற்காடு மாவட்டச் செய்திகள் தொடர் பான மற்ற படங்களும் எடுத்தவர்:

கே. வி. ஆனந்த்

* குப்பன்



* வரதராஜக் கவுண்டர்




* முருகன்



* வண்ணமாறன்



* ஆபத்திலிருக்கும் குடிநீர்க் குளம்.



* பரணிதரன்



* இதுதான் மருந்தகத்திலுள்ள டாக்டர் அறை



அகதிகள் பெயரிலும் ஆதாயம்! தூங்குவதற்கென்றே ஒரு மருந்தகம்!

ஊருக்குள் நுழையும்போதே 'சட-முடா' என்று கற்கள் உடையும் சப்தம்! ஆம்; மலையை உடைத்துக் கல் அரவை இயந்திரங்களில் கொடுத்துச் சிறுசிறு கற்களாக்கி விற்றுக் கொண்டிருக்கிறார்கள், மலையை ஏலம் எடுத்தவர்கள். இந்த மலை உடைக்கும் வேலை ஆரம்பித்ததிலிருந்துதான் தலைவலி ஆரம்பித்தது, பெருமுக்கல் மக்களுக்கு! திண்டிவனம்—மரக்காணம் பாதையில் உள்ளது பெருமுக்கல் கிராமம்.

நான்காயிரம் மக்கள்தொகை கொண்ட இந்தக் கிராமமும் ஒரு சராசரி இந்தியக்-

கிராமம்தான். விவசாயிகள் பயிர் செய்து அதில் கிடைக்கும் வருமானத்தை(?) வைத்துக் கொண்டு முன்பு அரை வயிற்றுக் கஞ்சி குடித்துக் கொண்டிருந்தார்கள். இப்போது பலர் விவசாயத்தை விட்டுவிட்டு, மலையை உடைக்கும் பணிக்குச் சென்று விட்டார்கள். கணிசமான சம்பளம் என்றாலும் மக்களுக்கு வேறு விதமான பிரச்னைகள்.

வாத்தியார் முருகனைச் சந்தித்த போது பிரச்னைகளை வைத்துப் பொருமினார்: "எங்க கிராமத்துல இருக்கிறது ஒரே ஒரு குளம் தாங்க. அதிலேர்ந்துதான் குடிதண்ணீர் எடுக்கணும். (குடித்துப் பார்த்தோம். அமிர்தம் மாதிரி அப்படியொரு டேஸ்ட்!) மலையை ஒட்டி இருக்கிறது குளம். மலையை உடைப்பவர்கள் கந்தகம் வைத்து உடைக்கிறார்கள். அதனால் மழைக்காலத்தில் மலை மேலிருந்து வரும் தண்ணீருடன் கந்தகமும் கலந்து வருகிறது. இன்னும் சிறிது காலத்தில் இந்தத் தண்ணீரைக் குடித்தால் உடல்நலம் நிச்சயம் பாதிக்கும்! மேலும் இப்படி வெட்டு வைப்பதன் மூலம் குளத்தையும் கொஞ்சம் கொஞ்சமாகக் கற்களாலும், மணலாலும் மூடிக் கொண்டே போகிறார்கள். போகிற போக்கைப் பார்த்தால் குளத்தையே மூடி விடுவார்கள் போலிருக்கிறது!"

இதற்கிடையே வரதராஜ கவுண்டர் என்பவர் வந்தார். "ஸார்! இந்த மலையை ஏலம் விடுவதற்கு வசதியாக ஐந்து பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். இரண்டு தனியார் கம்பெனிகள் ஏலம் எடுத்திருக்கின்றன. இதில் வேதனை என்னவென்றால் இந்தக் கம்பெனிகள் இரண்டுமே இலங்கை அகதிகளின் பெயர்களில் பினாமியாக ஏலம் எடுத்து இருக்கிறார்கள். அகதிகளுக்கு ஏலம் எடுப்பதில் சலுகை உண்டு. அதாவது பொது ஏலமெல்லாம் இல்லாமல் ஒரு குறைந்தபட்சத் தொகையை அரசு நிர்ணயிக்கும். அந்தத் தொகைக்கே அவர்கள் ஏலம் எடுத்துக் கொள்ளலாம். அந்த வசதியைப் பயன்படுத்தி, இந்தத் தனியார் கம்பெனிகள், இரண்டும் இலங்கை அகதிகளைப் பினாமியாக வைத்துக் கொண்டு மலையை விழுங்கிக் கொண்டிருக்கின்றன. இதைப் பற்றித் திண்டிவனம் உதவி கலெக்டரிடம் கூடச் சொன்னோம். ஆனால் ஒன்றும் பலனில்லை!" என்று பொரிந்து தள்ளினார்.

மலை மீது ஏறினோம்.

மலைமேல் இருப்பது முக்தா ஜலேஸ்வரர் கோயில். வருடத்திற்கு ஒருமுறை நடக்கும் மாசி மகத்துக்குக் கூட்டம் எக்கச்சக்கம் வருமாம். சிதைந்த மண்டபங்கள். சுவர்களிலெல்லாம் ஆபாசமான வாசகங்கள். கோயில் மணியை அடிப்பதற்குப் பதில் யாரோ 'அடித்து'க் கொண்டே போய்விட்டார்களாம். லிங்க வடிவில் முக்தா ஜலேஸ்வரர் ஒரு துண்டு வேஷ்டிச் சுற்றுடன் பரிதாபமாகக் காட்சியளித்தார். ஜிலு ஜிலு காற்றைக் கூட அனுபவிக்க மனம் வராமல் வேதனையுடன் கீழே இறங்கினோம்.

இதற்குள் ஊர்த் தலையாரி குப்பன், சென்னைக் கல்லூரி ஒன்றில் படிக்கும் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த வண்ண மாறன், அரிஜன காலனி நாட்டாண்மை ஆறுமுகம் ஆகியோர் நம்மைச் சூழ்ந்து கொண்டார்கள்.

"இந்தக் கல் உடைக்கும் இயந்திரங்கள் (ஒன்பது இருக்கின்றனவாம்; இன்னும் பத்து வரப் போகின்றனவாம்.) இருப்பதால், எங்கள் வீடுகளுக்கு வருகிற கரண்ட் ரொம்பக் குறைந்த வோல்டேஜில்தான் வருகிறது. நூறு வாட்ஸ் பல்பு போட்டால் கூட ஜீரோ வாட்ஸ் பல்பு போல எரியும். அப்புறம் நாங்கள் எப்படிப் படிப்பது?" என்றார் வண்ண மாறன்.

இதற்குள் அரிஜன காலனி நாட்டாண்மை ஆறுமுகமும் தலையாரி குப்பனும் "எங்களுக்கு மலைமேல விடுங்க. எண்பத்து மூன்று குடும்பங்க இருக்கோம். மின்விளக்கெல்லாம் கிடையாது. இருட்டிச்சினா நாங்க வீட்டிலேயே அடைபட்டுக் கிடக்க வேண்டியதுதாங்க. அதோட தலைமுறை தலைமுறையாக இந்த இடத்திலே வாழ்ந்துக்கிட்டிருக்கிற எங்களுக்கு வீட்டுமனைப் பட்டா கூட இல்லீங்க. ஆறு பக்கத்தில இருக்கிற கீழ் அருங்குணம், குருவம்மா பேட்டை, விட்டிலாபுரம் கிராமங்களிலிருக்கிற அரிஜனங்களுக்குப் புறம்போக்கு நிலம் இல்லாததால விலைக்கு வாங்கியே வீட்டுமனைப் பட்டா கொடுத்திருக்காங்க. நாங்கள் மட்டும் என்ன பாவம் செய்தோம்? ஏங்க நீங்க ஏதாவது நல்லது செய்ய முடியுமா?" என்று பரிதாபமாகக் கேட்டார்.

ஊரில் விவசாயம் செய்பவர்கள் மிகவும் குறைந்து விட்டதற்குக் காரணம், மலை உடைக்கும் தொழில் மட்டுமல்ல; சுமார் 255 ஏக்கர் பாசன வசதி கொடுக்கும் அந்த ஊர் ஏரி, கடந்த நாற்பது வருடங்களாகத் தூர் எடுக்காமல் இருப்பதால் தூர்ந்து போய்ப் பாசனத்திற்குத் தண்ணீர் கொடுக்க முடியாமல் போனதும் ஒரு காரணம்.

இப்படி அவர்களின் பொருமலையெல்லாம் கேட்டுக் கொண்டு வந்த எங்கள் கண்களில் அந்த ஊர் மருந்தகத்தின் கட்டடம் கண்ணில் பட்டது. மரக்காணம் ஊராட்சி ஒன்றியத்தால் நடத்தப்படும் அந்த மருந்தகத்தைப் பற்றிக் கேட்டாலே கிராம மக்கள் எரிந்து விழுகிறார்கள். டாக்டர் கிடையாது. கம்பவுண்டர் மரக்காணத்திலிருந்து காலையில் சைக்கிளில் புறப்பட்டு மதியம் இந்த மருந்தகத்துக்கு வந்து, பின்பு மாலை மூன்று மணிக்குக் கிளம்பிப் போய் விடுவார்.

மருந்தகத்தின் உள்ளே சென்று பார்த்தோம். மேஜையின் மீது பிச்சைக்காரன் வைத்திருப்பது போல ஓர் அலுமினியப் பாத்திரம் கன்னங்கரிய நிறத்துடன் இருந்தது. ஊசி ஸ்டெரிலைஸ் பண்ணும் பாத்திரமாம்! பாண்டேஜ் துணி கூடக் கிடையாது. அடிபட்டால், கையில் துணியுடன் வர வேண்டுமாம். அதிர்ஷ்டவசமாக டிஞ்சர் அயோடின் இருந்தால் வைத்துக் கட்டுப் போடுவாராம் கம்பவுண்டர்.

கிராமத்தை விட்டு வரும்போது கல்

உடைக்கும் தனியார் கம்பெனியைச் சேர்ந்த (அரவிந்த் கம்பெனி) ஒருவரைச் சந்தித்து அகதிகள் பெயரில் ஏலம் எடுத்திருப்பதைப் பற்றிக் கேட்டோம். ஆனால் அவரோ, ''எனக்கு எதுவும் தெரியாதுங்க; எல்லாம் சென்னையிலிருக்கும் என் மவனுக்குதான் தெரியும். அவனைக் கேளுங்க!'' என்று சொன்னாலும் கணபதி என்ற இலங்கை அகதியின் பெயரில்தான் தங்கள் கம்பெனி இருப்பதாகவும் இருந்தாலும் அந்தக் கணபதிக்கும் தங்கள் கம்பெனிக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்பதையும் கடைசியில் ஒப்புக் கொண்டார் அவர்.

அவரிடமிருந்து நாங்கள் விடைபெறும் சமயம் அங்கே வந்த வன்னியர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் பரணிதரன், ''ஆமாம் சார், இவருக்கு முன்னாலேயே சொல்கிறேன்... எனக்கொன்றும் பயமில்லை. இந்தக் கம்பெனியை கணபதி என்ற சிலோன் அகதி பெயரில்தான் நடத்துகிறார்கள். இதற்காகக் கனிமவளத்துறை ஆபீஸர்களுக்குக் கணிசமான அளவு லஞ்சம் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் தட்டிக் கேட்ட போது, இந்தக் கோல்மாலை நான் கண்டு கொள்ளாமல் இருந்தால் எனக்கு ஐயாயிரம்ரூபாய் கொடுப்பதாகச்சொன்னார்கள். நான்மறுத்து விட்டேன். இதையெல்லாம் இவரால் மறுக்க முடியுமா?'' என்று எதிரிலிருந்த அவரைப் பார்த்தே சொன்னார். அவர் மூச்சு விடவில்லை!

— ப்ரியன்

(இலங்கை அகதிகள் பெயரால் குவாரிஏலம்எடுக்கப்பட்டகுற்றச்சாட்டு பற்றிக் கடைசியில் கலெக்டரின் கவனத்திற்குக் கொண்டு வந்தது கல்கி. அப்போது, இந்தப் பிரச்னை, இதுவரை தம் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லையென்றும் விசாரித்து ஆவன செய்வதாகவும் கலெக்டர் வாக்களித்தார். கலெக்டரோடு கல்கி கண்ட பேட்டியின் போது, உடனிருந்த முப்பத்திரண்டு ஆபீஸர்களில், கனிமவளத்துறையிலிருந்து வந்திருந்த கே. பாலசுப்பிரமணியன் என்பவரும் ஒருவர். அப்படியிருந்தும் இப்பிரச்னை பற்றி விவாதிக்கப் படும்போது அவர் வாய் திறக்காமலிருந்ததுதான் வியப்பு! — ஆசிரியர்)

ஒரு மினி குற்றாலம்



• மோட்டார் ஓடினால் ஒரு மினி குற்றாலம்தான்!

• வீரப்பன்

'**தெ**ன்னாற்காடு மாவட்டத்திலும் ஒரு குற்றாலம் இருக்கிறது. எண்பதாயிரம் செலவில் கட்டப்பட்டது. சந்தேகமிருந்தால், பண்ருட்டியிலிருந்து சுமார் பதின்மூன்று கி. மீ தொலைவிலுள்ள, எங்கள் கிராமமான கிழக்கு மருதாருக்கு வந்து பாருங்கள்!' என்று சஸ்பென்ஸாக ஒரு கடிதம் எழுதியிருந்தார் அல்லூரைச் சேர்ந்த ரங்கராஜு என்ற வாசகர்.

ஆவல் தாங்காமல் ஓடினோம். ''எங்கே குற்றாலம்?'' என்றபோது, ''இதோ...'' என்று வெகு அமைதியாக எங்களை அழைத்துச் சென்று அந்த ஊரிலிருக்கும் மேல்நிலை நீர்த் தொட்டியைக் காண்பித்தார்கள்.

''என்ன விளையாடுகிறீர்களா?'' என்றோம்.

''விளையாட்டே இல்லீங்க. நல்லாப் பாருங்க. டேங்க் சைடெல்லாம் தண்ணீர் ஒழுகும் தாரைகளும் பாசிகளும் தெரியவில்லையா? மோட்டாரைப் போட்டுவிட்டால் போதும்! டேங்க்கில் தண்ணீர் ஏற, ஏற, டேங்க்கின் எல்லாப் பக்கங்களிலும் சல்லடைக் கண்கள் போலுள்ள சிறுசிறு துவாரங்களில் தண்ணீர் பீரிட்டுக் கொட்டும். சிறுவர்களெல்லாம் 'ஷவர் பாத்' எடுக்கிற மாதிரி வந்து குளிப்பார்கள். அந்தச் சமயங்களிலெல்லாம் இந்த டேங்க் பக்கம் வரும்போது எத்தனை குளிர்ச்சியாக இருக்குமென்கிறீர்கள்! சிறுவர்களுக்கு ஒரே ஆனந்தம்தான்...'' என்றார்கள்.

அந்த ஊரின் பஞ்சாயத்துத் தலைவர் வீரப்பனைச் சந்தித்தபோது, ''கடந்த 82 ஆம் ஆண்டு கட்டப்பட்ட டேங்க்கின் லட்சணம்தான் சார் இப்படி! காண்ட்ராக்ட் எடுத்துக் கட்டியவர், முன்னாள் அமைச்சர் ஒருவரின் மகன். இதற்குமேல் நான் சொல்லாமலேயே நீங்கள் புரிந்து கொள்ளலாம். முதலில் இதைச் சரி செய்வதுதான் என் வேலை!'' என்றார்.



க்ளாக்ஸோ வழங்குகிறது
நாசிலிர்க்கும் ஆரஞ்சுச் சுவை
கொண்ட, உடனடி சக்தி தரும்
தனிச்சிறந்த பானம் !
விட்டமின்-ஸி
செறிந்தது
GLUCON-C
The unique, refreshing instant energy drink with a tangy orange taste.
Ingredients:
Glaxo
விலைமிக்க
சர்க்கரை
சேர்க்கத்
தேவையில்லை
புதிய க்ளூகோன்-ஸி,
க்ளூகோஸ் அடங்கியது.
உங்கள் குழந்தை
சுறுசுறுப்புடன்
துள்ளிவிளையாட, விரைந்து
சக்திதரும் வசதியான
உணவு.
மேலும், விட்டமின்-ஸி
செறிந்தது. விட்டமின்-ஸி
குழந்தைகளின் பற்கள்,
எலும்புகள், திசுக்கள் இவை வளர உதவுகிறது.
நான்கு தேக்கரண்டி க்ளூகோன்-ஸி எடுத்து, ஒரு
டம்ப்ளர் ஐஸ் தண்ணீரில் இட்டுக் கரைக்கவும்.
புத்துணர்ச்சியூட்டும் பானம் தயார்—நாசிலிர்க்கும்
ஆரஞ்சுச் சுவையுடன்; தினம் இருமுறை உங்கள்
குழந்தைக்கு இதைக் கொடுங்கள்.
க்ளூகோன்-ஸி
GLL-1174 R



பரிட்சை நெருங்கிடும் காலம்?
கவனமாக படித்திடும் நேரம்

முழுதும் தயாராயிருந்திட வேண்டிய காலம் **காம்ப்ளான்®** பருக வேண்டிய நேரம்.

காம்ப்ளான்® ஒன்றில்தான் அவனுக்கு தேவையான அதி ஊட்டமளிக்கும் 23 மூலாதார சத்துணவுகள் உள்ளன.

குழந்தைகள், முக்கியமாக பரிட்சைக்கு படிக்கும் காலத்தில், திடமாக இருந்திடுவது அவசியம். அதனால்தான் பரிட்சை நடக்கும் நேரம் காம்ப்ளான் நேரம் என்று அன்னையர் அறிவர்.

உடல் வளர்ச்சியில் பங்கு பெறுவதே புரதம் என்ற சத்துதான். காம்ப்ளானில் குழந்தைகளுக்குத் தேவையான புரதம் (20%) இருப்பது மட்டுமல்ல, அப்புரதம் மிகச்சிறந்த புரதமுமாகும் (பால் புரதம்). அத்துடன், அது குழந்தைகளுக்கு தேவையான அதி ஊட்டமளிக்கும் கார்போஹைட்ரேட்டுகள், கொழுப்புச்சத்து, வைட்டமின்கள், தாதுக்கள் ஆகிய 22 கூடுதல் மூலாதார சத்துணவுகள் கொண்டதாகும்.

துவங்குங்கள் காம்ப்ளான் உங்கள் குழந்தைகளுக்கு—அன்றுடம் இருவேளை. நினைவில் இருக்கட்டும் டாக்டர்களின் சிபாரிசுபெற்ற திட்டமிட்ட உணவு காம்ப்ளான்.

காம்ப்ளான் கிடைக்கிறது, இனிய சுவைகளாம் சாக்கலேட், ஏலக்காய்—குங்குமப்பூ, ஸ்ட்ராபெர்ரியும், சாதா ரகத்திலும்.

குழந்தைகள் மிகவும் விரும்பிடும் சுவைகள்.





884.GLC.11 Tam.

காம்ப்ளான்® — திட்டமிட்ட பரிபூர்ண உணவு



உன்னிடத்தில் நான்

சுஜாதா கதை வசனம் என்றதும் எதிர்பார்த்த கம்ப்யூட்டர் ஏமாற்றாமல் வந்துவிடுகிறது. கதைதான் ராஜ்கபூர் காலத்து முடிச்சு. பிறந்த பிறப்பும், வளர்ந்த வளர்ப்புமா இல்லை திணிக்கப்படும் சூழலா — எது ஒரு மனிதனின் செயல்களை நிர்ணயிக்கிறது என்பது கேள்வி. இரண்டு பணக்கார அண்ணன் தம்பிகளுக்குள் இந்தக் கேள்வியே சவாலாகிறது. பகடைக் காய்களாய் மாட்டுவது இரண்டு இளைஞர்கள்.

இருவரில் தெருவில் அலையும் பிச்சைக்காரனாக அறிமுகமாகும் நேதாஜியிடம் துடிப்பு இருக்கிறது. தள்ளு வண்டியில் உட்கார்ந்து, சிஷ்யன் தள்ளப் பிச்சை கேட்டு வரும் போது, போலீஸ் மடக்குகிறது. 'டேய், நேத்து நொண்டின்னு சொன்னே. இன்னிக்குக் கண்ணு தெரியலேங்கறே... யாரைடா ஏமாத்தறே?' நேதாஜி வண்டியிலிருந்து துள்ளி எழுந்திருக்கிறார். 'அட அண்ணே, என்ன ஆச்சர்யம், என்னால பார்க்க முடியுது... கைகால் அசைக்க முடியுது... நடக்க முடியுது... எங்கே ஓட முடியுதான்னு பார்க்கலாம்' என்று சரேலென்று கிளம்பி ஓடும் போது இருக்கும் குறும்பு, இவர் பணக்கார இடத்திற்குப் போன பின்பும் தொடர்கிறது.

ராத்திரியோடு ராத்திரியாய்க் கிடைத்தவற்றை எல்லாம் கிளப்பிக் கொண்டு திருட்டுத்தனமாய் வீட்டை விட்டு ஓடப் பார்க்க, டிரைவரால் மடக்கப்பட்டு... தன் சேரி சகாக்களையெல்லாம் அழைத்து வந்து வீடியோ காட்டி, வேணுமளவிற்குச் சாப்பாடு போட்டு, அடிக்கும் கும்மாளத்திலும், பின்னால் அலுவலகத்தில் குழந்தைகளை வைத்துக் கொள்ளத் தாய்மார்களுக்கு ஏற்பாடு செய்யும் போதும் ஏழைகளின் மனிதாபிமானம் பரிமளிக்கிறது. சோப்புப் பவுடர் விற்பனையை அதிகரிக்க அவர் போடும் திட்டமும் ஓ. கே.

திடீரென்று பணமும் பதவியும் மனிதர்களும் பறிக்கப்பட்டு, போலீஸில் பொய்க் குற்றம் சாட்டப்பட்டு, மாட்டிக் கொள்ளும் பணக்கார ஷியாமுக்கும் சுவாரஸ்யமான சம்பவங்கள். தடாலடியாக டாக்ஸி பிடித்து பாங்க் போக, அப்புறம் கம்பெனிக்குப் போக, எல்லா இடங்களிலும் முகத்தில் கதவு சாத்தப்பட, நாடக நடிகையின் வீட்டில் தஞ்சம் போய்...

ஒரு கட்டத்திற்கு மேல் கதையில் ஒரு பிடிப்பு இல்லாமல் நழுவிப் போனது பரிதாபம்.

நளினிக்குச் சின்ன போர்ஷன்தான். ஆனால் சொகுசாய்ச் செய்திருக்கிறார்.

ஆரம்பக் கதாநாயகி தேவி லலிதாவிடம் காதல் காட்சிகளில் கெஞ்ச வேண்டியிருக்கிறது: 'கொஞ்சம் கண்ணில எக்ஸ்பிரஷன் காட்டும்மா!'


புது நாயகன் ஷியாமிடமும் மெருகு குறைச்சல்.

தாயன்பனின் இசையில் சில பாடல்கள் இனிமை.

தே. சீனிவாசனும், மலேஷியா வாசுதேவனும் செமை ஜோடி. 'தம்பி லக்ஷ்மணா' — என்று பெரியவர் கூப்பிட 'அண்ணா' என்று சின்னவர், பவ்யமாய் விளைய கலகலப்பு.

அமெச்சூர்த்தனத்தை விலக்கியிருந்தால் இன்னும் சுவாரஸ்யமாயிருந்திருக்கும்.

— ஜெயமன்மதன்


காஷ்மீர் ஆட்சி
பரூக்
ராஜீவிடம் எனக்கு நம்பிக்கை இருக்கு! காத்துக் கிடப்பதிலே தப்பில்லே!
ராஜீவ் நாமாவளி
ராமராவ்
இந்த விவேகானந்தர் எப்படித் தான் பாறையிலே தபஸ் பண்ணினாரோ!
ஆந்திர அரசு தலைமைச் செயலக ஊழியர்கள் 'கெரோ'
முதல்வர் திரும்பும் வரை கொள்கை பற்றிய எந்த முடிவும் எடுக்கப்பட மாட்டாது! —தமிழக அரசு அறிவிப்பு—
நான் திரும்பும் வரை அமைதி காத்திடுக!
எங்கே அமைதி இருக்கு?.. குறட்டைச் சத்தம் காதைச் செவிடாக்குது!

கல்கி

1986 செப்டம்பர் 14
மலர் 45 இதழ் 7
அக்ஷய ஆவணி 29



விவேகானந்தர் வேடமும் விவேகமும்

சினிமாப் புகழைப் பயன்படுத்தி அரசியலில் புகுந்து ஆட்சிக்கு வருகிறவர்கள் நாடாள்வது என்பது சினிமா எடுப்பது போன்றதல்ல என்பதைப் புரிந்து கொள்ளாமல் போனால் வம்பை விலைக்கு வாங்கியவர்களாகிறார்கள். கதையே இல்லாமல் படப்பிடிப்பை ஆரம்பிக்கலாம். எடுத்ததை நிராகரிக்கலாம். புதிதாக எடுக்கலாம், 'எடிட்' செய்யலாம். ஆனால் நாடாளும்போது ஒவ்வொரு திட்டத்தையும் பலாபலன்களை ஆழ்ந்து சிந்தித்து அறிவிக்க வேண்டும். அறிவித்த பின் அதில் உறுதியாக நிற்க வேண்டும். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக ஆந்திர முதல்வர் என். டி. ஆர். இந்த அரசியல் அரிச்சுவடியைக் கூடக் கற்றுக் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. மதிய உணவுத் திட்டம் ஒன்றை அறிவித்துப் பிறகு கைவிட்டு விட்டார். தெலுங்கு கங்கைத் திட்டத்தை நிறைவேற்ற முடியாமல் திணறுகிறார். சமீபத்தில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இடஒதுக்கீடுகளை 71 சதத்துக்கு உயர்த்தித் திடீர் அறிக்கை விட்டார்.

ஏற்கெனவே இந்த இடஒதுக்கீடுப் பிரச்னை குஜராத் மாநிலத்தில் எத்தகைய கிளர்ச்சிகளைத் தோற்றுவித்தன என்பதை அவர் யோசித்துப் பார்த்ததாகத் தெரியவில்லை. அதுவாவது போகட்டும், ஆந்திர மாநிலத்திலேயே மாணவரும் பெற்றோரும் இதனை எப்படி வரவேற்பார்கள் என்பதையும் அவரால் கணிக்க முடியவில்லை. அவர் சற்றும் எதிர்பாராத விதத்தில் கடுமையான எதிர்ப்பை அவருடைய அறிக்கை தோற்றுவித்திருக்கிறது. வேடிக்கை என்னவென்றால், 'வருவாய் அடிப்படையில் மட்டுமே இடஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்' என்று தாம் உறுதியாக நம்புவதாகக் கூறிக் கொண்டே சாதி அடிப்படையில் அவர் இடஒதுக்கீட்டை அதிகரித்திருப்பதுதான்!

பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீட்டை அதிகரித்த போதிலும், 'ஒவ்வொரு கல்லூரியிலும் இருபது சதம் மாணவர் எண்ணிக்கையை அதிகரித்து அந்த இடங்களைத் தகுதியின் அடிப்படையில் மட்டுமே பூர்த்தி செய்வேன்' என்று என். டி. ஆர். கூறியது மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் சிறந்த யோசனை என்று தோன்றினாலும் யதார்த்த ரீதியில் பல சிக்கல்களைத் தோற்றுவிக்கும். எழுபது பேர் நெருக்கி அடித்து அமரும் ஒரு வகுப்பறையில் இனி எண்பத்தைந்து பேர் திணிக்கப்படும் போது மூச்சுத் திணறுவது ஒரு பக்கமிருக்க, இவர்களைக் கட்டி மேய்த்துச் சிறந்த முறையில் பாடம் போதிக்க ஆசிரியரால் முடியுமா, அல்லது, பரிசோதனைச் சாலைகளில் உள்ள உபகரணங்கள்தாம் போதுமானவையாக இருக்குமா? மேலும் இந்த அதிகரித்த இடங்களிலும் பிற்படுத்தப்பட்டோருக்கு இடம் ஒதுக்க வேண்டும் என்ற கோரிக்கை சட்டரீதியாக எழாமல் போகுமா?

இடஒதுக்கீடு அறிவிப்புக்கு எதிர்ப்புத் தோன்றிய உடனே, பெற்றோர் — மாணவர் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்களைப் புரிந்து கொள்ள முதல்வர் முயன்றிருக்கலாம். அதையும் செய்யாதபோது பிரச்னை காட்டுத் தீயாக வளர்ந்து அரசுத் தலைமையகம் முன்னர் மாணவ மாணவியர் ஆர்ப்பாட்டங்கள் நடத்தும் நிலைக்கு வர, அவர்களைக் கலைந்து போகச் செய்யும் முயற்சியில் போலீஸார் ஈடுபட, அப்போது சில போலீஸார் மாணவிகளிடம் அநாகரிகமாக நடந்து கொள்ள, இதைப் பார்த்துக் கொண்டிருந்த அரசு ஊழியர்களே வெகுண்டு எழுந்து முதல்வரையே கெரோ செய்திருக்கின்றனர்! ஆத்திரத்தில் முதல்வரின் காரியாலயத்தைக் களேபரமாக்கியும் உள்ளனர்! போலீஸ் கமிஷனருக்கே பலத்த அடி!

''நான் தந்தை மாதிரி, அவர்கள் என் பிள்ளைகள் மாதிரி; நான் அவர்களை மன்னிக்கிறேன்'' என்று என். டி. ஆர். கூறி இருப்பது குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பது போல்தான் தொனிக்கிறது.

விவேகானந்தர் மாதிரி ஒருவர் உடையணியலாம்; வேடப் பொருத்தமும் இருக்கலாம்; விவேகானந்தர் போல நடித்துப் பெயர் வாங்குவது கஷ்டம் என்றாலும் அதைக் கூட ஒருவர் சாதித்து விடலாம்; ஆனால் விவேகானந்தரின் விவேகத்துக்கு எங்கே போக?

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

தமிழ் சினிமாவின் தரம்...

வாசகர் தீர்ப்பு:

தமிழ் சினிமாவின் தரம் உயரவே செய்யாது	51%
தமிழ் சினிமாவின் தரம் உயர்ந்திருக்கிறது	49%

உயரவே செய்யாது: முதல் பரிசு வாதம்

கதாநாயகன், நாயகி, வில்லன், காமெடி ஜோடி, அனுராதா — தோ — டிஸ்கோ சாந்தி, ஸ்டண்ட் பார்ட்டி — எல்லாம் தயாரா?

சரி, வாருங்கள் ஒரு தமிழ்ப்படம் எடுப்போம்! கதை? — அதைப் பற்றி என்ன? நம் திரைக்கதாசிரியர்களிடம் இல்லாத கதையா? காதல், வில்லன், சண்டை இந்த மூன்று அயிட்டங்களை வைத்தே முந்நூறு கதைகள் பண்ணி விடுவார்களே!

ஆக, 'விக்கிரமாதித்தனி'லிருந்து 'விக்ரம்' வரைக்கும் தமிழ்ப் படத்தின் ஃபார்முலா இதுதான்.

இங்கு சினிமாவுக்காகக் கதை 'பண்ணப்' படுகிறதே தவிர, கதையை வைத்துக் கொண்டு யாரும் சினிமா எடுப்பதில்லை.

ஆகவேதான் சினிமா இங்கு வெறும் காட்சிப் பொருளாகத் தோன்றுகிறதேயன்றிக் கலைப் படைப்பாக உயர்வதில்லை.

தமிழ்ப்படங்கள் அதிகபட்சம் வியாபார ரீதியிலும், மிகக் குறைந்த பட்சமே கலானுபவத்திற்காகவும் உருவாக்கப்படுகின்றன.

ஒரு படத்தின் பூஜையன்றே அதன் 'விலை' நிர்ணயிக்கப்படுவதால் பணம்தான் பிரதான நோக்கமாகிறது; தரம் பின்னுக்குத் தள்ளப் படுகிறது.

எனவே, இங்கு பெரும்பாலான படங்கள் 'விநியோகஸ்தர் விருப்பம்' ஆக வெளி வருகிறதேயன்றி, ஒரு 'கலைஞனின் படைப்பாக' உருவாக்கம் பெறுவதில்லை.

அபூர்வமாகச் சில ராகங்கள் சில நேரங்களில் நம் மனத்தை மீட்டுகின்றனவே தவிர, மற்றபடி வெள்ளித்திரை வெறும் வண்ணக் கலவைகளின் வெளிப்பாடாகவே அமைந்து விடுகிறது.



ஆண்டுக்கு முந்நூறு படங்கள் என்பது சாதனையல்ல; தரம் என்ற அளவுகோலால் தட்டிப் பார்க்கும் போது, அவற்றில் எத்தனை தேறும் என்று கணக்குப் பார்த்தால் எண்ணுவதற்கு ஒரு கைவிரல்களே அதிகம்.

சிலுக்கு இல்லையேல் சினிமா இல்லை என்றொரு காலம்; அப்புறம் அனுராதா இருந்தால்தான் ஆயிற்று என்ற நிலை; இப்போது டிஸ்கோ சாந்திகளின் ஸீஸன். அரை குறை உடையணிந்த ஆட்டக்காரிகளே தமிழ் சினிமாவின் தலைவிதியை நிர்ணயிக்கிறார்கள் என்பது பரிதாபத்துக்குரிய விஷயம்.

இந்த நிலை நீடிப்பதை எண்ணிக் கவலைப் படத்தான் முடிகிறது இப்போது; இனி, கர்வப்படும் வகையில் தமிழ்ப்பட உலகில் ஒரு மாற்றம் நிகழ்வது எப்போது?

— குமரி அமுதன், நாகர்கோயில்.

தப்பித் தவறி, தமிழில் விருது பெற்ற படங்களில் கூட நிஜமான திருப்தி இல்லை என்பது கசப்பான உண்மையாகும். அவை கூட வியாபார நோக்கில் காம்ப்ரமைஸுக்கு உள்ளாகி இருப்பது அவற்றைப் பார்க்கும் போது தெரிய வரும். ஒரு சமயத்தில் தொடங்கிய 'கிராமியம்' இன்று வரையில் ஒரு 'டிரெண்ட்' ஆக மட்டுமே இருந்து வருகிறது. தர உயர்வு அதிலும் கேள்விக்குரியதே.

— ஆர்க்கே இராமேஸ்வரன், சென்னை.

'மக்கள் விருப்பம்' என்ற சப்பைக் கட்டுடன் 'பழிக்குப் பழி, காதல், மாமியார் கொடுமை, சின்ன வீடு,' என்று அஞ்ஞான குண்டுச் சட்டிக்குள் சிந்து பாடிக் கொண்டிருக்கும் வரை, கதையும் கருத்தும் இன்றி சதையையும், சம்பவக் கோவைகளையுமே நம்பிப் படங்கள் தயாரிக்கப்படும் வரை, தரங்கெட்ட படங்களுக்கும் திறனாயும் பத்திரிகைகள் உரம் போட்டு உற்சாகப்படுத்தும் வரை, இத்தகைய படங்களை ஆதரித்து வெற்றியடையச் செய்யும் மக்களின் ரசனை மாறும் வரை தமிழ் சினிமாவின் தரம் உயரவே செய்யாது!

— எம். நவமணி, கோயமுத்தூர்.

பணம் இருப்பவரெல்லாம் புரொட்யூசர். விளைவு! பல அரைகுறைப் படங்கள். ஒரு படம் பத்து நாட்கள் ஓடினாலே வெற்றி முரசு கொட்டும்பானர்கள்! இதற்கு ஒத்து ஊதுவது போல் ரசிகர் மன்றங்கள்! படம் வரும் முன்பே பட்டங்கள் அளித்து போஸ்டர்கள் ஒட்டப்படுகின்றன.

— வி. காயத்ரி, திருச்சி.

வண்ணம் மிளிர்கிறது! தொழில் நுட்பம் பளிச்சிடுகிறது — படப்பிடிப்பில், கோப்பில், இயக்கத்தில்! இசையில் கூட இனிமை இருக்

கிறது!

ஆனால் பெரும்பான்மையான படங்களில்: கதை — 0 — !

விழலுக்கு இறைக்கும்நீராக, கதையில்லாப் பட அணிவகுப்பில் திறமைகள் வீண்! வேரில்லா மரங்கள்! அஸ்திவாரமில்லாத கட்டடங்கள்! சக்கரமில்லாத வண்டிகள்!

— ஆர். பி. சாரதி, சென்னை.

'காதல்' என்ற உணர்ச்சி மனிதனுக்குத் தேவையான ஒன்றுதான். ஆனால் அதுதான் 'வாழ்க்கையே' என்பது போலவும், நகைச்சுவை என்ற பெயரால் இரட்டை அர்த்த வசனங்களும்; நடனம் என்ற பெயரில் வேசைத்தனமும் மலிந்துவிட்டன. இத்தனை நாள் போலீஸ் இலாகாவைக் கையாலாகாதவர்களாகக் காட்டி வந்தவர்கள் இப்போது நீதித் துறையையும் அவமதிக்கும் வகையில், படமெடுக்கிறார்கள். மக்களால் மதிக்கப்பட வேண்டியவர்களைப் பற்றி அவதூறான படங்களையும், மக்களால்மறக்கப்படவேண்டியவர்களான சோப்ராஜ், பூலான்தேவி போன்றவர்களை ஹீரோ, ஹீரோயினுக்குகிற படங்களையும் தயாரிக்கிறார்கள்.

— பி. ஆர். ஸ்ரீநிவாஸன், வேலூர் (சேலம்).

உயர்ந்திருக்கிறது;
முதல் பரிசு வாதம்


கதை: சமூக விழிப்புணர்ச்சி, மறுமலர்ச்சி, பெண் உரிமை ஆகியவற்றை விளக்கும் கதைகளே அதிகம் வெளிவருகின்றன. அரசியல்வாதிகளின் அசிங்கங்களையும் அம்பலப்படுத்துகிறார்கள். மறைமுகமாகப் பாடம் புகட்டும் திரைக்கதைகள் உருவாகின்றன. உதாரணமாக விதி, அச்சமில்லை; அச்சமில்லை, நீதியின் மறுபக்கம்...

வசனம்: பக்கம்பக்கமாகவசனம் எழுதிய காலம் போய், தற்போது 'நறுக்'கென்றும் 'சுருக்'கென்றும் வசனம் உள்ளது. சுருங்கச் சொல்லி விளங்க வைத்துத் தமிழ் சினிமாவின் தரத்தை உயர்த்துகின்றனர்.

இசை: பாடல் எழுதுபவர், இசை அமைப்பவர், பாடுபவர் என உட்கார்ந்து மாதக் கணக்கில் ஒரு பாடலுக்கு இசையமைத்துக் காலம் கடத்திய காலம், கடந்த காலம். இப்போதோ ட்யூனுக்குத் தகுந்த சிச்சுவேஷனுக்குத் தகுந்த பாடலை நிமிடத்தில் எழுதி விடுகிறார் பாடலாசிரியர். இசையமைப்பவர் வேறு ஒருவர் குரலை வைத்துப் பாடலை இசையமைத்து விடுகிறார். பாடகர் வந்து அதைப் போட்டுப்பார்த்துத் தமது குரலின் இனிமைக்குத் தகுந்த மாதிரி பதிவு செய்து விடுகிறார். ஒருவருக்காக இன்னொருவர் காத்திருக்கும் காலம் கடந்துவிட்டது. இப்போது கம்ப்யூட்டர் இசையைக் கூட இளையராஜா 'புன்னகை மன்னன்' படத்துக்கு அமைக்கிறாரே!

பாடல்கள்: திரை உலகில் இன்ஸ்டண்ட் பிரம்மாக்கள் இவர்கள்தான். 'அம்'மென்றால் ஆயிரம்பாடல்களை இலக்கிய நயத்துடன் தரத்தயாராய் இருக்கிறார்கள். வைரம்பாய்ந்த வார்த்தைகளாகவும் அதே சமயம் முத்தான





பாடல்களாகவும் அமைந்து விடுகின்றன.

ஒலிப்பதிவு: ''பரிமாறுபவர்கள் நன்ருகத் தங்கள் பணியைச் செய்தால் புளியம் இலேயில் கூடச் சாப்பிடலாம்'' என்று சொல்வார்கள். ஒலிப்பதிவு ஒழுங்காக அமைந்தால்தானே வசனமும் பாடல்களும் கரவொலி பெற முடியும்! இப்போது தமிழ் சினிமாவில் ஊசி விழும் ஓசை கூடத் துல்லியமாகக் கேட்க முடிகிறதென்ருல் அதுவே இத்துறையின் தரத்துக்குச் சான்று. ரீரிகார்டிங் டாப்.

ஒளிப்பதிவு: மூன்ருவது கண்ணுகிய காமிராக் கோணங்கள் மூலம் பார்க்கும் போது கோணலும் ஒரு மாடல் ஆகிறது. தற்போது வரும் ஜூம் ஷாட்டுகளும் மாஸ்க் ஷாட்டுகளும் மனத்தை மயக்கவே செய்கின்றன. வண்ண ஒளிப் பதிவு வளமான முன்னேற்ற மடைந்துள்ளது.

எடிடிங்: பாலே மட்டும் பிரித்தெடுக்கும் அன்னப் பறவையின் பணிக்கு ஒப்பானது. இப்பணியில் பல நவீன உபகரணங்கள் வந்து தரத்தை உயர்த்திவிட்டன. தமிழ் சினிமா 'ட்ரிம்மாக'க் காட்சிதர எடிட்டரின் கையும் கத்தரிக்கோலும்தான் உதவுகின்றன.

மேக்கப்: மேக்கப்பில் திறமையும் தரமும் கூடியிருக்காவிட்டால் தமிழ்த் திரை எப்போதோ 'பேக்கப்' செய்ய வேண்டிய நிலேக்கு உள்ளாகியிருக்கும்.

டைரக்ஷன்: போட்டோவுக்குமாலே அணிவித்தல் மூலம் இறப்பு நிகழ்ச்சியைச் சுருக்கமாக விளக்கி விடுகிருர்கள். இப்படி எத்தனேயோ நுணுக்கங்கள். முன்போல காட்சிகளே விரிவாகக் காட்டாததால் எத்தனே ரீல்கள் மிச்சப்படுகின்றன! இசை, பாடல், வசனம், ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு ஆகிய எல்லாத் துறைகளேயும் ரிங்மாஸ்டர் போலத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருகிறவர் டைரக்டர். கதாநாயகன் அல்லது நாயகியைச் சார்ந்து படம் ஓடிய காலம் போய் இன்று டைரக்ஷன் சிறப்புக்காகப் படம் ஓடுகிற காலம் வந்திருப்பதே தமிழ் சினிமாவின் தரம் உயர்ந்துதான் இருக்கிறது என்பதை நிரூபிக்கிறதே!

— சி. ஆர். நாகராஜன், வளவனூர்.

வாழ்க்கையில் உயர்ந்து கொண்டே போகும் மனிதனே ''ஹி நெவர் டர்ன்ஸ் பேக்'' என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். தமிழ் சினிமாவின் தரத்திற்கும் இந்த வாக்கியம் பொருந்தும். அவ்வப்பொழுது சில சூப்பர் கலேஞர்களின் கற்பனேக் கருவில் ஜனித்த திரைப்பட முத்துக்களால், தமிழ் சினிமா தான் எத்தனே புதிய பரிமாணங்களேப் பெற்றிருக்கிறது. ஆகவே தமிழ் சினிமா பின்னேக்கவில்லே என்றுதான் கூற வேண்டும்.

மேற்கூறிய சூப்பர் கலேஞர்களேத் தமிழ் சினிமாவின் டிரெண்ட் ஸெட்டர்கள் என்று கூறலாம். தமிழ் சினிமாவின் ஒப்பனேத் துறையிலிருந்து, விளம்பரத் துறை வரை சகல பிரிவிலும் இந்த டிரெண்ட் ஸெட்டர்கள் உருவானதின் பொருட்டு, வெள்ளித் திரை முழுவதும் புதிய அணுகுமுறைகள் வியாபித்துள்ளன.

— ராமாபுரம் சந்துரு, சென்னே.

1985 ஆம் ஆண்டிலே தமிழ்த் திரைப் படங்களுக்குக்கிடைத்த அகில இந்தியவிருதுகள் நான்கு. இது ஒன்றே போதும் தமிழ்த் திரைப்படத்தின் இன்றைய இமாலய வளர்ச்சி. அது மட்டுமல்ல அத்தகைய வளர்ச்சியின் அம்சங்களேப் பெற்ற முதல் மரியாதை, சிந்து பைரவி, பூவே பூச்சூடவா இவற்றுக்கு மக்களின் ஏகோபித்த ஆதரவும் படங்களின் வளர்ச்சியோடு ரசிகர்களின் ரசனே வளர்ச்சியையும் உணர்த்தும்.

— மு. ச. நாதன், பொறையார்.

சமீப கால டெக்னிகல் வெற்றிப் படம் எனக் கருதப்படும் ''விக்ரமை'' அகில இந்தியாவிலும் பத்திரிகைகள் பாராட்டியுள்ளன— அந்தத் தொழில் நுணுக்கங்களுக்காக. ''இந்தப் படத்தில் இடம் பெற்றிருக்கும் தொழில் நுட்பங்கள் உலகத் தரத்திற்கு ஒப்பானது'' என்று ''ஊமை விழிகளே'' ஹிந்து பாராட்டியுள்ளது. முன்பு ஒரு படம் வெற்றி பெற்ருல், அந்தப் படத்தில் நடித்த நடிகர்கள் மட்டுமே பிரபலம் அடைந்தார்கள். ஆனல் இன்று அந்த வெற்றிப் படத்தின் தொழில் நுட்பக் கலேஞர்களும் புகழ் பெறுகிருர்கள் என்பதே பெருமைக்குரியது.

— பால்ராஜ், சென்னே.

முற்றிலும் புதுமுகங்கள் நிறைந்த பாலேவனச் சோலே, மாறுபட்ட கதையம்சம் கொண்ட மூன்ரும் பிறை, பதினறு வயதினிலே, முதல் மரியாதை போன்ற படங்களின் வெற்றி தமிழ் ரசிகனின் வளர்ச்சியையும் தமிழ்ப்படங்களின் தரத்தையும் சந்தேகத்திற்கு இடமில்லாமல் பறைசாற்றுகின்றன. 'அச்சமில்லே, அச்சமில்லே' 'ஓர் இந்தியக் கனவு' போன்ற திரைப்படங்கள் மிருணுள் சென், ரித்விக் காடக் இவர்களின் பாதையைத் தமிழகத்தில் அறிமுகப்படுத்தின என்ருல் மிகையாகாது.

— எஸ். பிரியதர்சினி, மதுரை.

இருபது முப்பது என்று கணக்கு வழக்கில்லாத பாடல்கள். இருபதுக்குக் குறையாத ரீல்கள். மூன்றரை மணி நேரத்திற்கு மேல் படம் பார்க்க வந்தவர்களே நாற்காலியோடு இறுகப் பிணேத்து ஜாலம் காட்டிய அந்தக் காலத்துத் திரைப்படங்கள்.

குறைந்த எண்ணிக்கையிலான பாடல்கள். நறுக்குத் தெறித்தாற் போன்ற உரையாடல்கள். இப்படி இரண்டு மணி நேரத்திற்குள் கதையைச் சொல்லி முடித்து 'வணக்கம்' சொல்லும் இன்றையத் திரைப்படங்கள்.

ஒப்பிட்டுப் பார்க்கையில், தரம் உயர்ந்து தான் இருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.

— எல். வத்சலா, கும்பகோணம்.





''மூடநம்பிக்கையை எதிர்த்து நீங்க பிரமாதமாக் கட்டுரை எழுதி இருந்திங்க!''

''அப்படியா! உடனே எனக்கு திருஷ்டி கழிச்சுப் போடணும்! நேற்று இப்படித் தான் ஒருத்தர் புகழ்ந்தாரு. விரல்லே அடி பட்டுது!''

— கே. எம். சம்சுதீன்

''தலைவர் எந்த மேடையிலே பேசினாலும், 'இது என் தொகுதி! என் ஊர்!' அப்படின்னு பேசறுரே!''

''சரியான டியூப்லைட் நீ. இதெல்லாம் சட்டுன்னு புரிஞ்சுக்க வேண்டாமா? எங்கெல்லாம் அவருக்குப் பினாமி சொத்திருக்கோ அதெல்லாம் அவர் 'தொகுதிதான்! அவர் ஊர்தான்!''

— கே. எம். சம்சுதீன்

''எந்த விஷயத்தைப் பற்றியும் நானும் என் மனைவியும் விவாதித்துத் தனித்தனியா முடிவு எடுப்போம்!''

''எந்த விஷயம் பற்றி?''

''வீட்டுச் செலவு, இதர வீடு சம்பந்தப்பட்ட சில்லறை விஷயங்களை என் மனைவி முடிவு செய்வாள். அஸ்ஸாம் பிரச்னை, இலங்கைப் பிரச்னை போன்ற பெரிய விஷயங்களை நான் முடிவு செய்வேன்!''

— லலிதா செல்லப்பா



''ச்சே... சாப்பாடா இது... ஒரே கல்லாயிருக்கு... மனுஷன் எப்படிய்யா தின்னுவான் இதை?''

''அதிருக்கட்டும். உன்னை உன்னை எதுக்காகத் தள்ளிருங்கன்னு சொல்லு...?''

''அதுவா? அரிசியில் கல்லைக் கலப்படம் செய்து வியாபாரம் செய்த குற்றத்துக்காக!''

"அவர்களை நினைத்தால் அக்கினி ஆகிறேன்!"

* இலகவதி குமாரனின் பேட்டி மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது. இந்த அதிகாரியின் கட்டுப்பாடும், துணிவும்தான் அரசியல்வாதிகளை இவர் வேலையில் தலையிட விடாமல் தடுத்திருக்குமோ?

சென்னை — 40, பி. பாஸ்கரன்.

* இலகவதி பேட்டி படித்தேன். சிறப்பாக இருந்தது. ஆனால் ஒன்று: 'விஜிலென்ஸ் செல்' என்பது தமிழ் நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் நடத்துவது. கார்ப்பரேஷன் என்று அவர்கள் குறிப்பிட்டதைத் தாங்கள் மாநகராட்சி என்று மொழி பெயர்த்து எழுதியுள்ளீர்கள். இது தவறு.

சென்னை — 20, எம். ஆர். கிருஷ்ணன்.

* "அடுப்பு ஊதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு?" எனச் சொல்பவர்கள் கல்கியின் (31.8.86) அட்டைப் படத்தைப் பார்த்தால் மூர்ச்சையாகி, தலைசுற்றிக் கீழே விழுந்து விடுவார்கள்.

திருச்சி — 3, ராஜேந்தர்பிரியன்.

* பணத்திற்காக ஓர் அப்பாவியை ஏமாற்றி அவன் சிறுநீரகங்களில் ஒன்றை எடுத்து ஒன்றரை லட்சத்திற்கு விற்ற ஈவு இரக்கமற்றவர்களைப் பற்றி நினைக்கும் போது, ரத்தக் குழாய்கள் அக்கினித் திராவகக் குழாய்களாக மாறுவதைப் போன்ற உணர்வு ஏற்பட்டது.

காங்கயம், ஜி. பாரதி.

* புதுச்சட்டை துணுக்கு சித்திரக் கதையாய் வரையப்பட்டிருந்த விதம், ஒரு நல்ல பாடமாய் அமைந்திருந்தது!

பெங்களூர் — 16, டால்ரிக்ஸ்.

* அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி முடிவில் பிரசுரத்துக்கு ஏற்கப்பட்ட கதைகளில் உத்தமச் சோழன் என்ற செல்வராஜ் அறிமுக எழுத்தாளர் எனக் குறிப்பிட்டு இருக்கிறீர்கள். அவர் அறிமுக எழுத்தாளர் இல்லை. ஏற்கெனவே குங்குமம் இதழில் அவருடைய சிறுகதை பிரசுரமாகி உள்ளது.

கட்டிமேடு, ஜெ. பிஸ்மி.

(விசாரித்ததில் வாசகர் பிஸ்மி எழுதியுள்ளது சரி என்று தெரிய வருகிறது — ஆ-ர்)

* அண்ணா தி. மு. க. வுக்கு வாக்களிக்கும் மக்களுக்கு வழக்கமாகச் 'சாபம்' கொடுத்தே பழக்கப்பட்ட தாங்கள் இந்த வாரத் தலையங்கத்தில் அவர்களை மன்னித்து விட்ட பெருந்தன்மையைக் கண்டு பூரித்துப் போனோம்.

சென்னை — 14, ஆர். மணி, எல். ராகவன், வி. சம்பந்தம், எம். கிருஷ்ணன்.

* தற்கால அரசியலின் போக்கைத் துல்லியமாக நடுநிலைமையுடன் கணித்துத் தீட்டியுள்ள தங்களின் தலையங்கமும் அருப்புக் கோட்டை, நெல்லைத் தொகுதிகளின் நேரடி ரிப்போர்ட்டும் மிகவும் அருமை.

விழுப்புரம், ப. சாந்தி.

* நெல்லை, அருப்புக் கோட்டைத் தொகுதிகளின் நிலவரம் குறித்த தங்களின் நேரடி ரிப்போர்ட் அருமைதான் என்றாலும், அதில் ஒரு சிறு பிழை. நெல்லை தொகுதி தி. மு. க. வேட்பாளர் ஏ. எல். சுப்பிரமணியம், "ஜனநாயக முறைப்படி, தேர்தல் விதிப்படி, அமைதியான முறையில், வேட்பாளர்களைச் சந்தித்து ஆதரவு கேட்கிறோம்!" என்று கூறியிருக்கிறார்.

வேட்பாளர்கள் என்ற சொல்லுக்குப் பதிலாக, வாக்காளர்கள் என்ற சொல்தான் இடம் பெற்றிருக்க வேண்டும்.

சைதை, வி. முரளி.

* இளம்பிள்ளை வாதத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவன் விவிலியனின் பரிதாபத்திற்குரிய நிலையைப் படித்தேன். வேதனை அடைந்தேன். அந்தச் சிறுவனின் பெற்றோர்கள் பாராட்டப்பட வேண்டியவர்களே! அவர்கள் அவனை நன்கு படிக்க வைத்து அவனுக்கு நல்லதொரு வாழ்க்கையை அமைத்துக் கொடுத்தால் வெகுவாக முன்னேறுவான். தளராத உள்ளம் உடைய அவனை வாழ்த்துகிறேன்.

குடியாத்தம் — 1, ஆ. சரவணன்.

* கொக்கேய்ன் குழந்தைகள் அனுபவித்துக் கொண்டிருக்கும் பயங்கரமான சித்திரவதையைப் பற்றிப் படித்து மெய் சிலிர்த்துப் போனேன்! ஆண்டவா! இந்தியாவுக்கு இப்படிப்பட்ட குழந்தைகளைக் கொடுத்து விடாதே!

பெங்களூர் — 16, ஏவியார்.

* ஸ்ரீ ராமாநுஜர் கி. பி. 1017 இல் அவதரித்து கி. பி. 1137 இல் பரமபதம் எய்தியிருக்கிறார். ஆக 849 ஆண்டுகளை அறுநூறு ஆண்டு அதிசயம் என்பது தவறாகும்.

ஸ்ரீபெரும்புதூர், ஸ்ரீ வரத எதிராஜ ஜீயர் சுவாமிகள்.

* ஒரு பிஞ்சுக் குழந்தையின் நெஞ்சில் ஆழமாகப் பதிந்து விட்ட சோகத்தை 'சின்னி' பாத்திரத்தின் மூலம் அருமையாக வெளிப்படுத்தியிருந்தார் விவேகி.

அரூர், மு. மதிவாணன்.

* "நடந்தது" சிறுகதையில் பண்டாரம் மங்களூரிலிருந்து பெங்களூருக்கு நடந்து வந்தது நிஜம்தானா, இல்லை வெறும் கப்ஸாவா என்று புரிந்து கொள்ளவே முடியவில்லையே?

நெல்லிக்குப்பம், ஜெ. முகம்மது பாரூக்.

* பம்பாய்த் தமிழர்களின் தெய்வ பக்திக்குச் சான்றாக அமைந்திருக்கும் கோயில்களைப் பற்றிய கட்டுரையைப் படித்தேன்! அவர்கள் அங்கிருந்தபடியே தென்னகத்து ஆலயங்களை அங்கேயே வடிவமைத்து வழிபடுவதைப் பார்க்கும்போது அங்கே பக்திசீலர்கள் அதிகம் என்பது புலனாகிறது. இங்கிருந்தபடியே அங்குள்ள ஆலயங்களைப் பார்க்கச் செய்த உங்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

குடியாத்தம், ஸ்ரீ. சத்ய சாயிபாபா தாசன்

புதிய
மேம்படுத்தப்பட்ட

கேர்:ப்ரீ எக்ஸ்ட்ரா லார்ஜ்

சில பெண்களுக்கு இது தேவை.



இது மிக நீளமான நேப்கின் இது மிக அகலமான நேப்கின் இது மிக தடிப்பான நேப்கின்

கூடுதலான பெரிய சைஸிலே தரமுள்ள நேப்கினின் சுகமும் பாதுகாப்பும் தேவைப்படும் பெண்களுக்கு—இதோ ! புதிய கேர்:ப்ரீ எக்ஸ்ட்ரா லார்ஜ்.


நீளத்தினையும், அகலத்தினையும், தடிப்புத் தன்மையினையும் கூடுதலாகவே பெற்றிருக்கும் இந்த நேப்கினின் நூலிழைகள் உறிஞ்சும் திறன் அதிகமாகப் பெற்று மிகுந்த நம்பிக்கையைத் தருகிறது.

ஒண்டர்ராப் உறைகள் ஈரத்தை உள் அடுக்கிற்குள் செலுத்துவதால் ஈரம் சீராக உறிஞ்சப்பட்டு உலர்வினையும் சுகத்தினையும் உங்களுக்குத் தருகிறது. நாப்கினின் இந்த சிறப்பான டாப்-நுனிகள் சரியாகப் பொருந்த உதவுவதோடு கச்சிதமாகவும் இருக்கிறது.

இப்போது கேர்:ப்ரீ எக்ஸ்ட்ரா லார்ஜில் ஒரு சிறப்பான (ஈரம் கசியாத) 3 வழி நீலநிற பிளாஸ்டிக்-ஷீல்டு—அடிப்புறம் அணைப்புக்கொடுத்து பக்கங்களோடு மேற்புறம் வரை பரவியமைகிறது. படத்தில் நீங்கள் காண்பதுபோல, இவ்வகையில் உங்களுக்கு அதிகப் பாதுகாப்பு, அதிக பத்திரத் தன்மை.

புதிய கேர்:ப்ரீ எக்ஸ்ட்ரா லார்ஜ்—முழுமையான சுகம், முழுமையான பாதுகாப்பு.
கூடுதலான பெரிய சைஸில்.

தேர்ந்தெடுத்த நகரங்களில் மட்டுமே கிடைக்கிறது.






OBM/5784/TM

தவிரவும் கிடைப்பவை: கேர்:ப்ரீ ரெகுலர் 10'கள், 20'கள், 30'கள் அடங்கிய பேக்குகள்.

ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்



பட்டுக்கோட்டை பிரபாகர்

என்னைக் காணவில்லை

7

கவர்ச்சி நடனக்காரிக்குச் சவால் விடும் குலுங்கல்களுடன் ஓடின ஆட்டோவின் உள்ளே, தாடையின் நரம்புகள் அசைய அமர்ந்திருந்த சூசை திடீரென்று சொன்னான்: ''வண்டியை ஓரமா நிப்பாட்டிக்கப்பா. நான் இறங்கிக்கிறேன்.''

''இன்னும் போலீஸ் ஸ்டேஷன் வரலீங்க!''

''இல்லே: நான் அங்கே போகலே. எனக்கு அங்கே நியாயம் கிடைக்காது. நிப்பாட்டிரு.''

ஆட்டோ சாலையோரமாய் நின்றதும் இறங்கிப் பணம் தந்துவிட்டு அருகில் இருந்த சாராயக் கடையை நோக்கி நடந்தான் சூசை. கடை வாசலில் ஊறுகாய் வாங்கிக் கொண்டு உள்ளே போனவனை ஸ்பீக்கரில் 'குடி மகனே' என்று வரவேற்றார் எல்.ஆர். ஈஸ்வரி.

ரெஸ்ட்டாரண்டின் வெளிச்சத்தில் இருட்டு கலப்படமாகியிருந்தது. மடியில் துணி விரித்து, ஸ்பூனில் கட்லெட் கொர்த்தின பிரேமாவை ஆழமாகப் பார்த்தான் எதிர் நாற்காலி அசோக். பானத்தில் ஸ்ட்ரா காத்திருந்தது.

''என்ன அசோக் அப்படிப் பார்க்கறீங்க?'' என்றாள் காதின் வளையங்கள் அசைய.

''பிரேமா, இன்னும் என்னை நேசிக்கிறியா?''

''என்ன கேள்வி இது?''

''பிரேமா, இப்போ கிட்டத்தட்ட நான் பாப்பர். என் சொந்தக் கணக்கு பாங்க் பாலன்ஸ் இன்னும் எத்தனை வாரம் வரும்னு கணக்குப் பார்க்க வேண்டிய நிலைமை.''

''அசோக், எதுவும் ஆய்டாது. உங்கப்பா அப்படி ஒரு நிலைமைக்கு உங்களை விட்டுட மாட்டார். இதிலே அவரோட கௌரவமும் அடங்கியிருக்கு.''

''பிரேம், உனக்கு எங்கப்பாவைத் தெரியாது. வறட்டுத்தனமான பிடிவாதம் உள்ளவர்.''

''இன்னிக்குச் சந்திக்கிறதா சொல்லிட்டு வந்திருக்கீங்க. அதுக்குள்ளே ஏன் பதற்றம்? போய்ப் பாருங்க. நல்ல முடிவா வச்சிருப்பார்.''

பிளாஸ்டிக் தட்டில் பில் வைக்கப்பட்டதும், பிரேமா தன் கைப்பையைத் திறந்ததை அவசரமாகத் தடுத்தான் அசோக்.

''அந்த அளவுக்கு இன்னும் மோச

மாடிடலே பிரேமா'' என்று தன் மணி பர்ஸ் திறந்து கரன்சியை உருவி வைத்தான்.

இருவரும் மௌனமாக வெளியில் வந்தார்கள்.

லாட்ஜின் வரவேற்புப் பகுதியை அடைந்த போது, சூயிங்கம் மென்று கொண்டிருந்த கதிர், கிட்டே வந்து, ''சொல்லு, எப்போ போகலாம் உங்கப்பாவைச் சந்திக்க?'' என்ஜன்.பனியனில் 'NOT NOW BABY'. கால்களில் வடக்கு நட்சத்திரம் ஷூஸ்.

''எக்ஸ்க்யூஸ் மீ' என்ற ரிஸப்ஷனிஸ்ட், ''மிஸ்டர் அசோக், எ கால் ஃபார் யு...'' என்று ரிசீவரைக் கீழே கிடத்திவிட்டு பிரா ஸ்ட்ராப் பனிச் என்று தெரியும் முதுகைக் காட்டிக் கொண்டு லெட்ஜர் புரட்டினாள். இடுப்பில் மடிப்புகள் இரண்டு.

''ஹலோ, அசோக் ஹியர்.''

''வணக்கம் தம்பி. நான் உங்க சித்தி பேசறேன்.''

''சித்தி?''

''உங்கப்பாவுக்கு மனைவின்னா உங்களுக்குச் சித்திதான்.''

''அதாவது எங்கப்பாவோட உயிரைக் காப்பாற்றின வீராங்கனை.''

''கிண்டல் வேண்டாங்க.''

''மாயா, உன்னை எனக்கு நல்லாத் தெரியும்.''

''இப்படிப் பேசறது அழகில்லை தம்பி.''

''சித்திங்கறீங்க. தம்பிங்கறீங்க. ஒரே உறவுக் குழப்பம். ஓக்கே. எதுக்காகக் கூப்பிட்டே? உன் சதித் திட்டத்திலே எனக்கு எதுவும் ரோல் இருக்கா?''

''ஏன் இப்படி எல்லாம் பேசறீங்க? என்னைப் பத்தித் தப்பான அபிப்ராயத்தை நீங்க வளர்த்துக்கிட்டிருக்கீங்க.''

''ஆமாம். விஜய் 17—17—17 ஃ ரம் வேற போடறேன்.''

''தம்பி, நீங்க என்னைப் பத்தி எப்படி வேணும்னாலும் நினைச்சுட்டுப் போங்க. நான் கூப்பிட்டது உங்க நன்மைக்காகத்தான்.''

''அடடே! என்ன அது?''

''நேத்து. நீங்க வந்துட்டுப் போனது. பேசினது எல்லாம் கேள்விப்பட்டேன். உங்க ஆத்திரத்திலே நியாயம் இருக்குங்க. நான் அதைப் பத்தி உங்கப்பாகிட்டே பேசினேன். அவர் பிடிவாதமா உங்களை வெறுத்துப் பேசினார். நான் நியாயங்களை எடுத்துச் சொன்னேன்.''

''யாரு? நீ?''

''கொஞ்சம் உணர்ந்து பேசறார் இப்போ. நீங்க விரும்புறபடி சொத்துக்களிலே ஒரு பகுதியை உங்களுக்கு உடனடியா பிரிச்சுத் தர்றது சம்பந்தமா உங்ககூட பேச விரும்பறார்.''

''லைன்லேயே இருக்கேன்.''

''நேர்ல பேச விரும்பறார்.''

''போனை வச்சிட்டு டாக்ஸி கூப்பிடட்டுமா?''

''மில்லுக்குப் புறப்பட்டுக்கிட்டிருக்கார்.''

''எப்போ வரட்டும்?''

''ராத்திரி ஒம்போது மணிக்கு, சரியா வாங்க. ஒம்பதே காலுக்கு வெளியே புறப்படறார்.''

''பையனுக்கே அப்பாயின்ட்மெண்ட்டா? சரி, வந்துட்டாப் போச்சி.''

''தம்பி, உங்ககூட வேறே யாரும் வர்றதை அவர் விரும்பலே.''

''சந்தோஷம். தனியாவே வர்றேன். அதே மாதிரி நான் அவர்கூட பேசறப்போ பக்கத்திலே வேறே யாரும் இருக்கிறதை நானும் விரும்பலே.''

''இருக்க மாட்டேன்.''

''வேறே?''

''என்னைப் புரிஞ்சுக்கங்க தம்பி.''

''அவசியமே இல்லே'' என்று வைத்தான் அசோக்.

கதிரும் பிரேமாவும் ஆர்வமாய் அவனைப் பார்க்க, ''ரூமுக்குப் போய்ப் பேசுவோம்'' என்று அசோக் நடந்து, அவர்கள் தொடர்ந்து.....

''நோ! இந்த அழைப்பில் ஏதோ சதி இருக்கு'' என்றாள் பிரேமா.

''எனக்கு எதுவும் தென்படலே'' என்றான் கதிர்.

கிளாசில் தண்ணீர் சரித்துக் கொண்டே அசோக், ''என்ன சதி பிரேம்?'' என்றான்.

''அது ஏன் ராத்திரிக்கு?''

''அப்பத்தான் அப்பா ஓய்வா இருப்பார்.''

''அது ஏன் தனியா வரணும்?''

''பர்சனல் விஷயத்தை பர்சனலாவே முடிச்சுக்கத்தான்.''

''அசோக், எனக்கு என்னமோ பயமா இருக்கு.''

''என்ன பயம்?''

''உங்கப்பாவைச் சுத்தி சில மர்மங்கள் நடந்துக்கிட்டிருக்கு. திடீர்னு ரெண்டாம் கல்யாணம். திடீர்னு உயில். வரவேற்பிலே துப்பாக்கிச் சூடு. இப்போ நீங்க வெறுக்கிற மாயா மூலமா ராத்திரிக்கு ஒரு தனிமைச் சந்திப்புக்கு அழைப்பு. அசோக், நானும் வர்றேன்.''

''சேச்சே, வேணாம். என் வீட்டுக்கு நான் போறதுக்கு யாரோட துணை தேவை? நீ பயப்படற மாதிரி இதிலே எதுவும் இருக்கிறதா எனக்குப் படலே. நான் போய்ட்டு வந்து நாளைக்கு உங்க ரெண்டு பேரையும் காண்டாக்ட் பண்றேன்.''

அந்த அறையில் ஒரு குள்ள மேஜை இருந்தது. அதில் லேஸ் வைத்துத் தைத்த மெனி தான விரிப்பு இருந்தது. அதன் மேல் பிராஸ்லோ போட்டுப் பளபளப்பாக்கப்பட்ட பித்தளைப் பூக்கிண்ணம் இருந்தது. அதில் சிவப்பு, நீலம், மஞ்சள், பச்சையில் பிளாஸ்டிக் மலர்கள் செருகப்பட்டிருந்தன. அந்த மலர்களின் நடுவில் புதைக்கப்பட்டிருந்த சிறிய வயர்லெஸ் மைக்ரஃபோன் விழிப்புடன் இருந்தது.

அறைக்கு வெளியே வராந்தாவில் கூலிங் கிளாஸ் அணிந்து, சிகரெட் புகைத்த தாமஸின் அரைக் கோட்டின் உள் பாக்கெட்டில் செருகப்பட்டிருந்த சிறிய டேப் ரிக்கார்டரின் கேஸட் மெதுவாகச் சுழன்று

கொண்டிருந்தது — மௌனமாக.

டேப்பை அணைத்தான் சுகுமார்.


''சபாஷ் தாமஸ். அப்போ ஒம்போது மணிக்கு அசோக் மட்டும்தான் தனியா வரப் போறான்.''

''அதிலே சந்தேகமே வேணாம் சுகுமார்'' என்ற தாமஸ் குடித்துவிட்டு வைத்திருந்த பிராந்தி கிளாசில் நெருப்புக் குச்சி கிழித்துப் போடக் கொஞ்சமாய் இருந்த ஆல்கஹால் பக் என்று எரிந்தது.

''வெரிகுட். இப்போ நம்ம செட்டப்பை ஒரு தடவை நினைவுபடுத்திக்கலாமா?''

''எனக்கு மறக்கலே.''

''இருந்தாலும் பரவாயில்லே, கேளு. ஆர்த்தோஸ்பெஷலிஸ்ட் சங்கரநாராயணன் கிட்டே இன்னிக்கு ராத்திரி எட்டு நாப்பத்தஞ்சுக்கு மாயாவுக்கு அப்பாயிண்ட்மெண்ட் வாங்கிட்டேன். நாகராஜன் பங்களாவுக்கு நான் எட்டு மணிக்குப் போறேன். சாதாரணமா பேசிக்கிட்டிருக்கேன். எட்டரை மணிக்கு மாயாவை அழைச்சுக்கிட்டு டாக்டர் கிட்டே நான் போறேன் கார்லே. அப்போ வீட்ல நாகராஜன் மட்டும்தான் இருப்பார்.



சமையல்காரன், கணேசன், டிரைவர் எல்லாரும் ஏழு மணிக்கே வீட்டுக்குப் போயிடறுங்க. வாட்ச்மேன் சுந்தரம் மட்டும் இருப்பான் கேட்டுக்கிட்டே. அவன் கூண்டிலே. இவன்தான் நம்ம முக்கியமான சாட்சி. நீ எட்டரை மணிக்குப் பங்களாவோட பின் பக்கத்திலே இருக்கணும். எங்க கார் புறப்பட்டுப் போறதுதான் உனக்கு சிக்னல். உடனே நீ காம்பௌண்ட் தாண்டிப் பின் பக்கம் வர்றே. பின் பக்கக் கதவை மாயா ஏற்கெனவே திறந்து வச்சிருப்பா. நீ சுலபமா ஹாலுக்கு வந்து நாகராஜனோட ரீடிங் ரூமுக்குள்ளே நுழையறே. அப்புறம்....''

''போதும் சுகுமார். எனக்கு எதுவும் ஒரு தடவை சொன்னாப் போதும். நாகராஜனை முடிக்கிறேன். இன்டர்காமோட ரிசீவரைத் தனியா எடுத்துத் தொங்க விடறேன். கதவைச் சாத்தி வச்சுட்டு, பின்பக்கக் கதவைத் தாப்பா போட்டுட்டு நேரா நாகராஜனோட பெட்ரூம் போய் அங்கேர்ந்து ஜன்னல் வழியா நம்ம ஹீரோ அசோக் வர்ற வரைக்கும் காத்திருக்கேன். வந்ததும்....''

''வெரிகுட். உனக்கு மறதி கிடையாது. ஒத்துக்கறேன். ஆனால் உன் குரல்தான் இன்னும் லேசா பிசிரடிக்கிது.''

''என்ன சுகுமார் இப்படிச் சொல்லிட்டே. நம்ம டயலாக் என்ன? 'சுந்தரம் அய்யோ... என்னைக்காப்பாத்து.....அய்யோ' இதானே?''

''ஆமாம்.''

''இதையே அறிஞர் அண்ணா பேசற மாதிரி பேசறேன் கேளு.''

தாமஸ் ஒரு கையால் தொண்டைக்கு அணைப்பு கொடுத்துப் பேசினான்.

''நம்ம முதலமைச்சர் மாதிரி பேசட்டுமா?''

''அதுவா முக்கியம்?''

''ரைட். இப்போ கவனி. சுந்தரம். அய்யோ... என்னைக் காப்பாத்து... அய்யோ!''

''பர்ஃபெக்ட்! அப்படியே நாகராஜன் குரலேதான் இது. கொன்னுட்டே தாமஸ்.''

''இன்னும் இல்லை சுகுமார். அந்தச் செயல் ராத்திரிக்குதான்.''

''சம்பவம் நடக்கிறப்போ நான் கிளினிக்ல சயன்ஸ் டைஜஸ்ட் படிச்சிட்டிருப்பேன். மாயாவோட காயம்பட்ட புஜத்திலே பிராக்சர் எதுவும் உண்டான்னு டாக்டர் சோதனை செஞ்சிக்கிட்டிருப்பார். அசைக்க முடியாத அலிபி!''

''கவலையே வேணாம். கச்சிதமா முடிஞ்சிடும் எல்லாம்.''

''சுந்தரம் ஓடி வந்து ஒரு குழப்பமான காட்சி உருவாகும்போது நீ சாமர்த்தியமா தப்பிக்கிற அந்த டெய்ல் பார்ட்லதான் கவனம் அதிகம் வேணும் தாமஸ்....''

''சுகுமார், நான் யாரு?''

''யாரு?''

''சூப்பர்மேன்'' என்று சிரித்தான் தாமஸ்.

இந்த எழுத்தின் நிறத்தில் வானம். மரங்களைப் பிடுங்கும் முயற்சியில் காற்று ஈடுபட்டிருக்க.... கொக்கி போடாத ஜன்னல்கள் கை தட்டிக் கொண்டிருந்தன. புற்கள் மோகினியாட்டம் பழகிக் கொண்டிருக்க... நாகராஜன் புல்வெளியில் இருந்த ஊஞ்சலில் அமர்ந்து தம் நாய்க்கு பிஸ்கெட் எறிந்து கொண்டிருந்தார்.

மாயா வந்து, ''என்னங்க காத்து இப்படி அடிக்குது. அசையாமல் உக்காந்திருக்கீங்களே, உள்ளே வாங்க'' என்றாள்.

நாகராஜன் மணிக்கட்டைப் பார்த்து, ''ஏழரை ஆச்சா? கணேசனை அனுப்பிடலாமே....'' என்றார்.

''அனுப்பிட்டேங்க, வாங்க.''

மாயாவின் தோளில் கை போட்டுக் கொண்டு உள்ளே நடந்தார் நாகராஜன்.

''ஒம்போது மணிக்கு அசோக் வருவாருங்க. நான் கூட இருக்கிறது அவருக்குப் பிடிக்கலை. தவிர அண்ணன் என்னை ஆர்த்தோ டாக்டர்கிட்டே அழைச்சிட்டுப் போறேன்னு சொல்லிச்சு. நீங்களே பேசிடுங்க, என்ன?''

''பேசிப் பிரயோஜனமில்லை மாயா. உன் திருப்திக்காகப் பேசிப் பார்க்கிறேன். எனக்குக் கொஞ்சம் கணக்குகள் பார்க்கணும். ரீடிங் ரூமிலே இருக்கேன். யாராச்சும் வந்தா தொந்தரவு பண்ணாதே. டாக்டர் கிட்டே போறப்போ சொல்லிட்டுப் போ. நீ திரும்பி வந்ததும் சேர்ந்து சாப்பிடலாம். அடடா, டிரைவரைப் போகச் சொல்லிட்டேனே....''

''பரவாயில்லைங்க. அண்ணன் தான் வருதே. அது ஓட்டும்.''

''நானும் வேணும்னா கூட வரவா, மாயா?''

''இல்லை, வேணாங்க.''

நாகராஜன் குளிர் செய்யப்பட்ட ரீடிங் ரூமுக்குள் நுழைந்ததும் மாயா இன்டர்காம் எடுத்து எண் அழுத்தி, ''சுந்தரம் நேத்து எங்கண்ணன் வந்தப்போ யாருன்னு கேட்டியாமே. கொஞ்ச நேரத்திலே வரும். மறுபடி கேட்டுட மாட்டியே?'' என்றாள்.

''மன்னிச்சுக்கங்கம்மா. அடையாளம் தெரியாம கேட்டுட்டேன்'' என்றான் கேட் அருகே கூண்டுக்குள்ளிருந்து சுந்தரம்.

''அய்யா முக்கியமான வேலையா இருக்கார். இன்னிக்கு இனிமே யார் வந்தாலும் அனுமதிக்காதே — ஒருத்தரைத் தவிர. ஒம்போது மணிக்கு அசோக் வருவார். அவரைத் தவிர வேறே யாரா இருந்தாலும் அய்யா ஊர்ல இல்லைன்னு சொல்லிடு.''

''சரிங்கம்மா.''

ஹாலில் சோபாவில் அமர்ந்து மாயா சுகுமாருக்காகக் காத்திருக்க..... பங்களாவின் பின்புறத்தில் செல்லும் சாலையில் தாமஸ் நேரம் நகரக் காத்திருக்க.... எட்டேகாலுக்குத் தன் அறையை விட்டுப் புறப்பட்டான் அசோக்.

(தொடரும்)

வளரும் குழந்தைகளுக்கு சுவையான
துணையாக விளங்கும் பால் பிஸ்கட்





சத்துமிகுந்த, சுவையான பிஸ்கட்.

பிரிட்டானியா

LINTAS BIN MB 12 2517 TM

நினைவுகள் நெஞ்சோடு தான்

நா. நாகராஜன்



வந்ததிலிருந்து அம்மாதான் பேசிக் கொண்டிருக்கிறாள்.

"நீ ஆபீஸராக அஸ்ஸாமிற்கு மாற்ற லாகிப் போய் இப்போ ரெண்டு வருஷம் கழிச்சுத் திரும்பி வந்திருக்கே. இந்த இடைப் பட்ட காலத்துல என்னல்லாமோ மாற்றம் இந்த மெட்ராஸ்ல! ஆனா எல்லாத்தையும் விட ஆச்சரியம் நம்ம லதா, அதான் உன் ஃப்ரெண்ட் பெரிய சினிமா ஸ்டார் ஆனது.. ஏ... அப்பா... கப்பல் மாதிரி கார்ல போறா! புதுசா பங்களா கூட வாங்கப் போறாளாம்! நீயும்தான் ஆபீஸராகி என்னதான் சம்பா திச்சாலும் ஆயுசுக்கும் சேர்த்துக்க முடியுமா?

அம்மாவின் குரலில் தொனித்தது ஆதங் கமா ஆச்சரியமா என்று தெரியவில்லை.

அவன் டில்லியிலிருந்து வாங்கி வந்த மோடாக்களும், அப்பாவுக்கு காஷ்மீர் சால்வைகளும் தங்கைக்கான நாலு பவுன் நகையும் லதாவின் சம்பாத்தியத்தின் முன் ஒன்றுமில்லாமல் போனது.

"நீ ஒரு நடை போய்ப் பார்த்துட்டு வா ரகு... முன்னால ஃபோன் பண்ணி எங்கேஜ்



மெண்ட் பிக்ஸ் பண்ணிக்கோ. உன்னோட ஒண்ணு கேரம் விளையாடின பொண்ணு; ஒண்ணு பேங்க் எக்ஸாம் எழுத வந்த பொண்ணு; பக்கத்து வீட்டில பல வருஷமாப் பழகின பொண்ணுதானேங்கற அலட்சியத்துலே போகாதே... கூர்க்கா விரட்டிடுவான்...'' அம்மா விளையாட்டாக எச்சரித்தாள்.

இவர்களுக்குத் தன் வருகை தந்த ஆச்சரியத்தையும் சந்தோஷத்தையும் விட அவளைப் பற்றிப் பேசுவதில்தான் சந்தோஷம் அதிகம் போலும்!

அல்லாமில் ஆபீஸில் வைத்து யதேச்சையாகத்தமிழ்ப்பத்திரிகைகளைப்பார்த்தபோது லதாவின் படம்... ஒரு சினிமா விளம்பரத்தில்! நம்ப முடியாமல் தவித்த போது, படம் ரிலீசாகி விமர்சனத்தில்... சினிமாச் செய்திகளில்...

பிரபல இயக்குனரின் மண்வாசனையான படத்தின் கிராமிய நாயகியாய் ஒரு படம், காதல் இளவரசனுடன் ஒரு படம்; சூப்பர் ஸ்டாருடன்ஒரு படம். பிறகு நடிப்பின்இமயத்துடன் நடிப்புக்கு ஈடு கொடுத்து...

இரண்டு வருஷங்களில் பதினறு படங்கள்! பத்து சில்வர் ஜூப்ளிகள்...

அப்பப்பா... வானம் அதிக தூரமில்லே!

புகழின் உச்சியில் லதா!

அந்தக்குடும்பப்பாங்கான முகம்; மயக்கும் சிரிப்பு; மாடர்ன் டிரெஸ் சிக்கெனப் பொருந்தும் உடல் வாகு!

''நீ இப்போ லதாவைப் பார்த்தேன்னு அசந்துடுவே! நிறம் கூடியிருக்கு; உடம்பு சதைப் பிடிச்சு பூசினப்ல ஆகி... அப்ஸரஸ் மாதிரின்னு இருக்கா. வெள்ளிக்கிழமை மகாலிங்கபுரம் கோயில்ல சில சமயம் சந்திச்சோம்னு ஒரு நிமிஷம் பேசுவா! அவ்வளவுதான். என்ன பிரமாதமா நடிக்கறுங்கறே...'' அம்மா சொல்லிச் சொல்லி மாய்ந்து போனள்.

ரகுவிற்கும் நிறையப் பேச வேண்டும் போல் இருந்தது.

''அம்மா! பணம் காசு வரலாம். நிம்மதி போயிடும்! ஒழுங்கா வாழமுடியாது. இப்போ எல்லாம் சினி ஃபீல்டு ரொம்ப மோசமாயிடுத்து. சம்பாத்தியம் ஒண்ணுதான் முக்கியம்னு எல்லாரும் நினைக்கறு. இந்தச் சமுதாயத்தின் சிந்தனையையே சினிமா மாத்திடுத்து. இப்போ குடும்பப் பெண்கள் கூட, லட்சம்ரூபா குடுத்தா எப்படி வேணும்னலும் நடிக்கத் தயாரா இருக்கா. அதைவிட, வாழ்க்கை முக்கியம் இல்லையாம்மா! மானம் முக்கியம் இல்லையா...? அம்மாவிடம் கேட்டால் அதற்கும் பதில் வைத்திருப்பாள்.

அவனுக்கே லதாவை ஒரு தடவை பார்க்க வேண்டும் போலிருந்தது.

''நானும் வர்றேன்னு...'' என்றாள் ஜானு.

''வேண்டாம் ஜானு. இன்னொரு நாள் ரெண்டு பேரும் போவோம். இப்போ பெர்சனலா நான் அவகிட்டே பேசணும்...'' என்றான்.

''இனிமே உங்க ரெண்டு பேருக்கும் என்ன பெர்சனல் மேட்டர் இருக்க முடியும். அடுத்த தடவை அவ உன்னைச் சந்திக்க அப்பாயிண்ட்மெண்ட் தர்றுளோ... என்னவோ...'' என்றாள் ஜானு! அண்ணனை மடக்கிவிட்ட திருப்தி!

''இருக்கட்டும் ஜானு! என்னை ஒரு தடவையாவது சந்திக்கச் சம்மதிச்சாள்ன அவகிட்ட தனிப்பட்ட முறைல நிறையக் கேக்கணும் ஜானு...''

''என்ன கேப்பே, தெரியாதா? 'என்னை மறந்துட்டியா' ன்னு கேப்பே...' ஏன் சினிமால நுழைஞ்சே' ன்னு கேப்பே... 'இப்பவும் நான் உன்னை மறக்கலே, எங்கூட வந்துடறியா'ன்னு கேப்பே...''

ஜானுவின் நேரடித் தாக்குதலை அவனல் சமாளிக்க முடியவில்லை.

அவனைச் சரியாக அடையாளம் கண்டு விட்டாள்.

''ஆமாம் ஜானு. அதேதான்.''

''அது அவ யோகம் ரகு! சுக்கிர தசை! நீ நினைக்கிறது மிடில் கிளாஸ் திங்கிங்... போன நூற்றுண்டோட கொள்கை, லட்சியப் பிடிப்புகளோட, வறுமையை ஏத்துக்கற பெண்ணு அவ இல்லாம, சவால்களை ஏத்துக்கற துணிச்சல்... உன்னேட இலக்கியங்கள் மாதிரி இல்லாம, பாஸிடிவா பார்க்கற அப்ரோச் எல்லாம்தான் அவளோட வெற்றிக்குக் காரணம். இல்லாட்டா சூதாட்டத்தில வேலைய விட்டுட்டு வந்த அப்பாவையும் வரிசையா நிக்கற தங்கைகளையும் சாமர்த்தியமே இல்லாத புருஷன் பேச்சையே வேதமா நினைக்கிற அம்மாவையும் வைச்சுண்டு, அவ இவ்வளவு தூரம் முன்னேறியிருக்க முடியுமா? உன்னை லவ் பண்ணிண்டிருந்தா உன் சம்பளத்துல அந்தக் குடும்பத்தையும் சேர்த்துக் காப்பாத்த முடியுமா? தயவு செய்து அவகிட்டே போய் உணர்ச்சி வசப்பட்டு எதையும் கேட்காதே...'' என்றாள்.

''தேங்க்யூ ஜானு! நீ எதையும் சரியாத் தீர்மானிக்கறே! நான் உன் புத்திசாலித்தனத்தைப் பாராட்டறேன். உன் நியாயங்களை ஏத்துக்கறேன். உன்னேட அட்வைஸுக்கு நன்றி! இருந்தாலும் நான் அவகிட்டே பேச ஆசைப்படறேன். அம்மா விவரிச்ச அழகை நேர்ல பார்க்க ஆசைப்படறேன். அந்த அழகி என் பழைய கா... சாரி... சிநேகிதிங்கற முறைல பக்கத்துல இருந்து பேசிட்டு வர ஆசைப்படறேன். இது நேச்சுரல்! தவிர்க்க முடியாதது...'' என்றான்.

ஜானு பிறகு பேசவில்லை.

ஜானுவிடம் கேட்டு, ஃபோன் நம்பர் வாங்கிக்கொண்டான். ஜானுவின் டயரியில் லதாவின் காபினட் சைஸ் புகைப்படம்



"நம்ம அரசியல்வாதி மாப்பிள்ளைக்கு ரொம்ப தான் ஞாபக மறதி."

"ஏன்?"

"மணமகள் மாலையைப் போட்டதும் ஏதோ ஞாபகமா மைக்கைப் பிடித்து பேச ஆரம்பிச்சுட்டார்!"

— கதிர்வேல்

இருந்தது. கலர் படம்.

மஞ்சள் சாரியில்... குளித்துவிட்டு கூந்தலை உலர்த்துகிற மாதிரி, குடும்பக் களையுடன்! சின்னச் சிரிப்புடன்... அப்பப்பா.

ஃபோனில் அவள் அப்பாதான் முதலில் பேசினார்.

"யாரு, ரகுவா? ரகுன்னு யாருய்யா? நீ என்ன கலெக்டரா? சினிமா ஸ்டாரா? சொன்னதும் தெரிஞ்சுக்கறதுக்கு..." என்றார். குரலில் அதிகாரம் தொனித்தது.

"இல்லே சார்... நான் ரகோத்தமன். எஸ். பி. ஐ. ஆபீஸர். உங்க வீட்டுக்குப் பக்கத்தில் வடபழனியில் பத்து வருஷமாய்க் குடி இருந்தவன். ஜெயராமன் ஐ. ஓ. பி. யோட பையன்..."

"அடடே... ரகுவா! என்னப்பா சௌக்கியமா? நீ எங்கியோ அஸ்ஸாம்லெ இருக்கேன்னுங்க. வந்திருக்கியா? சரி... சரி! லதாவைப் பார்க்கணுமா... வர்ற ஞாயிற்றுக்கிழமை வாயேன்..."

இன்று வியாழக்கிழமை. இன்னும் இரண்டு தினங்கள் இடைவெளி.

அப்பா வேறு இரண்டு பெண்களைப் பார்க்கப் போக வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். இடையில் கிடைத்த நேரத்தில் அவள் படங்கள் இரண்டு மூன்றைப் பார்த்து வைத்தால் தேவலை.

லதாவின் படத்தில் அவளுக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்திருந்தார்கள்.

பணக்கார வீட்டுப் பெண். கதாநாயகன் வேலைக்காரப் பையன். காதல், எதிர்ப்பு, திருமணம்!

இன்னும் எத்தனை நூற்றாண்டுகளுக்குத் தான் தமிழுக்கு இதே கதையோ...?

கிராமத்துப் பின்னணியில் எடுக்கப்பட்ட அந்த அஸ்ஸாமியத் திரைப்படம் - அதன் நாயகி மல்லிகா - ஏற்படுத்திய பாதிப்பை லதா ஏற்படுத்தாதது தன் தவறா... தமிழ்ப்பட உலகின் தவறா?

அடுத்த படத்தில் பரத நாட்டியம் கற்கும் பெண்ணாக வந்து கதாநாயகனுக்குச் சமமாக ஆடிப் பிரிந்து, பின் பையன் நாட்டியக்காரனாகி, அவன் மூலம் தாயும் தந்தையும் ஒன்று சேர்ந்து... சுபம்! ரசிக்கவில்லை...!

யதார்த்தத்தை விட்டு விலகி வந்த மாதிரி... இரட்டை அர்த்த வசனங்கள்! அபஸ்வரம் தொனிக்கும் பாடல்கள்... ஜீவனில்லாத கதை!

எல்லாம் லதாவின் அழகில் மறக்கடிக்கப்பட்டு படம் நூறாவது நாளை நெருங்கிக் கொண்டிருந்தது.

லதாவைச் சந்தித்தால் என்ன பேச முடியும்... பேச நேரமிருக்குமா அவளுக்கு?

"தன்னாலும் அவளைத் திருப்திப்படுத்துகிற விதமாய் இந்தப் படங்களின் அபத்தங்களைப் பற்றிப் பேசாமல்... ரசிக்குமா...? அவளைப் போய்ப் பார்க்கவும் வேண்டுமா?"

ஞாயிறு. லதா வீடு!

"வா... ரகு... உன்னை ரொம்பவும் எதிர்பார்த்துக் காத்துக்கிட்டிருக்கேன். உங்கிட்டே நிறையப் பேசணும், என் பிரிய நண்பனே!"

அம்மா சொன்ன மாதிரி அசர வைக்கிற அழகுதான். பக்கத்தில் நிற்கிற போது பேச்சு வரவில்லை. ஆள் கொஞ்சம் உயர்ந்த மாதிரி... பூசினாற்போல் தேகக்கட்டு... நிறம் கூடி ஒரு ராஜ பரம்பரை மாதிரி... படத்தில் பார்க்கிற தேவதை மாதிரி... என்ன அழகு இது. மேக்கப் இல்லாமல் இது சாத்தியமா...?

"என்ன ரகு பேசவே மாட்டேங்கறே. நான் இன்னும் பத்து நிமிஷம்தான் ஃப்ரீ. அடுத்து ஹிந்தி ஷூட்டிங்... அஸ்ஸாம் எல்லாம் எப்படி இருக்கு? வாட் அபௌட் யுவர் மேரேஜ்...?"

"லதா... வாழ்க்கை இவ்வளவுதானா? நீயும் நானும் இனி ஒன்றாகவே வழியில்லையா...? உன்னை நான் எவ்வளவு நேசிச்சேன் தெரியுமா? உனக்காக உன் ஃபேமிலியையும் நான் வச்சுக் காப்பாத்தறேன்... இந்த ஃபார்மாலிட்டீஸ் வேண்டாம்." — என்றெல்லாம் பேசத் துடித்தாலும் அவள் வசதியும் செல்வாக்கும், ஜானுவின் உபதேசமும் நினைவில் வந்து பேச முடியாமல் செய்தன.

"உன் படங்களைப் பார்த்தேன் லதா! நன்றாக இருந்தன. வீட்டுல பெண் பார்க்கறாங்க. சீக்கிரம் மேரேஜ் இருக்கும். உன் கல்யாணம் எப்போ?" என்று கேட்டான்.

"கல்யாணமா... நினைச்சுப் பார்க்க நேரமில்லே ரகு... அகில இந்திய நடிகையாகணும்... சாகறதுக்குள்ளே எல்லா மொழிகள்லேயும் நடிச்சுடணும். குடும்ப வாழ்க்கையை விட்டு நான் விலகி வந்து ரொம்ப நாளாச்சு! கல்யாணம் எங்களுக்கு ஓர் அஸ்தமனத்தின் ஆரம்பம்... இன்னொரு தடவை கேட்காதே.." என்று விளையாட்டாக விரல் உயர்த்தி எச்சரித்தாள்.

ரகு பிறகு சரியாக ஏழு நிமிஷம் பேசிக் கொண்டிருந்தான். இன்னும் ஒரு தடவை க்ரஷ் சாப்பிட்டுக் கைகுலுக்கி விடைபெற்றான்.

லதா தன் அறையில் அதுவரை மறைத்திருந்த புகைப்படத்தை நிமிர்த்தி வைத்தாள்.

பிரபல டைரக்டருடன் திருப்பதியில் ரகசியத் திருமணம் செய்து கொண்ட போது எடுத்த புகைப்படம்!

ஒவ்வொருவர் உடலுக்கும் ஒப்பற்ற பொருத்தம்

டான்டெக்ஸ்®

ப்ரீஃப்ஸ்

வெஸ்ட்ஸ்


காஷுவெல்ஸ்

சிறுவர்களுக்கான ரகங்கள்



TTK தயாரிப்பு

நூறு ஆண்டுகளுக்கு முன்பு தன் மைத்துனர்கள்
அளித்த வரவேற்பு விழாவில் கொள்ளுத்தாத்தாவின்
மாப்பிள்ளைக்கோல நினைவுகள் பசுமையாக இருக்கின்றன.



1885ல் எடுத்த படம் - ஹைதராபாத்தைச் சேர்ந்த லாலா தீன்தயாளின் போட்டோ ஆல்பத்திலிருந்து


**இன்றும் அத்தோற்றத்தைப் பசுமையாக நினைவுகூர வைப்பது
பிளாக் & ஒயிட் படங்களே!**

உங்கள் குடும்ப போட்டோ ஆல்பத்தைப்
புரட்டிப் பாருங்கள்!
பல்லாண்டுகளுக்கு முன் எடுத்த பிளாக் & ஒயிட்
படங்கள் இன்றும் கருக்கழியாமல்,
மங்காமல் இருப்பதைக் காண்பீர்கள்.
அதுவே பிளாக் & ஒயிட் படங்களின் சிறப்பு! அறுபது, எழுபது
ஏன் எண்பது வருடங்களானாலும் மங்காது.
சொல்லவும் வேண்டுமா?
காலத்தை வென்றிடும் பிளாக் & ஒயிட் படங்களே
உங்களது தேர்வாக இருக்க முடியும்.


**அழியாத நினைவுகளுக்கு
காலத்தால் அழியாத பிளாக் & ஒயிட் படங்கள்!**

INDU





**இந்து
பிளாக் & ஒயிட்
ரோல் பிலிம்
மற்றும் ப்ரோமைடுகள்.**



கரும்பாக நீ

வர வர மாதையன், இன்பாவுடன் நின்று பேசுவதைக் கூட விரும்பவில்லை லோகநாதன்.

'சனியன் பிடிச்சவன். காலை சுத்தின பாம்பு கடிக்காமல் விடாதுங்கறுப்பல.... இவன் எதுக்காக இவளைச் சுத்திட்டே இருக்கான்.'

அவர், அவனை வீட்டில் அரை நாழிகைகூட நிற்க விடாமல், ஏதேனும் ஒரு சாக்கு வைத்து விரட்டிக் கொண்டே இருக்கிறார்.

இருப்பினும், அவனால் இன்பாவிடம் ஒரு பத்து நிமிஷங்களாவது நின்று பேசாமல் இருக்க முடியவில்லை.

அது என்ன எசமான விசுவாசமா.... இல்லை, இன்பாவின் முக ராசியா, அல்லது இரண்டுமேவா....

பகல் சாப்பாடு வீட்டு வேலைக்காரர்கள் அனைவருக்கும் ஜமீன் மாளிகையிலேயேதான்...

மாதையன் மட்டும் எல்லோருடனும் சேர்ந்து சாப்பிட முடியாது.

அவனை எங்கேயாவது விரட்டியிருப்பார் லோகநாதன். வெயில் பார்க்கமாட்டார்; வயசு பார்க்க மாட்டார்.

கடைசியில் பார்க்கப் போனால் அல்ப விஷயமாக இருக்கும்.

ஸ்டேஷன் மாஸ்டரிடமிருந்து பஞ்சாங்கம் வாங்கி வர.... டாக்டர் வீட்டுக்குப் போய், புவனாவின் சாப்பாட்டில் எவ்வளவு உப்பு சேர்க்கலாம் என்று கேட்டு வர... டவுனுக்குப் போய்க் கறிகாய் வாங்கி வர.... தையற்காரனை அழைத்து வர.... காரியஸ்தர் வீட்டுக்குப் போய்க் கணக்குப் பேரேட்டைக் கொடுக்க.....

காலணா பெறாத விஷயத்துக்கெல்லாம் மாது, வண்டி கட்டிக் கொண்டு ஓடி விட்டு வருவான்.

அவன் வரும்போது பகல் சாப்பாடு முடிந்திருக்கும். இவனது சாப்பாடு மாத்திரம் எடுத்து வைக்கப்பட்டிருக்கும்.

மாதையன் பகல் இரண்டு மணிக்கு மேல் வருவான். அப்போது ஜமீன்தார், கூடத்துச் சாய்வு நாற்காலியில் சாய்ந்து சின்ன தூக்கம் போட்டிருப்பார்.

புழக்கடையில் கால் கழுவும் சத்தம் கேட்டதுமே இன்பா, எங்கிருந்தோ பறந்து வந்து அவன்முன் நிற்பாள்.

''இப்பத்தான் வர்றியா மாது.....''

''ஆமாங்க.....''

''இத்தனை நேரத்துக்கு மேல் சாப்பிட்டா உடம்பு என்னத்துக்கு ஆகும். கண்ட நேரத்துல திங்கறதுக்கு உனக்கென்ன சின்ன வயசா....''

மாதையன் இதற்குப் பதில் பேசாமல் தலைகுனிந்து நிற்பான்.

''நீ உட்காரு மாது. நான் பரிமாறுகிறேன்.....''

"ஐயோ... வேண்டாம் தாயே... உங்க கையாலே தின்ன சோத்துக்கு இன்னும் ஏழு பிறவி எடுத்தாலும்—நன்றிக் கடன் தீராது..."

இதைச் சொல்லும் போது, இவனது கன்னச் சதை லேசாகக் குலுங்கும்... கண் விளிம்பில் ஈரம் கசியும்...

நந்து கூட அவளது காதோரமாய்ச் சொல்வான்.

"உம்ஹூம்... போற போக்கைப் பார்த்தா—நீ என்னை விட்டுட்டு, மாதையனைக் கல்யாணம் பண்ணிக்கறேன்னு சொன்னாலும் சொல்லுவே போல இருக்கு..."

"ச்சீ...: பாவம்... அவனோட வயசுக்கு மதிப்பு கொடுத்தா அது ஒரு தப்பா...?"

"தப்பே இல்லே,... இப்பத்தான் சின்னப் பொண்ணு—கிழவனை 'லவ்' பண்றதுங்கறது ரொம்பசகஜமானவிஷயமாயிடுத்தே... கதையில் எழுதறாங்க... சினிமாவுல காமிக்கறாங்க..."

"ஏய்... நிஜத்தைச் சொல்லு... நைட் ஷோ போயிட்டு வந்தியா?"

"இதுல பொய் சொல்ல என்ன இருக்கு... படுக்கையில படுத்துட்டு வயிறெரியறதை விட — பராக்கா சினிமாவுக்காவது போயிட்டு வரலாம்னு போனா... அங்கேயும் எரியற தீயில் எண்ணெய் விட்ற மாதிரி ஆயிடுச்சு..."

"என்ன படம்...?"

"தெரிஞ்சு என்ன செய்யப் போறே... மெத்தை வாங்கினேன், தூக்கத்தை வாங்கலே... போற போக்குல... இளசுக்கு மவுசில்லே... போயேன்..."

இன்பா அழுத்தமாய்ப் புன்னகை புரிந்து கொள்வாள்.

இன்றும் தனது சிரிப்பு மாறாமல்—தன்னை வெளியே அழைத்துப் போகக் காத்திருக்கும் நந்துவிடம்—சின்னச் சின்னதாய் ஏதேதோ பொய்க் காரணம் சொல்லிக் கொண்டு, மாதையனுக்காகக் காத்திருக்கிறாள்.

"உச்சிப் பொழுதுல அணைக்கட்டுக்குப் போய்—ஜவ்வரிசி வத்தல் மாதிரி காய்ஞ்சிட்டு வரவா உன்னைக் கூப்பிடறேன்..."

"ஸாரி நந்து... ஒரு அஞ்சு நிமிஷம் வெயிட் பண்ணேன்... தலையில் எண்ணெய் வச்சுக்கிட்டிருக்கேன்.... சீயக்காய் அரைக்கப் போன மாது இன்னும் வரல்லே..."

"ஒரு நாளைக்கு ஷாம்பூவைப் போட்டு அலசினால் என்னவாம்... குறைஞ்சா போயிடுவே..."

"அது சரி... ஷாம்பூவைத் தேய்ச்சுட்டு, வெளியில் வந்தா தலை, குருவிக் கூடு மாதிரி சிக்கும் சிடுக்குமா ஆயிடும்... எனக்கு அம்மா கூட கிடையாது... வாரி, சிக்கெடுக்க..."

"சரி, சரி... எப்பவோ செத்த அம்மாவை நினைச்சிட்டு இப்ப ஒப்பாரி வைக்காதே..."

அவன், தலையில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்க... வாசலில் மாதுவின் தலையைக் கண்டதும், இன்பா, புழக்கடை கிணற்றடிக்கு ஓடுகிறாள்.

"மாது..."

"அம்மா..."

"இன்னிக்குச் சாயங்காலம் உன் கூடத் தனியாக் கொஞ்சம் பேசணுமே..."

அவன் கண்களில் 'சட்'டென மிரட்சி...

"ஐயாவுக்குத் தெரிஞ்சா... தொலைச்சிடுவாரும்மா..."

"உன்னைத் தொலைச்சு முழுகாம நான் பார்த்துக்கறேன். என்னைத் தொலைக்கணும்னு நினைச்சா... அவர் தொலைஞ்சாரு... என்ன வர்றியா?"

"எங்கேம்மா?"

"சாயந்திரம் அஞ்சு மணிக்கு.. நம்ம தோட்டத்துக்குப் பின்னாலே... காவேரிக் கரைக்கு... இன்னும் சரியாச் சொல்லப் போனா... ஒரு நாகலிங்க மரம் இருக்கே... அங்கே..."

அவள், இதைச் சொல்லி விட்டு, சிட்டாய்ப் பறந்து விட்டாள்...

மாதையன், அவள் ஓடுவதையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டு நிற்கிறான்.

மங்களாம்பாள் தரை அதிர நடக்க மாட்டாள். ரோஜா நிறப் பாதங்கள், எங்கே தரைக்கு வலிக்கிறதோ என்பது போல் ஒத்தடம் கொடுக்கிற நடை....



இவள் அப்படியில்லை.

பதினெட்டாம் பெருக்குக் காவேரி.

ஆத்திரமா, ஆனந்தமா என்பதை அந்தத் துள்ளலிலிருந்து இன்னமும் இனம் கண்டு பிடிக்க முடியவில்லை மாதையனால்...

அன்று மாலை — சொன்ன நேரத்தில் மாதையன் — இன்பாவுக்காக ஆற்றங்கரை நாகலிங்க மரத்தடியில் காத்திருக்கிறான்...

நெஞ்சில், பழைய நினைவுகள் பெருக்கெடுக்கின்றன.

இந்தக் கரையில்தான் மங்களாம்பாள் — ஆடி மாசக் காவேரிக்குப் பூஜை செய்வாள். ஐப்பசி, கார்த்திகை மாத நோன்பிருப்பாள்... நாகலிங்க மரம் கூட அவள் விரும்பி நட்டது தான்...

"எதிர்த்தாப்பல பத்தடி தள்ளி அரச மரமும் வேப்ப மரமும் வைக்கணும் மாது. மேஸ்திரியை விட்டு மரத்தைச் சுத்தி மேடை கட்டச் சொல்லி பிள்ளையார், நாகர் எல்லாம் பிரதிஷ்டை பண்ணச் சொல்லணும்..."

மங்களாம்பாளின் குரல், காற்றில் கலந்திருப்பது போல ஒரு பிரமை...

"மாது..."

அவன் தேகம் சிலிர்க்கத் திரும்பிப் பார்க்கிறான்.

"வாங்கம்மா... இப்பத்தான் உங்களைப் பத்தி நினைச்சிட்டு இருந்தேன்..."

அவன் இன்பாவைப் பார்க்கிறான்.

வழக்கத்துக்கு மாறாகப் புடைவை கட்டியிருந்தாள் அவள். பகல் எண்ணெய் ஸ்நானத்துக்குப் பிறகு, காதோரக்கூந்தலை வகிர்ந்தெடுத்துக்குடலைப்பின்னலாகப்போட்டிருந்ததால் நீண்ட கூந்தல் காற்றில் சிலும்பி — ஒரு தேவதையைப் போல அவளை உருவகப் படுத்தியது...

"நாகலிங்கப்பூ வாசனை பங்களா வரைக்கும் வீசறது... இல்லையா மாது...?"

"ஆமாங்க... உங்க கையால் நட்ட மரமாச்சுங்களே... எதிர் வாடையில் ஓர் அரசமரம் நட்டுப் பிள்ளையாரை பிரதிஷ்டை பண்ணணும்னு என்கிட்டேயும் மேஸ்திரி கிட்டேயும் சொன்னீங்க... அதுதான் நிறைவேறுமலேயே போயிடுச்சு..."

இன்பா அவனைக்கூர்ந்து பார்க்கிறாள்...

தான் எதைக் கேட்க வேண்டுமென நினைக்கிறாளோ — அதற்கே மாதையனும் வழி வகுத்துக் கொடுப்பதில் உள்ளுக்குள் சந்



தோஷத் திணறல்...

"மேஸ்திரிக்குக் கேட்டப்ப எல்லாம் பணம் கொடுத்தேன்... அவன் உடம்புக்கு என்ன வந்ததுன்னே கடைசி மட்டும் எனக்குத் தெரியாது மாது..."

பொத்தாம் பொதுவான கேள்வி.

அவளுக்குத் தெரியும்; மாதையனின் வாயைக் கிளற இந்த ஒரு கேள்வி போதும் என்று...

"உடம்பு என்னங்க... வியாதி வந்து சாகற தேகமா அது? பச்சைப் புள்ளேயை விட்டுட்டு, பெண்டாட்டி செத்த துக்கம்தான் அவன் உடம்பையும், மனசையும் உருக்கி டுச்சு. எல்லாரும் ஆச்சரியப்பட்டுப் போனாங்கம்மா... ஐயா, உங்களைத் தொலைச்சிட்டு ஊர் திரும்பின ரெண்டாம் நாளே மேஸ்திரி நல்லசிவம் ஜன்னி முத்திப் போயிட்டான். பெண்டாட்டியைப் பறி கொடுத்தப்ப கலங்காத ஐயா கூட, நல்லசிவம் செத்தப்ப கொஞ்சம் ஆடித்தான் போயிட்டாரு..."

"அவருக்குக்கூட பாசம், பிரியம் இதெல்லாம் இருந்ததா...?"

"இருக்காதா பின்னே... நல்லசிவம், ஜமீன்தார் சின்னப்பிள்ளேயா இருந்ததுலே யிருந்து சினேகமில்லேயா...? வயசாக ஆகத்தான் இவருக்கு அந்தஸ்து கண்ணே மறைக்க ஆரம்பிச்சது... அப்படியும் இந்தப் பங்களாவைக் கட்ட உங்க யோசனேயும், அவனேட உழைப்பும்தானே அவசியமாயிருந்தது... கொஞ்சமாகவா உழைச்சிருக்கான்?"

"இப்ப அவன் குடும்பம்... குழந்தை..."

"ப்சு... அதெல்லாம் எங்கே போச்சோ... என்னவாச்சோ... சாகறதுக்குள்ளே அம்மா இட்ட வேலேயைச் செஞ்சிட்டுப் போய்ச் சேர்ந்தான்... கடைசி மட்டும் அவன் குறை தீரவே இல்லே... 'எத்தனையோ மாடி வீடும், பங்களாவும் கட்டின இந்தக் கையாலே என் குழந்தைக்கு ஒரு கல் வீடு கட்டித் தந்திட்டுப் போகணும் மாதையா'ன்னு அடிக்கடி சொல்லுவான்... இப்படி, தன் குடும்பம் காத்துல கரைஞ்ச கற்பூரமாப் போயிடும்னு கனவுகூடக் கண்டிருக்கமாட்டான், பாவம்..."

"உங்க ஐயா, அவன் கூட சின்ன வயசுல இருந்து சினேகமா இருந்ததுக்கு ஒரு கல் வீடு கட்டிக்க உதவியிருக்கலாம் இல்லேயா... கொஞ்சம் கூட இரக்கமேயில்லாதவரு..."

"எல்லாரும் கிருஷ்ணனு மாறிட முடியுமா தாயே... இந்த நாட்டுல குசேலனுங்களுக்குப் பஞ்சமில்லே... சினேகத்தை மறக்காத கிருஷ்ணன்தான் இல்லே..."

மாதையன் பழைய நாட்களை நினைத்து உணர்ச்சி பொங்கப் பொங்கச் சொல்கிறான்.

மேஸ்திரி நல்லசிவத்தின் பயந்த சுபாவத்தையும், நேர்மையையும் பற்றி... லோகநாதன், மங்களாம்பாளுடன் ஊருக்குக் கிளம்பின மறுநாள் — நல்லசிவம் பிரமை பிடித்தாற் போல உட்கார்ந்திருந்தது பற்றி... மங்களாம்பாளின் மடியையே தொட்டிலாக்கி வளர்ந்த குழந்தை — அவளைக் காணுத ஏக்கத்தில் சாப்பிடாமல் சுருண்டு சுருண்டு படுத்தது பற்றி... நல்லசிவத்துக்குக் காய்ச்சல் முற்றி ஜன்னி கண்டு பிதற்ற, மாதையன் டாக்டரை அழைத்து வர ஓடியது பற்றி... மனைவியை இழந்து ஊர் திரும்பிய லோகநாதன், முதல் தடவையாய்ச் சுற்றைப் பணத்தை எடுத்து டாக்டர் கையில் திணித்து, எப்படியாவது நல்லசிவத்தைக் காப்பாற்றச் சொல்லிக் கெஞ்சியது பற்றி...

"அன்னிக்குத்தாம்மா, நம்ம எசமானர் மனசுலேயும் கொஞ்சம் ஈரம் இருக்குங்கறதை நான் உணர்ந்துக்கிட்டேன்..."

மலைத்துப் போய் நிற்கிறாள் இன்பா...

உழைத்து உழைத்து உரமேறிய நல்லசிவத்தின் மரணப் போராட்டத்தை அவளால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது...

"இப்ப கூட எப்பவாவது, நல்லசிவத்தை அடக்கம் பண்ணின — இதோ இந்த நாகலிங்க மரத்தடிக்கு — எசமான் வந்து நிப்பாரு..."

"இங்கேதான் அடக்கம் பண்ணினதா?"

"ஆமாங்க... எசமானர் அவனுக்கு வாழறதுக்கு வீடு தரலேயின்னாலும், நீட்டிப் படுக்க, தனக்குச் சொந்தமான இந்த நிலத்துலேயே எட்டடி மண் கொடுத்திட்டாரு..."

இன்பா, அந்த நாகலிங்க மரத்தைச் சுற்றி வரும் போதுதான் ஒன்றைக் கவனிக்கிறாள்...

ஸ்டேஷன் மாஸ்டர் விறுவிறுவெனப் பங்களாவை நோக்கி நடந்து கொண்டிருக்கிறார்...

'இத்தனை நேரமும் இங்கேயா இருந்தான் மனுஷன்...?'

அவளுள் முதன் முறையாய்ப் பயம் வட்டமிடுகிறது.

(தொடரும்)



வீட்டுக்காரப் பெண்மணி: அதென்ன ஊ.வா. அலவன்ஸ் பத்து ரூபாய்?


வேலைக்காரி: அதாம்மா, பக்கத்திலே ஊர் வம்பு செய்திகளைச் சொல்றதுக்கு தனியா பத்து ரூபாய் மாதா மாதம் கொடுத்திடணும்.

— கதிர்வேல்

மலைவாசி மக்கள



• நம்மோடு பேசிய மலைவாசிகள்.



• கோடபாத்தி கிராமத்தில் ஒரு காட்சி.



• மலை ஏறியபோது நாங்களும் இப்படித்தான் தண்ணீர் குடித்தோம்.



• 'போஸ்' பேண்: ஆண்டி.



• பாப்பாத்தி.

டன் ஒரு நாள்!

தந்தை சின்னச்சாமியுடன் மாணிக்கம்.



"ஆண்டவரே! அந்தக் காலத்தில் எங்க முன்னோருங்க,, காஞ்சிபுரத்திலேர்ந்து கரிமலைக்கு வந்த போது...

"வந்தபோது...?"

"அது ஒரு பெரிய கதைங்க தம்பி!"

"சொல்லுங்க; கேட்கிறோம்!"

"ரொம்ப தூரத்திலேர்ந்து வந்திருக்கீங்க. களைச்சுப் போயிருப்பீங்க. நாளைக்கு வேறே நீங்க மலையேறிப் போவோணும். படுத்துத் தூங்குங்க. அப்புறமாச் சொல்றேன்!" என்று எங்களின் கதை கேட்கும் ஆர்வத்தைக் கிளறி விட்டுவிட்டு அரசாங்கச் சரக்கின் மயக்கத்தில் தூங்க ஆரம்பித்து விட்டார் அம்மாசிக் கிழவர்.

அடுத்த நாள் காலையில். ஜீப் கூட நுழைய முடியாத, கல்வராயன் மலையிலிருக்கும் கொடமாத்தி என்னும் கிராமத்திற்குச் செல்ல வேண்டுமென்பதால், முதல் நாள் மாலையே புறப்பட்டுப் போனோம். கச்சிராப் பாளையத்திலிருந்து, வண்டிப் பாதையின் புழுதியில், ஆளுக்கொரு சைக்கிளை மிதி மிதியென்று சுமார் ஏழெட்டுக் கிலோ மீட்டர்கள் மிதித்துச் சென்று, மலையடிவாரத்திலுள்ள பொட்டியம் (இங்கும் மலைவாசிகள் தான்!) என்ற கிராமத்தைச் சென்றடைந்தோம்.



சீனுவாசன்.

அம்மாசிக் கிழவர்.



வெள்ளி நிலாக் காயும் முன்னிரவு நேரம்! அங்



• முன்னாள் ஜாகீர் லட்சுமணப்ப ஜடையக் கவுண்டர்.



• மூதாட்டி பொட்டையம்மா.

கிருந்து நமக்குக் கடிதம் எழுதியிருந்த கல்வராயன் மலைவாழ் மக்கள் நல்வாழ்வுச் சங்கத்தின் தலைவர் சீனுவாசன் வீட்டு வாசலில், களைப்புத் தீர நாங்கள் கயிற்றுக் கட்டிலில் படுத்துக் கிடந்த போதுதான் இப்படிக் கதை கேட்கும் ஆர்வத்தைக் கிளறிவிட்டு விட்டுத் தூங்க ஆரம்பித்தார் சீனுவாசனின் அப்பா அம்மாசிக் கிழவர்!

மறுநாள் காலை. நாங்கள் கண் விழிப்பதற்கு முன்பே எழுந்து, எங்களுக்காகக் காத்திருந்தார் அம்மாசிக் கிழவர். நாங்கள் எழுந்து உட்கார்ந்து கண்களைக் கசக்கிக் கொண்டிருந்த போது ஆரம்பித்தார் அவர்...

ஆண்டவரே! அந்தக் காலத்தில் எங்க முன்னோருங்க, காஞ்சிபுரத்திலேர்ந்து கரிமலைக்கு வந்தபோது...

''வந்தபோது...?''

''அது ஒரு பெரிய கதைங்க தம்பி!''

''சொல்லுங்க, கேட்கிறோம்!''

''வெயில் ஏறங்காட்டியும் மலையேறினாத்தான் களைப்புத் தெரியாது. அதனாலெ மலையேறிட்டு வாங்க, அப்புறம் நிதானமாச் சொல்றேன்...'' —மறுபடியும் ஒரு சஸ்பென்ஸோடு எழுந்து போய்விட்டார் கிழவர்.

பிறகு, கல்வராயன் மலையிலிருந்து ஓடி வரும் கோமுகி ஆற்றில், சுகமாகக் குளித்துக் கொண்டிருந்த எருமை மாடுகளோடு சேர்ந்து, நாங்களும் குளித்துவிட்டு மலையேற ஆரம்பித்தோம். எங்களுக்கு வழித் துணையாகக் கச்சிராப்பாளையத்தில் பணிபுரியும் மலைவாசி இனத்தைச் சேர்ந்த ராமலிங்கம் என்பவரும், படிப்பறிவேதும் இல்லாத, மேலும் இரண்டு மலைவாசிகளும் எங்களோடு வந்தார்கள்.

ஆங்காங்கே மண்டிக் கிடக்கும் முட்புதர்கள், பாறைகள், மரங்கள் ஆகியவற்றின் ஊடே புகுந்து வளைந்து வளைந்து செல்லும் செங்குத்தான ஒற்றையடி மலைப்பாதையில் மூச்சைப் பிடித்துக் கொண்டு ஏறிய போது, அடிவாரத்தில் ஓடும் கோமுகி ஆற்றில், வயிறு முட்ட அள்ளிக் குடித்துவிட்டு வந்த தண்ணீரெல்லாம் அரை மணி நேரத்திற்குள்ளாகவே வியர்வையாகிப் போனது! கால் மூட்டுகளெல்லாம் கழன்று விழுந்து விடுமோ என்னும் அளவுக்கு, அப்படியொரு வலி! நமது உடம்பே நமக்குப் பாரமாகிப் போனது போல் ஒரு பிரமை!

நிஜமாகவே எங்களோடு வந்த சக பத்திரிகையாளர்களில் ஒருவருக்குக் கையில் கட்டியிருந்த கடிகாரம் கூட ஒரு சுமையாகிக் கனக்கவே, அதைக் கழற்றிக் கூட வந்த மலைவாசியிடம் கொடுத்து விட்டார் அவர்!

சிறிது நேரம் உட்கார்ந்து இளைப்பாறிவிட்டு, மறுபடியும் புறப்பட்டோம். தண்ணீர்த் தாகத்தில் நாக்கு வரள ஆரம்பித்து விட்டது. தட்டுத் தடுமாறித் தவழாத குறையாக ஏறிக் கொண்டே, எங்காவது தண்ணீர் தட்டுப்படாதா என்று தவித்துக் கொண்டிருந்தோம். இன்னும் சிறிது தூரம் போனால் ஒரு சுனையை அடையலாமென்றும் அங்கு கண்டிப்பாகத் தண்ணீர் இருந்தே தீருமென்றும் நம்பிக்கையூட்டிக் கொண்டே வந்தார்கள் வழித் துணைக்கு வந்த மலைவாசிகள்.

போனோம். சுனையும் இருந்தது. சுனையின் ஆழத்தில் சுமார் மூன்று நான்கு லிட்டர் தண்ணீர் கலங்கிக் கிடந்தது! அள்ளிக் குடித்தால் இன்னும் கலங்கும். வேறு வழி? ஒவ்வொருவரும் மண்டிபோட்டுக் குனிந்து அதில் அப்படியே வாயை வைத்து உறிஞ்சிக் குடித்தோம். அத்தனை தாகம்!

இன்னும் எவ்வளவு தூரம் ஏறணுமுங்க?'' என்று கேட்டோம்.

''ஆச்சுங்க. இன்னும் பாதித் தூரம்தான் ஏறணும்!'' என்று அவர்கள் சொன்னபோது, கைக்கடிகாரம் கூட கனம் என்று கழற்றிக் கொடுத்த நண்பர், இனியும் தாங்காது என்று தனது சட்டை, பனியனையும் கழற்றிக் கொடுத்து விட்டார்!



• காலியாகக் கிடக்கும் ஜெனரேட்டர் ரூம்.



• ஆசிரியர்கள் வராததால் வெளியில் விளையாடிய சிறுவர்கள்.

மீண்டும் புறப்பட்டோம். மீண்டும் இளைப் பாறினோம். மீண்டும் புறப்பட்டோம். ஏறிக் கொண்டேயிருந்தோம். நல்ல வேளையாகச் சட்டை, பனியனையெல்லாம் கழற்றிக் கொடுத்த நண்பர் மறுபடியும் யோசிப்பதற் குள் மலையுச்சியை அடைந்தது எங்கள் அதிர்ஷ் டம் என்றுதான் சொல்ல வேண்டும்!

மதுரை மாவட்டச் சுற்றுப்பயணத்தின் போது பார்த்த அகமலையைப் போல் ஏலமும், காப்பியும் விளையும் வளமான மலை யில்லை இந்தக் கல்வராயன் மலை. இதன் அதிகபட்ச உயரம் கூட நான்காயிரம் அடி களுக்குக் குறைவானதுதான் என்பதால் சில் லென்ற காற்றும் இல்லை. ஆங்காங்கே சில பலா மரங்கள், அடர்த்தியான கடுக்காய் மரங்கள்; கறிவேப்பிலை மற்றும் புளிய மரங்கள்; எப்போதாவது தென்படும் சந்தன மரங்கள், ஊர்கள் உள்ள இடங்களில் மட்டும் காணப்படும் தென்னை, மா போன்ற மரங்கள், வரகு, சாமை, தினை போன்ற தானிய வயல்கள்... இவைதான் கல்வராயன் மலை.

இப்போது, இம்மலை மேலுள்ள நூற்றைந்து கிராமங்களிலும் சேர்த்துச் சுமார் முப்பத்து மூன்றாயிரம் மக்கள் தொகை கொண்ட இந்த மலையின் மொத்தப் பரப் பளவு, சுமார் ஐம்பதாயிரம் ஹெக்டேர்கள். அந்தக் காலத்தில் இது வெள்ளிமலை, உழவு நாடு, உப்பு நாடு, கண்டப்ப நாடு, மதுநாடு என்று ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, அந்த ஐந்து பிரிவுகளையும் முறையே பெரிய கல்வராயன், சின்னக் கல்வராயன், குரும்பக் கவுண்டன், ஐடையக் கவுண்டன், அரியக் கவுண்டன் என்று ஐந்து ஜாகீர்கள் ஐந்து சிற்றரசர்களைப் போல் ஆண்டு வந்தனர்.

அப்போது இந்த மலைவாழ் மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் எந்தவிதமான தொடர் பும் கிடையாது. ஜாகீர்கள் வைத்ததுதான் சட்டம்; விதித்ததுதான் வரி! மக்கள் அனை வரும் ஜாகீரைக் கண்டவுடன் மேல் துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டு, ''துரை!'' என்று நெடுஞ்சாண் கிடையாகக் காலில் விழ வேண்டும். இல்லையென்றால் சுசையடிதான் என்னுமளவுக்குக் கொத்தடி மைகளாகத்தான் வாழ்ந்து வந்தார்கள். இந்த அவல நிலை கடந்த 25.8.76 அன்று தான் இனம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் ஒழிக் கப்பட்டது. ஜாகீர் பதவிகள் பறிக்கப்பட்டு மலைவாழ் மக்கள் அனைவரும் அரசாங்கத் தின் நேரடிப் பார்வையில் கொண்டுவரப்பட் டனர். அவர்களுக்காகப் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் வகுக்கப்பட்டன.

இவை எல்லாம் சரிதான்; அற்புதமான விஷயங்கள்தான்! ஜாகீர்களின் கொத்தடி மைக் கொடுமைகளிலிருந்து மீண்டு, அரசாங் கத்தின் நேரடிப் பார்வையில் பட்ட பிறகு, இந்த மக்களின் வாழ்க்கைத் தரம் எந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறது என்று கேட்கிறீர்களா? அவசரப்படாதீர்கள்! அதற்குத்தானே இத்தனை கஷ்டப்பட்டு — முட்டிக் கால்கள் வீங்க கொடமாத்தி என் னும் மலைக்கிராமத்திற்கு வந்திருக்கிறோம். கொஞ்சம் பொறுங்கள்!

ஐம்பத்திரண்டு குடிசைகளைக் கொண்ட இந்தக் கிராமத்திற்குள் நுழையும் போதே நம் கண்களில் தென்படுவது நூற்றுப் பத்துக் குழந்தைகள் படிக்கும் ஆரம்பப் பள்ளிக் கூடம்தான். நாங்கள் சென்ற 18.8.86 அன்று அத்தனை குழந்தைகளும் வெளியில் விளையாடிக் கொண்டிருந்தன. முதலில் ஏதோ விளையாட்டுப் பாடம் நடந்து கொண் டிருக்கிறது போல் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டு, அருகில் சென்று விசாரித்த போது, ''இங்கு பெரியசாமி, சிவகுமார் என்று இரண்டு ஆசிரியர்கள் பணி புரிகிறார்கள். அந்த இருவரில் ஒருவர் கள்ளக் குறிச்சியிலும், மற்றவர் கச்சிராப்பாளையத் திற்கு அருகிலும் வசிக்கிறார்கள். சென்ற வாரம் வியாழக்கிழமை மதியம் சொந்த



* மொட்டை என்ற மலைவாசிப் பெண்.

ஊருக்குப் புறப்பட்டுச் சென்ற அவர்கள் இன்னும் (திங்கட்கிழமை மதியம் இரண்டு மணி வரை) வந்து சேரவில்லை. அதனால் தான் குழந்தைகள் இப்படி விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். ஏதோ வாரத்தில் இரண்டு நாட்கள் முழுசாகச் சொல்லிக் கொடுத்தாலே பெரிய விஷயம் சார்!'' என்றார்கள் உள்ளூர்வாசிகள்.

அந்த ஆசிரியர்கள் தங்குவதற்கென்று குடியிருப்பு வசதிகள் இருக்கின்றன. மலைமேல் வந்து வேலை செய்வதற்காக ஸ்பெஷல் அலவென்ஸுகளும் உண்டு. இத்தனை சலுகைகள் இருந்தும் வராத அந்த ஆசிரியர்களை என்ன செய்வது? வேதனையோடு மேலே போனோம்.

ஊர்த் தெருக்களிலெல்லாம் வீதி விளக்குகள் போடப்பட்டிருந்தன. பஸ் வசதிகள் கூட இல்லாத இந்த இடத்திலும் நமது அரசாங்கம் மின்சார வசதி செய்திருப்பது பாராட்டப்பட வேண்டிய விஷயம்தானே என்று நினைத்துப் பாராட்ட வாயைத் திறக்கும் நேரத்தில் ஒருவர் ஓடி வந்தார்.

''இதோ பாருங்க சார், ஜெனரேட்டர் இருக்கிற கட்டடத்தை! தெரு விளக்கெல்லாம் போட்டு, ஜெனரேட்டர் மூலம் கொஞ்ச நாள் எரிய விட்டாங்க. அதுவும் அரை மணி முக்கால் மணின்னுதான் எரிய விட்டாங்க. பிறகு அந்த ஜெனரேட்டர் ரிப்பேராயிடுச்சுன்னு சொல்லி பி. டி. ஓ. ஆபீஸ் இருக்கிற வெள்ளிமலைக்கு எடுத்துக்கிட்டுப் போய் ஒரு வருஷத்துக்கு மேலாயிடுச்சுங்க. இன்னும் ரிப்பேர் செஞ்சு வரலே!'' என்று ஒரு போடு போட்டார் அவர்!

ஊருக்குள் போனோம். இடுப்பில் அழுக்கேறிய கோவணம். அதேபோல் அழுக்கேறிய வேஷ்டி அல்லது போர்வையால் உடம்பைப் போர்த்திக் கொண்டிருக்கும் ஆண்கள். ஆண்களின் அழுக்குக்குச் சற்றும் குறைவில்லாமல் பெண்கள்; குழந்தைகள்... மொத்தத்தில் சுத்தம் பற்றிய உணர்வே இல்லாத ஜனங்கள்.

''முன்பெல்லாம் பேண்ட் போட்டவர்களைக் கண்டாலே அத்தனை பேரும் பயந்து போய்க் குடிசைக்குள் புகுந்து கொண்டு கதவைச் சாத்திக் கொண்டு விடுவார்கள். என்ன சொன்னாலும் வெளியில் வரவே மாட்டார்கள். இப்போது சகஜமாக வந்து பேசுகிற அளவுக்கு முன்னேறியிருக்கிறார்கள். இதுதான் ஜாகீர் காலத்திற்கும் இப்போதைக்குமுள்ள வித்தியாசம். மேலும் இவர்கள் அப்போதும் சரி, இப்போதும் சரி அரிசிச் சோறு என்பதெல்லாம் திருவிழாக் காலங்களில்தான் சாப்பிடுவார்கள். அந்த அளவுக்கு அரிசி என்பது இங்கு காஸ்ட்லியான விஷயம். சாதாரணமாக வரகு, சாமை, தினை போன்ற காட்டுத் தானியங்களின் கஞ்சிதான் இவர்களின் மூன்று வேளைச் சாப்பாடும். அதுவும் தொட்டுக் கொள்ள காய்கறி, அவ்வளவு ஏன்? ஊறுகாய் கூடக் கிடையாது; வெறும் கஞ்சி மட்டும்தான்! அதற்குத்தான் இவர்களின் பொருளாதாரம் இடம் கொடுக்கும்!

''ஆனால் இப்போது பெரியவர்கள் அரிசிச் சோறு சாப்பிட முடியாவிட்டாலும் குழந்தைகளுக்கு மூன்று வேளையும் அரிசிச் சோறு கிடைக்கிறது. ஆம்; மூன்று வேளையும் இங்கே சத்துணவு போடுகிறார்கள். இவர்களுக்காக அரசாங்கம் போட்டிருக்கும் திட்டங்களில் இது ஒன்றுதான் இவர்களுக்கு முழுமையாகப் பயன்பட்டுக் கொண்டிருக்கிறது.. மற்றவையெல்லாம் வெறும் பேப்பர்களில் போடப் பட்டிருக்கும் திட்டங்கள்தான்!'' என்றார் ஐந்தாவது வரை படித்திருக்கும் ஜெயராமன் என்ற மற்றொரு மலைவாசி.

நாங்கள் பேசிக் கொண்டே சென்று கொண்டிருந்த போது, மாணிக்கம் என்ற ஓர் ஒன்பது வயதுச் சிறுவன் தட்டுத் தடுமாறிக் கொண்டு ஓடி வந்தான். ''புத்திசாலிப்பையன். ஆனால் கண்தான் குருடு. ரொம்ப ரொம்ப மங்கலான பார்வைதான் அவனுக்கு!'' என்றார்கள்.

அவனை நிறுத்தினோம்! ''இது எத்தனையடா மாணிக்கம்?'' ஒரு விரல்களை அவன் முகத்துக்கு எதிரே விரித்துக் கொண்டு கேட்டோம்.

சுமார் ஒரு நிமிஷ நேரம் கண்களை உருட்டி உருட்டிப் பார்த்தான். தலையைச் சாய்த்துச் சாய்த்து உறுதி செய்து கொண்டு, ''அஞ்சு!'' என்றான். பரிதாபமாக இருந்தது.

''என்ன கோளாறு?'' என்று அந்தச் சிறுவனின் அப்பா சின்னச்சாமியைக் கேட்டோம்.

''அவன் பொறந்த பொறவியே அப்படித் தாங்க. ஏதோ சின்ன ஆபரேஷன் செஞ்சாப் பார்வை வந்திடும்னு சொல்றாங்க. வெளையற வரவு, சாமையெல்லாம் கஞ்சிக்கே சரியாயிடுது. துணி மணி எடுக்கணும்னா, பாரஸ்ட்காரங்களுக்குத் தெரியாமெ வெறகு வெட்டிக்கிட்டு அடிவாரம் போய்க் கேட்ட வெலைக்குக் குடுத்திட்டு வாங்கிக்கிட்டு வர்றோம்ங்க. இந்த நெலையிலே இவனை எப்படீங்க ஆஸ்பத்திரிக்கெல்லாம் கூட்டிக்கிட்டுப் போக முடியும்?'' என்று புலம்பாத குறையாகச் சொன்னார் அவர்.

மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரம் என்பது, ஏறத்தாழ இந்தச் சின்னச்சாமியின் வாழ்க்கையைப் போல்தான் அவலத்தின் உச்சியில் இருக்கிறது.

''உங்களுக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது?'' சின்னச்சாமியிடமே கேட்டோம்.

''அதெப்படீங்க கரெக்டா சொல்ல முடியும்? அதுலே வெளையறது கஞ்சி குடிக்கச் சரியா இருக்குது. அவ்வளவுதாங்க தெரியும்!''

''அரசாங்கத்திலிருந்து உங்களுக்குப் பட்டா கொடுத்திருப்பாங்களே, அதில் எவ்வளவு நிலம்னு போட்டிருக்குமே?

''பட்டாக் குடுத்தாங்க. ஆனா அதிலே எவ்வளவு நிலம்னு போட்டிருக்கிறதெல்லாம் தெரியாதுங்க. அதெல்லாம் எதுக்குங்க? கஞ்சிக்குச் சரியா இருக்குங்க. அது போதாதுங்களா?''

சின்னச்சாமியின் இந்தப் பதில்கள் அறியாமையின் ஒட்டு மொத்த வெளிப்பாடு தான் என்றாலும், மண்ணைப் பிடித்து அலையும் இந்த மனித சமூகத்தின் மத்தியில், தனது குடும்பம் கஞ்சி குடிப்பதற்கு எவ்வளவு நிலம் தேவையோ அவ்வளவு மட்டும் போதும் என்ற அவருடைய மனநிலைதான் எத்தனை உயர்ந்தது! இந்த மனித சமுதாயமே அவரிடமும் அவரைப் போன்றவர்களிடமும் சென்று கற்றுக் கொள்ள வேண்டிய மிகவுயர்ந்த மனப்பக்குவமல்லவா அது!

அவர்களின் திருமண முறைகளைப் பற்றி விசாரித்தோம். ''கல்யாணத்தின் போது, பெண்ணுக்கு மாப்பிள்ளை பரிசப் பணம் கொடுக்க வேண்டும். அதோடு, பெண் வீட்டாருக்கு, மாப்பிள்ளை வீட்டார் ஒன்றே கால் மூட்டை சாமை கொடுக்க வேண்டும். அவ்வளவுதான்!'' என்று நம்மை ஆச்சரியப் பட வைத்தார்கள்.

மதியத்திற்கு மேலாகிவிட்டதால், பசி வயிற்றைக்கிள்ள ஆரம்பித்தது. வரகு, சாமை, தினைக் கஞ்சிகள் என்று பலரும் கொண்டு வந்து கொடுத்து உபசரிக்க ஆரம்பித்து விட்டார்கள். அவர்கள் கஞ்சி கொண்டு வந்த பாத்திரங்களெல்லாம் எவர்சில்வர் பாத்திரங்கள்தான் என்றாலும் அவை சரிவரத் துலக்கப்படாததால் அசுத்தமாகத்தான் இருந்தன. ஆனால் அந்தக் கஞ்சிகளில் கலந்திருந்த அவர்களின் அன்பு பரிசுத்தமானது. தேவாமிர்தமாகக் குடித்துவிட்டு அடிவாரத்திற்குத் திரும்ப ஆரம்பித்தோம்.

செங்குத்தான மலைப்பாதைகளில் இறங்குவதற்கு வசதியாக ஆளுக்கொரு கம்பைக் கையில் பிடித்துக் கொண்டு நிதானமாக இறங்கினோம். பாதி வழி இறங்கிய போது, மரத்தடியில் ஒருவர் சட்டையைக் கழற்றி வைத்துவிட்டு, வியர்வை வழியும் வெற்றுடம்போடு உட்கார்ந்து இளைப்பாறிக் கொண்டிருந்தார்.

விசாரித்தோம். ஆண்டி என்ற அவர்தான் மலைமேலிருக்கும் பத்து கிராமங்களுக்குப் போஸ்ட்மேனாம்! ''தினமும் காலையில் மலையிலிருந்து இறங்கி, அடிவாரத்திலுள்ள பொட்டியம் கிராமத்துப் போஸ்ட் ஆபீஸுக்குச் சென்று, கடிதங்களை வாங்கிக் கொண்டு வருவேங்க. புறப்பட்டுப் போய் வர்றதுக்குள் சாயங்காலம் மூணு மணியாயிடுங்க!'' என்றார் மூச்சு வாங்கும் குரலில்.

விடுமுறை நாட்கள் தவிர மற்ற நாட்கள் அத்தனையிலும் ஒழுங்காகச் சென்று வரும் அவருக்குச் சம்பளம் எவ்வளவு தெரியுமா? முந்நூறு ரூபாய்தானாம்! அரசாங்கத்தின் மிகக் கொடூரமான சுரண்டல் இது!' என்று மனத்தில் ஏற்பட்ட கோப உணர்ச்சியோடு அடிவாரத்திற்கு வந்து சேர்ந்தோம்.

இத்தனை தூரம் வந்துவிட்டு முன்னாள் ஜாகீர்களில் ஒருவரையாவது சந்திக்காமல் வந்தால் எப்படி? அடிவாரத்தில் நிலபுலன்களோடு நல்ல வசதியிலிருக்கும் முன்னாள் ஜாகீரான லட்சுமணப்ப ஜடையக் கவுண்டரைச் சந்தித்தோம்.

''ஜாகீராய் இருந்த போது எப்படி அந்த மக்களெல்லாம், மேல் துண்டை எடுதது இடுப்பில் கட்டிக் கொண்டு சாஷ்டாங்கமாகக் காலில் விழுந்தார்களோ, அதே போல்தான் இப்போதும் விழுந்து மரியாதை செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்களாமே? இது நியாயமா? இந்த நூற்றாண்டில் இதை நீங்கள்தான் அனுமதிக்கலாமா?'' — அவரிடம் கேட்டோம்.

''நான் வேண்டாம்னுதாங்க சொல்றேன். அவுங்கதான் கேட்காமே அப்படிச் செய்யறாங்க. இந்தக் காலத்துப் பசங்களெல்லாம் விழமாட்டாங்களே! அப்படி விழாமப் போற அவுங்களை நான் ஒண்ணும் சொல்றதில்லீங்களே!'' என்று சொன்னார் அந்த முன்னாள் ஜாகீர்.

மேலும், ''ஜாகீர் ஆட்சி ஒழிஞ்சு அரசாங்க ஆட்சி வந்திடுச்சுன்னா, தங்களோட வாழ்க்கையே பிரமாதமாயிடும்னு நெனைச்சாங்க. இப்பப் பாருங்க அரசாங்க ஆட்சியிலதான் அவுங்க ரொம்பக் கஷ்டப்படறாங்க!'' என்றார் அவர்.

அவர் சொன்னதிலும் ஒரு பாதி உண்மை தான். அந்த மலைவாழ் மக்களுக்கு, அரசாங்கம் கொடுத்த சுதந்திரம் மட்டும்தான் முழுமையாகப் போய்ச் சேர்ந்திருக்கிறது. மற்ற வசதிகளையெல்லாம் அதிகாரிகள் என்னும் பல 'ஜாகீர்கள் இன்னமும் சுரண்டிக் கொண்டுதான் இருக்கிறார்கள்!

கடைசியாக, நாங்கள் சைக்கிள்களை எடுத்துக் கொண்டு திரும்ப ஆரம்பித்த போது, மறுபடியும் எதிர்ப்பட்டார் அம்மாசிக் கிழவர்.

''என்னங்க, பெரியவரே! .- அந்தக் கதையை இப்பவாவது சொல்லுங்களேன் கேட்கிறோம்!'' என்றோம்.

''ஆண்டவரே! அந்தக் காலத்தில் எங்க முன்னோருங்க, காஞ்சீபுரத்திலேர்ந்து கரி மலைக்கு வந்தபோது...''

''வந்த போது...?''

''அது ஒரு பெரிய கதைங்க, தம்பி!''

''அந்தக் கதையைத்தானே கேட்கிறோம்!''

''நீங்க இப்போ ஊருக்குத் திரும்பற அவசரத்திலே இருக்கீங்க. இன்னொரு முறை வாங்க, அப்போ விலாவாரியாச் சொல்றேன்...!'' என்று சிரித்தார் அந்தக் குறும்புக் காரக் கிழவர்!

— இளங்கோவன்

அட்டையில்: மலைவாசித் தம்பதியான பெருமாள் — வள்ளியம்மாளுடன் குழந்தை அம்பிகா.

போட்டிக் கதை-1

சேவல



முன்னங்கால்கள் மட்டும் லேசாக வெளியே தெரிந்து கொண்டிருந்தன. முதலில் கல்யாணிதான் பார்த்துவிட்டு வந்து எல்லோரிடமும் சொன்னுள்.

அப்போதுதான் சென்னையிலிருந்து வந்த சுந்தரமும் காலேக் கூடக் கழுவாமல் மாட்டுக் கொட்டகைக்கு வந்தார்.

பசு உட்காருவதும் எழுந்திருப்பதுமாக இருந்தது. அடிக்கடி மூச்சை இழுத்துப் பிடித்து 'ஹுக்' என்று முக்கியது.

''பாவம்ப்பா....'' என்று சுந்தரம் நகர்ப்புறத்து அப்பாவித்தனத்தோடு சொல்ல—

''இப்ப என்ன மணி.....?'' என்று கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, ''பத்து மணிக்கெல்லாம் கன்னு போட்டுடும்.'' என்ருர் முருகேசன்.

திபுதிபு வென்று பசங்கள் கூடி விட்டார்கள்.

''சரி சுந்தரம். நீங்க வீட்டுக்குள்ள போங்க. நானும் 'சேர்ம'னும் இன்னைக்கு வேலூர் வரைக்கும் போரேம். நம்ம ஊருக்கு பஸ் வர்றதுக்கு ஏற்பாடு பண்ரேம். அதான். நான், வர்றவரைக்கும் இருங்க. போயிடாதீங்க'' என்ருர்.

முருகேசன் ஆறு மாதத்திற்கு முன்புதான் சுந்தரத்தின் தங்கை கல்யாணியைக் கல்யாணம் பண்ணிக் கொண்டிருந்தார். சமீபத்தில் நடந்த 'பிரிசிடண்ட்' தேர்தலில் வேறு கடச்கட ஜெயித்திருக்கிருர். முருகேசன் கும்பிடுகிற மாதிரி போஸ்டர்கள் சுவர்களில் வெளுத்துப் போய் இருக்கின்றன.

''ஊருக்கு பஸ் வருதா.....? எப்போ?'' இவ்வளவு ஆச்சரியமாகக் கேட்டதற்குக் காரணம், இப்போதுகூட அவர் 'தச்சூர் கூட்டு சாலே'யிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் நடந்தே வந்திருந்தார்.

''எல்லாம் உங்க தங்கச்சி வந்த ராசிதான்!'' முருகேசன் சிரித்தார்.

''நீங்க 'பிரிசிடெண்'டா ஆனதாலே இதெல்லாம் நடக்குது.....'' என்ருர் சுந்தரம்.

தம்மை இன்னும் கொஞ்சம் புகழ்வார் என்று முருகேசன் எதிர்பார்த்தார்.

''சரி, எனக்கு டயம் ஆவுது. நான் போயிட்டு வந்துடறேன்'' என்று முருகேசன் கிளம்பினுர்.

கல்யாணி வந்து, ''வாண்ணு காப்பி சாப்பிடு!'' என்று அழைத்துக் கொண்டு போனுள்.

சுந்தரம் வீட்டிற்குள் நுழைவதற்கு முன்னல் பசுவைப் பார்த்தார். உட்கார்ந்து கொண்டிருந்த பசு எழுந்து நின்றது.

''**அ**சைன்ஸ்ட்டா நின்னது யாரு?'' இட்லி சாப்பிட்டுக் கொண்டே கேட்டார் சுந்தரம்.

''நம்ம முருகேசுதான் ஜெயிச்சுது'' என்று முருகேசனின் அம்மா பெருமிதப்பட்டுக் கொண்டாள்.

''அப்படியா.....? ஆமா, எதிர்த்துநின்னது யாரு?'' என்று தமிழ்ப்படுத்தினுர்.

அவ்வளவுதான்.

எப்படித்தான் அந்த அம்மாளின் முகத்தில் திடீரென்று அப்படி ஒரு விகாரம் ஏற்பட்டதோ தெரியவில்லை.

''அவன்தான்.... சிங்காரம்'' என்ருள்.

''நம்ம சிங்காரமா?''

''நம்ம உப்பத் தின்ன கழுதைதான்.... ஜாதிப் புத்தியக் காமிச்சிட்டான்'' என்ருள்.

முருகேசனும், சிங்காரமும் ஒன்ருகப் படித்தவர்கள்தான். பீஸ் கட்டும்போது, அவ்வப்போதுகடன் கொடுத்ததைத்தான் 'உப்பத் தின்ன கழுதை' என்று சொல்லிக் கொண்டாள். வட்டியில்லாமல் பணம் கொடுத்து உதவியது பெரிய விஷயம்தான். அதற்குப் பதிலாக சிங்காரம், முருகேசனுக்கு 'அல்ஜீப்ரா'வை ஓரளவுக்காவது புரிய வைப்பதற்குள் படாதபாடு பட்டிருப்பான்!

பி.யு.சி. முடிந்ததும் முருகேசனுக்கு சிங்காரத்தின் நட்பெல்லாம் தேவையில்லாமல் போனது. அப்படியே பேசினுலும், ஊர்க்காரன் எவனுவது, 'பறைப் பையனேடை உனக்கு என்னடா வேலே?' என்று கேட்டு விட்டால், முருகேசனுக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியாது.

பத்து மணிக்கு பசுவைப் போய்ப் பார்த்தார் சுந்தரம். இன்னமும் அப்படியேதான் இருந்தது. வெளியே தெரிந்த முன்னங்கால் குளம்புகள் லேசாக ஆடின.

செய்திகளே முந்தித் தருகிற ஒரே நாளிதழான அது — இந்த ஊருக்குப் பதினுெரு மணிக்கு வந்து சேர்ந்தது. சுந்தரம் செய்திகளேப் புரட்டினுர். தமிழ் சினிமா மாதிரி நான்கு கொலே, இரண்டு கற்பழிப்பு, ஒரு எம். எல். ஏ. ஊழல் ...

அதற்குள் மதிய சாப்பாடு. சாப்பிட்டு விட்டு தனியாக மாடியில் போய்ப் படுத்த போது, கல்யாணி ஒரு தம்ளர் மோர் கொண்டு வந்து கொடுத்துவிட்டு—மிகவும் ரகசியமாக — அவளுடைய நாத்தனுர் எப்படி கொடுமைப்படுத்துகிருள் என்று விளக்கினுள்.

''கொஞ்ச நாளானுல் சரியாகி விடுவாள்'' என்றவர், அவள் விளக்கிக் கொண்டிருக்கும் போதே உறங்கிப் போனுர்.

நான்கு மணிக்குக் கல்யாணி எழுப்பிய போது, ''கேட்டுக்குனுதானே இருக்கிறேன். சொல்லு'' என்ருர்.

''நல்லாக் கேட்டே போ... இந்தா காப்பி'' என்ருள்.

தமிழ்மகன்

கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, "தூங்கிட்டேன்" என்றார்.

அம்மாவை ஒருமுறை வரச் சொன்னாள். நாத்தனார் கொடுமைகளை அம்மாவிடம் சொன்னால், நல்ல விளைவுகள் ஏற்படும் என்று நம்பினாள்.

முருகேசன் இன்னும் வரவில்லை என்று தெரிந்தது. 'இனி பொறுப்பதில்லை' என ஊருக்குக் கிளம்பினார். செருப்பெல்லாம் போட்டுக் கொண்டு, 'போயிட்டு வரேன்'னு சுந்தரம் சொல்லும் போது, "இருந்து காலைல போயேம்பா!" என்றாள் முருகேசனின் அம்மா.

"அவசரமான வேலை. அதான். இன்னொரு முறை..." — என்று சொல்லிக் கொண்டே வெளியே வந்தபோது —

அந்தப் பசு —

காலையில் பார்த்த மாதிரியே அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்தது.

"இன்னுமா போடலை?"

பசங்கள் யாரும் காணவில்லை. வெறுப் படைந்து, போய் விட்டிருக்கிறார்கள்.

"கிடேரி, அதான் கஷ்டப்படுது" என்றாள்.

"கிடேரின்னா?"

"தலைப் பிரசவம்" என்றாள்.

"இப்ப என்ன பண்றது?" என்றார்.

"'டேஞ்சர்'தான்" என்றாள், தூண் மறைவிலிருந்தபடி கல்யாணியின் நாத்தனார். கட்டையான குரல் — மணி மொழி என்று பெயர்.

"கன்று உள்ளேயே செத்துடுச்சி போல இருக்குது" என்று சலனமே இல்லாமல் சொல்லிவிட்டு கூளங்களைப் பொறுக்க ஆரம்பித்தாள் முருகேசனின் அம்மா

யோசிக்க யோசிக்க பசுவுக்குக் கஷ்டம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது என்று உணர்ந்தார் சுந்தரம்.

"மாட்டாஸ்பத்திரி பக்கத்திலே எங்க யாவது இருக்குமா?"

மறுபடியும் மணிமொழிதான் "ம்!" என்றாள்.

"எங்கே?" என்று சுந்தரம் பதற்றத்துடன் கேட்கவும், அவள் வெட்கப்பட்டுக் கொண்டு உள்ளே ஓடினாள். அவள் அம்மா வந்து, "சோழவரத்தில் இருக்குதாம்பா... இப்படியமாயிடுச்சே. போறதுக்குள்ள மூடிடுவான்" என்றாள்.

'இவ்வளவு நேரம் என்ன செய்தீர்கள் முண்டங்களே' என்று மனத்துக்குள் நினைத்துக் கொண்டாலும் வெளியில் காட்டிக் கொள்ளாமல், "இப்ப எப்படி?" என்றார்.

"மாட்டு வைத்தியமெல்லாம் அவன்தான் செய்வான்" என்று மெதுவாக முனகினாள்.

"யாரு?"

"யாரு... அந்த நாகன்தான்."

"எங்க இருக்கு அவர் வீடு?"

"அட வேணாம்பா. அவன் வரமாட்டான்."

"பரவால்ல, சொல்லுங்க."



''இனிமே என் வீட்டுப் பக்கமே வராதடா'ன்னு நாக்கப் பிடுங்கிக்கிட்டு சாகற மாதிரி கேட்டுட்டேன். அவன் வரமாட்டான்...''

''எதுக்கும் நான் கூப்பிட்டுப் பார்க்கிறேன்.''

'' 'நம்ம' சிங்காரத்தோட அப்பன்தான்.''

சிங்காரத்தின் வீட்டிற்குச் சுந்தரம் போயிருக்கிறார். சேரியில் நுழைந்ததும் ஐந்தாவது வீடோ? ஆறோ?

ஆறுதான். நல்ல வேளை நாகன் வீட்டில் இருந்தார்.

''வாப்பா, வா!'' என்று திண்ணையைத் துடைத்து உட்கார வைத்தார்.

''நாங்க என்னப்பா பாவம் பண்ணினோம்? எங்களை இந்தப் பேச்சு பேசிப்புட்டாங்களே'' என்றார்.

''சிங்காரம் இல்லையா?''

''இப்போ அம்பத்தூர்ல வேலை செய்யறான். அவனுக்கு இந்த ஊரே வெறுத்துப் போச்சு.''

''மாடு ஒண்ணு, கன்னுப் போட முடியாம அவஸ்தைப்படுது... நீங்க கொஞ்சம் வந்து பார்க்கணும்.''

''...ம்... நம்மகிட்ட இன்னா இருக்குது?... நம்ம முருகேசு எலக்ஷன்ல நிக்குதுன்னு தெரிஞ்சிருந்தா நாங்க ஏம்பா நிக்கப் போறோம்? 'பர்ஸ்ட்'டு சாமிபிள்ளைதான் நிக்கறதாச் சொன்னாங்க. உனக்குத் தெரியாதா, அவரைப் பத்தி? ஆளு, பணம்னு கொலை கூடப் பண்ணுவாரு.

''முருகேசும் நான் நிக்க மாட்டேன்னு சொல்லிடுச்சி. சரிதான்னு சேரில இருக்கறவங்கல்லாம் ஒண்ணாச் சேர்ந்து சிங்காரத்தை நிக்கச் சொன்னாங்க. அப்புறம் பார்த்தா முருகேசு எதிர்த்து நிக்குது. இன்னா பண்றது? போஸ்டர்லாம் அடிச்சாச்சு. வாபஸ் பண்ணிடலாம்னு பார்த்தா சேரி ஆளுங்க வுடலை... ஊரை விட சேரிலதான் ஜனங்க ஜாஸ்திங்கற தைரியம் இவங்களுக்கு...''

''மாடு ரொம்பக் கஷ்டப் படுது.

''சரி, சரி,'' என்று எழுந்து வெளியே வந்தார்.

''தம்பி, உனக்குத் தெரியாது. நான் கொழந்தைல இருந்தே, உங்க வீட்லதான் வேலை செஞ்சேன்... முருகேசை பத்தி எனக்கு நல்லாத் தெரியும். அதுவே வீட்டிற்கு வந்து ஜாதியெல்லாம் பார்க்காம 'மோர் இருந்தா எடுத்தா'ன்னு கேட்குமே...?'' என்று நொந்து கொண்டே நடந்தவர், ''யாரோ முருகேசைக் கெடுத்து விட்டார்கள்'' என்றார்.

''யாரும் கெடுக்கலே. முருகேசன் சரியாயிடுவாரு...'' என்றார் சுந்தரம்.

''எலக்ஷன் நெருங்க நெருங்கச் சேரி ஆளுங்களுக்கெல்லாம் சாராயம் வாங்கியாந்து ஊத்திக்கினு பொம்பளைங்களுக்கு ஜாக்கெட் துண்டு வாங்கியாந்து குடுத்து... ம்... வாபஸ் பண்றதுக்கும் முடியாம போச்சி. நேரா முருகேசு கிட்டப் போய்,

வாசகர் பட்டி மன்றம்-7
பரிசு ரூ 500/-



இளைய தலைமுறையின் அலங்காரம்:
அடடா அற்புதம்!
ஐயய்யோ, அசிங்கம்!

ஆண்கள், பெண்கள் ஆகிய இரு பாலரும் புதிய புதிய ஃபாஷன்களில் தங்களை அலங்கரித்துக் கொள்கின்றனர். இன்றைய இளைஞர் சமுதாயத்தின் அலங்காரம் உண்மையிலேயே அழகாக இருக்கிறதா அல்லது அருவருப்பைத் தருகிறதா? உங்கள் கருத்து என்ன?

அரைப்பக்க அளவில் எழுதி அனுப்பப்படும் கட்டுரைகளில், இரு தரப்பிலும் ஒவ்வொரு கட்டுரை சிறந்ததெனத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பிரசுரமாகும்; இவை தலா ரூ. 100 பரிசு பெறும்.

மற்ற கட்டுரைகளிலிருந்து இரு கட்சிகளுக்கும் பிரதிநிதித்துவம் அளித்து, ஐந்து ஐந்து முக்கியக் கருத்துக்கள் மட்டும் பிரசுரமாகும்; இவற்றுக்கு ஆறுதல் பரிசு தலா ரூ. 10.

ஒவ்வொரு கட்சியும் பெறும் மதிப்பெண் விவரங்கள் இடம் பெறும்.

முடிவு தேதி: 29.9.86

கோரிக்கை: உறையின் மேல் பட்டி மன்றம் — 7 என்று குறிப்பிடவும்.

கீழே விலாசமெழுதி இந்த அரைப்பக்கத்தை முழுவதுமாகக் கத்தரித்து உங்கள் கட்டுரையுடன் இணைக்கவும்.

பெயர்: ....

விலாசம்: ....

....

முப்பது ஆண்டு உறவு



கடந்த முப்பது ஆண்டுகளாக எல்.ஐ.ஸி. உங்கள் திட்டமிட்ட மகிழ்வான குடும்பத்தின் ஒரு அங்கமாக இருந்து வந்திருக்கிறது. எல்.ஐ.ஸி. உங்கள் மகிழ்விலும் துயரத்திலும், ஏற்றத்திலும் தாழ்விலும், பங்குபெற்று வந்துள்ளது.

நீங்கள் முன் யோசனை உடையவர். உரிய வயதில் ஆயுள் காப்பு பெற்றதோடு பெருகி வரும் குடும்பச் செலவுகளை ஈடு செய்ய அவ்வப்போது உங்கள் ஆயுள் காப்புத் தொகையையும் பெருக்கி வந்துளளீர்கள்.

உரிய நேரங்களில் திட்டமிட்டு நீங்கள் பெற்றுக் கொண்ட ஆயுள் காப்பு பாலிஸிகள் உங்கள் மக்களின் கல்வி, வாழ்வு தொடக்க செலவு முதலியவற்றை ஈடுகட்ட உதவியதோடு, அவ்வப்போது எதிர்பாராத பண நெருக்கடிகளையும் சமாளிக்க உதவியுள்ளது.

எல்.ஐ.ஸி. நீங்கள் ஒரு வீடு கட்டிக் கொள்வதிலும் கை கொடுத்துள்ளது. பணி ஓய்வு பெற்றபின், இங்கிருந்துதான் நீங்களும், உங்கள் வாழ்க்கை துணைவியும் உங்கள் பேரன்களும், பேத்திகளும், துள்ளியாடுவதையும் பொங்கிச்சிரிப்பதையும், வானவில் கனவுகளைத் தூத்துவதையும் காணப்போகிறீர்கள்.

குடும்ப மகிழ்வை காப்பதோடன்றி நாட்டு நலனை பேணுவதிலும் எல்.ஐ.ஸி. யின் பங்கு மகத்தானது.

மாநில அரசுகள் மற்றும் அரசு வாரியங்களுக்கு பெருந் தொகைகளைக்கடனாக அளிப்பதன் மூலம் மின்சார உற்பத்தி, வீட்டு வசதி, குடிநீர்த்திட்டம், போக்குவரத்து, என்று சமூக நலத்துறைகளின் வளர்ச்சிக்கு எல்.ஐ.ஸி. உதவுகிறது.

உங்களுக்கு உங்கள் குடும்பத்தின் மீதும், நீங்கள் வாழும் சமூகத்தின் மீதும் உள்ள அன்பை குறிக்கும் பொருள்பொதிந்த சின்னம்—ஆயுள் காப்பு.

இந்த முப்பதாவது ஆண்டில் எல்.ஐ.ஸி. தன்னை மீண்டும் உங்கள் சேவைக்கே அர்ப்பணித்துக் கொள்கிறது.

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

30 ஆண்டுகள் மக்கள் சேவையில் 1956-1986

Efficient/Bom/LIC-Tam

'நாங்களும் உனக்கே பிரசாரம் பண்றோம். ஏன் இப்படிப் பணத்தைச் செலவு பண்றேன்'னு கேட்டேன். 'டேய்... தோத்துறப் போறோம்னு பயந்துட்டியா...? இந்த ஊட்டுப் பக்கமே வராதடா'ன்னு சொல்லுச்சி'' கண்களைத் துடைத்துக் கொண்டார்.

வீடு நெருங்கியதும்,

''ஒரு நாலணாவுக்கு வெளக்கெண்ணெய் வாங்கியாறச் சொல்லு. ஒரு தாம்புக் கயிறு இருந்தா எடுத்துக்கினு வா...'' துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டு துரித கதியில் இயங்கினார்.

பசுவின் பின்கால், முன்கால் இரண்டையும் கயிற்றில் கட்டி, மெதுவாகப் பசுவைக் கீழே தள்ளினார். கன்று சுலபமாக வெளியே வருவதற்காக விளக்கெண்ணெயை நன்முகப் பூசினார்.

''பொன்னியம்மா. நல்லபடியா ஆயிட்டா கற்பூரம் கொளுத்தரண்டி'' என்று வேண்டிக் கொண்டார். கையை உள்ளே நுழைத்து, ப்பா... சுந்தரத்திற்கு உடம்பெல்லாம் தகித்து வியர்வை கொட்டியது. பசுவின் கழுத்தை அவர்தான் பலமாகப் பிடித்துக் கொண்டிருந்தார்.

வலியைப் பசுவால் வாயால் சொல்ல முடியாவிட்டாலும், அதன் கண்களில் சூடாகக் கண்ணீர் வழிந்தது. விழி பிதுங்கியது.

''பாவம்!'' என்றார் சுந்தரம்.

கன்றின் தலையை வெளியே இழுத்தாகி விட்டது. கன்று சப்புக் கொட்டியது.

''கன்னுக்கு உயிர் இருக்குதுப்பா... ப்பா... நல்லபடியா முடிஞ்சுது.'' அதன் நாக்கை நீரால் நனைத்தார். வெளியே வந்து விழுந்தது ஆண் மகவு.

பசுவை அவிழ்த்து விட்டதும் துள்ளி யெழுந்து கன்றை நக்க ஆரம்பித்தது.

''ஏம்மா, மூத்திரப்பை வுழுந்ததும் பின்னால கொஞ்சம் சுடுதண்ணி ஊத்துங்க... வெது, வெதுன்னு சூடு இருந்தாப் போதும்..''

நாகனிடம் யாரும் பேசவில்லை.

பத்து ரூபாய் எடுத்துக் கொடுத்தார் சுந்தரம்.

''என்னங்க இது... ச்சும்'' என்று வாங்க மறுத்தார்.

போய் விட்டார்.

சுந்தரத்திற்கும் நேரமாகிவிட்டது.

அவசர அவசரமாகக் கிளம்பி, தெருப் பக்கம் வந்து வேகமாக நடந்த போது — சண்முக நாடார் கடையில்,

''நாலணாவுக்கு கற்பூரம் குடு நாட்டாரே'' என்று நாகன் சந்தோஷமாகக் கேட்டது சுந்தரத்தின் காதில் விழுந்தது.

சுந்தரத்திற்கு அதே விநாடியில் 'குபீர்' என்று ஒரு சந்தோஷம் உடலெங்கும் பரவியது.

மாணிக்கவாசகர் இப்போது வந்தால்...



தில்லைக் கூத்தனைத் தரிசனம் செய்த கையோடு கடலூர் — திருப்பாதிரிப் புலியூரில் எழுந்தருளியிருக்கும் பாடலீஸ்வரரைத் தரிசனம் செய்யும் ஆவல் மிகுதியால் ஓடிவருகிறார் மாணிக்க வாசகர். அது நல்ல மழைக்காலம் ஆதலால் அக்கரையிலிருக்கும் பாடலீஸ்வரர் கோயிலுக்குப் போக முடியாத அளவுக்குக் கெடிலம் நதிக்கரையில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. 'பாடலீஸ்வரா! உன்னை உடனடியாகத் தரிசிக்க முடியவில்லையே!' என்று உருகியபடியே, வெள்ளம் வடியக் காத்திருக்கிறார். அப்போது திடீரென்று அவர் முன் ஓர் அந்தணர் தோன்றி, ''கோயிலுக்குத்தானே போக வேண்டும்; வா என்னோடு!'' என்கிறார்.

''இத்தனை வெள்ளத்தில் எப்படிப் போவது?'' — திகைக்கிறார் மாணிக்கவாசகர்.

''வெள்ளத்தைப் பற்றி உனக்கென்ன கவலை? வா, என்னோடு!'' என்று அழைத்துச் செல்கிறார் அந்தணர்.

அவர் போகப் போக, கெடிலம் நதியும் நகர்ந்து கொண்டே போய், கோயிலுக்கு அந்தப் பக்கத்தில் சென்று விடுகிறது. ''ஓ! இது அவன் செயலே! அந்தணனாக வந்து தம்மை அழைத்துச் சென்றது அவனே!'' என்று நெஞ்சுருகிப் போகிறார் மாணிக்கவாசகர்.

— இது கடலூரிலுள்ள பாடலீஸ்வரர் கோயில் தலபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது என்கிறார்கள்.

அது சரி; அதே மாணிக்கவாசகர், இப்போது கடலூருக்கு வந்திருந்தால், அப்போது கெடிலம் நதி வெள்ளத்தைக் கண்டு திகைத்து நின்றது போலவே, இப்போது வாரன்ஸ் ரோடிலுள்ள ரயில்வே கேட்டில் மாட்டிக் கொண்டு விழித்திருப்பார். சிவபெருமானும், எங்கே தான் கோயிலை விட்டு வெளியே வந்தால் யாராவது தமது சிலைகளைக் கொள்ளையடித்துக் கொண்டு போய் விடுவார்களோ என்றஞ்சிப் பேசாமல் இருந்திருப்பார். மாணிக்கவாசகர் பாடு படுதிண்டாட்டமாகியிருக்கும். ஒரு மேம்பாலம் இல்லாததால் அத்தனை அவஸ்தை!

சருக்கம் — 23

ஜோதி எங்கே?

நாட்களை மாதங்கள் விழுங்க மாண்புமிகு முதலமைச்சரின் ரணங்களையும் ரணசஞ்சீவி விழுங்கியது.

நெஞ்சில் ஆழமாகப் பதிந்த குத்துவாளால் ஏற்பட்ட சீழ் குறையலாயிற்று. தசை பாகங்கள் மெல்ல மெல்லக் கூடி வளர்ந்தும் வந்தன.

நீராகார உணவு அருந்துவதை விட்டுச் சிறிது சிறிதாகச் சோறு அருந்தும் நிலைக்கும் வந்தார். இளைப்பில் சற்றே மாறுதல்.

கழுத்தில் பலத்த கட்டு இருந்தும் பலரிடம் முகமலர்ச்சியுடன் பேசவும் செய்தார்.

மக்கள் செய்த பிரார்த்தனைகள் வீண் போகுமா? எத்தனை எத்தனை கோயில்வரப்பிர சாதங்கள்! அத்தனையுமாகச் சேர்ந்துதானே பாண்டிய மன்னனை மூலிகை பறித்து அனுப்பச் செய்தது?

சேக்கிழார் இச்சம்பவத்தால் பாண்டிய நாட்டினிடம் பேரன்பை *மனத்தில் பூட்டி வைத்துக் கொண்டார். நன்றிக் கடனோடு போற்றவும் செய்தார்.

ஆறு மாத காலத்துக்குள் சேக்கிழாருக்கு ஏற்பட்ட கழுத்து ரணம் துப்புரவாக ஆறிவிட்டாலும் அது ஒரு வடுவாகவே இருந்தது. அது ஒரு நினைவு.

தம்முள் பலவாறு இரகசியமாக வருந்திக் கொண்டதுமுண்டு. இது சலனமற்ற நெஞ்சில் ஜோதியின் சலனம் எப்படியோ தம்மையறியாமல் நுழைந்து விட்டதன் பிராயச்சித்தமாகவே எண்ணினார். இனி திருத்தொண்டர் புராணத்தைத் தொட்டு முடிக்கிற வரை அந்த நெஞ்சில் என்னின் மூக்கத்தனைக் கூட எட்டிப் பார்க்கக் கூடாது என்கிற சங்கல்பத்தை மேற்கொண்டார். ஆனால் ஜோதி நிழலாகத் தொடர்வதை அவரால் மறுத்துக் கூற முடியவில்லை. அது நடவாத செயலும் கூட!

அவளது கார்சதங்கையோ, அம்பலவாணனின் எடுத்த பாதத்து எழிற் சிலம் பொலியோ அந்தத் தமிழ்ச் செவிகளில் எப்போதும் ரீங்கரித்துக் கொண்டே இருக்கிறது. மலர்ச்சிலம்போ? மங்கையின் காற் சிலம்போ?

எந்த ஓர் உதயத்துக்குப் பின்னேயும் ஒரு வெளிச்சம் உண்டு: ஜோதியுண்டு!

சொல்லப் போனால் இதை மன்னனே கட்டளையிட்டிருந்தாலும் ஏற்று இருக்க மாட்டோமா?

ஜோதிதிருத்தொண்டர்கள்கதைகளைநாட்டியமாக ஆடிவர, அந்தத் திருத்தொண்டர்கள் கதைகளை நாமும் சைவ நெறிக்குட்பட்டு ஆராய்ந்து வைத்திருக்க, இரண்டும் தெய்வாதீனமாகச் சங்கமிக்க, இப்படி ஒரு மாக்கதை எழுதுகிற உந்தல் இயல்பாகவே தோன்றியிருக்கிறதோ?

சேக்கிழார் இவ்விதமாகவெல்லாம் எண்ணிப் பார்க்கிறார். ஆயினும் அவரை எழுதப் பணித்த ஒரு நல்வினை, ஊழாய் உறைவதையும் அவர் அறிவார்.

ஆனால் இதுதான் உண்மையா?

அந்த உண்மையுள் ஒளிந்திருக்கும் உருக்கமான கதையை யாரே அறிவர்? அதுவன்றோ ஊழின் பெருவிளையாட்டு!

பவானி பட்டீச்சுரப் பெருமானுக்குப் பெருத்த வழிபாடுகளை நடத்திவிட்டு அன்று தான் திரும்பி இருந்தாள்.



ஒட்டக்கூத்தர் ஏதோ முக்கியச் செய்தியாகப் பார்க்க வேண்டும் என்று சொல்லியனுப்பியதற்கு மறுத்து விட்டாள்.

மகாசக்கரவர்த்தி குலோத்துங்க சோழரே கறுப்பு நிறம் கொண்டிருக்க, தன்னை அமாவாசை என்று கூறி நையாண்டி செய்தவரல்லவா? இவர் அழைத்து ஏன் போக வேண்டும்? அமைச்சர் பதவி என்பது சாசுவதமா? எவருக்குத்தான் சாசுவதம்? அது ஒரு நிலையில்லாக் காயம் போல.

விவசாய அமைச்சர் என்கிற நிலைய

* பெரிய புராணத்தில் பாண்டிய நாட்டைப் பற்றி எழுதுகிறபோது அதுதான் தென்னவர் நாடு என்றும் திருநாடு என்றும் போற்றிப் புகழ்ந்து இருக்கிறார்.

டைந்து. இதுவரை ஒரு நெல்மணியைக் கூட கையூட்டாக (லஞ்சம்)ப் பெறுமலிருக்கிறோமே... இந்தச் சீலம்தான் என்றும் சாசுவதம்! இந்தப் புகழே என்றும் சாசுவதம்!

ஆனாலும் அவளுள் முல்லையாய்ப் படர்ந்திருக்கும் ஓர் உண்மையை அவள்தானே அறிவாள்? அது ஒரு கறுப்பு முல்லை போல இருட்டில் பூத்த இரகசியம்.

அன்றும் கூட ஒட்டக்கூத்தர் 'நீ எவரையேனும் காதலிக்கிறாயா?' என்று கேட்டதற்கு 'ஆம்' என்று எவ்வளவு துணிவாக மறுமொழி கூறினாள்! பொய் சொல்ல நெஞ்சம் விரும்பவில்லை. அவள் மானசீகமாகச் சேக்கிழாரைக் காதலிக்கிறாள். அது அவளுக்கு மட்டுமே தெரியும்!

ஆயினும் அது ஒரு குருட்டுக் கனவு! ஊமைச் சங்கீதம்! அவளறியாமலில்லை.

ஜோதி விவகாரம் ஜோதி வடிவானது; பவானி விவகாரம் இருட்டில் பூத்துவிட்ட கறுப்பு முல்லை விவகாரம்.

இன்னும் சில தினங்களில் திருவாதிரை நட்சத்திரோதயமிருந்தது. அந்த உதயத்தில் மாண்புமிகு முதலமைச்சர் திருத்தொண்டர் மாக்கதையை எழுதத் தொடங்க இருந்தார்.

இதற்கு நடுவில்...

ஒரு நடை தமது பிறந்த மண்ணான குன்றத்தூருக்குப் போய், அன்னையின் பரிபூரண வாழ்த்தினையும் பெற்றார்.

குடந்தைக்குச் சமீபத்திலிருந்த திருநாகேச்சுரப் பெருமானை, குன்றத்தூரில் எழுந்தருளச் செய்துவிட வேண்டும். தமது ஓய்வுக் காலத்தில் இக்கோயில், வழிபாட்டுத் தலமாக இருக்க வேண்டும் என்பதைச் சோழ மாமன்னனிடம் எடுத்துக்கூற, அநபாயனும் தங்குதடையின்றி ஒப்புதல் தெரிவித்து விட்டான்.

சோழர் குடும்பமே குன்றத்தூரை அடைந்திருந்தது.

சேக்கிழார் எழுப்பப் போகும் திருநாகேச்சுரர் ஆலயத்துக்கு எல்லோரும் உடனிருந்து அடிக்கல் நாட்டி வைத்தனர். ஜோதியும் வந்திருந்தாள். ஆனால் ஒட்டக்கூத்தருக்கு வருவதற்குச் சந்தர்ப்பமில்லாமல் போய்விட்டது. தந்தையார் சிரார்த்தத்தை முன்னிட்டு அவரது சொந்த ஊரான *மலரிக்குச் சென்றுவிட்டார்.

ரேவதி நட்சத்திரத்தில் குன்றத்தூர் வேளாண் குடிமக்கள் சூழ, அங்கே திருநாகேச்சுரர் கோயிலுக்கான அஸ்திவாரக் கல்லை நாட்டி மகிழ்வித்தார் அநபாய குலோத்துங்க சோழ மகாசக்கரவர்த்தி.

குன்றத்தூர் மட்டுமல்லாது, தொண்டை மண்டலமே குலோத்துங்க சோழ மாமன்னனைப் போற்றிப் புகழ்ந்தது.

சேக்கிழார் வீட்டில் விருந்து தடபுடலாக நடக்கவிருந்தது.

தமிழ் பிறந்த வீட்டில் உணவு கொள்வதில் தாங்காப் பெருமை கொண்டார் குலோத்துங்க சோழ மாமன்னர்.

ஆனால் ஜோதி?

அவள் விருந்தில் கலந்து கொள்ளவில்லை.

ஒருவேளையுணவு; அதுவும் சேக்கிழார் உண்டு வைத்த இலையில் உண்ணக் கூடிய நாளாயிற்றே அது! இது இங்கு நடைபெறச் சாத்தியம்தானா?

சேக்கிழாருக்கும் புரியவில்லை; ஜோதியாலும் புரிந்து கொள்ள முடியவில்லை.

---

* கூத்தர் பிறந்தவூர் பற்றிப் பல்வேறு கருத்து வேறுபாடுகள் உண்டு. 'மலரி' என்றுதான் வரலாறு கூறுகிறது. 'மலரிவரும் கூத்தன் தன் வாக்கு' என்பது தண்டியலங்கார மேற்கோள்.

கோவி.மணிசேகரன்



அருள்வாக்கு



வேலை எதுவும் செய்யாமல் வெறுமனே உட்கார்ந்து கொண்டோ படுத்துக் கொண்டோ இருக்கும் போது எதையாவது ஒன்றையே நினைப்பது, அல்லது அதைக் குறித்த சிலவற்றை மட்டும் நினைப்பது என்றால் முடிவதில்லை. தொடர்பில்லாத ஸமாசாரங்களிலெல்லாம் மனஸ் பிய்த்துக் கொண்டு கிளம்புகிறது. ஆனால் ஒரு வேலையில் ஈடுபட்டு விட்டால் அது ஸம்பந்தப்பட்ட எண்ணங்களுடன் மட்டும் மனஸ் நின்று விடுகிறது. 'ஈச்வர த்யானம் செய்யலாம்' என்று கார்யமில்லாமல் உட்கார்கிற போது போகப்படாத எண்ணத்திலெல்லாம் மனஸ் பாய்கிறது. இப்படிப் பல பேர் வந்து சொல்லிக் கொண்டு அழுகிறார்கள். அதுவே ஈசுவரனைப் பூஜை பண்ணுகிறேன் என்று ஆரம்பித்து, அதற்கான காரியங்களைச் செய்து கொண்டு போகும் போது அப்போது பல எண்ணங்கள் உண்டானாலும், ஸம்பந்தமேயில்லாத எண்ணங்கள் கூடக் கொஞ்சம் வந்தாலும் வகை தொகையே இல்லாமல் சித்த வ்ருத்தி சிதறுவது என்று இல்லாமல், அதற்கு ஒரளவில் கட்டுப்பாடு ஏற்படுகிறது.

பூஜைதான் என்றில்லை. ஒருத்தன் சீட்டாடுகிறானென்றால் கூட அப்போது அதைக் குறித்த எண்ணங்களில்தான் அவனுடைய மனஸ் கான்ஸன்ட்ரேட் ஆகிறது. ரொம்பவும் சபல சித்தமுள்ள ஒரு குழந்தை கிட்டிப்புள் விளையாடும் போது அதனுடைய சித்தம் அதிலேயே தான் இருக்கிறது. "பக்ஷணம் தருகிறேன் வா" என்று தாயார்க்காரி கூப்பிட்டால் கூட "வேண்டாம் போ" என்று சொல்லிவிட்டு, நாக்கைத் துருத்திக் கொண்டு விளையாட்டிலேயே மும்முரமாக இருக்கிறது.

சாஸ்திர கர்மா என்று மகான்கள் வகுத்துக் கொடுத்திருப்பவை இரண்டு விதத்தில் நல்லது பண்ணுகின்றன. மற்ற காரியங்கள் அவசியமற்றதிலோ தப்பானதிலோ கூட மனஸை நிறுத்துகின்றனவென்றால் சாஸ்திர கர்மா எண்ணங்களில் நல்லவையானவற்றிலேயே மனஸ் போகும்படி செய்கின்றன. இது ஒன்று. கெட்டவையான எல்லாவற்றிலிருந்தும் அவை மனஸைத் திருப்பி விடுகின்றன. இது இரண்டாவது நன்மை.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

ஜோதி தனித்திருந்த போது அங்கு சேக்கிழார் வந்தார். எழுந்து கொண்டாள்.

"ஜோதி! இந்தச் சங்கல்பத்தை இந்த ரேவதியில் நீ விட்டுக் கொடுக்கக் கூடாதா?"

"கூடாது!"

"இது இங்கு சாத்தியமாகிற செயலா?"

"நினைத்தால் எங்கும் சாத்தியமாகும்."

"இது எங்கேனும் சிறு மூச்சு விட்டாலும் கூட நம்மைப் பற்றி வேறுவிதமாகப் பேச வைத்து விடும்!"

"இப்போது மட்டும் பேசாமல் இருக்கிறார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?"

ஒருகணம் அதிர்ந்து மறுகணம் தலை நிமிர்ந்து ஜோதியைக் கவனிக்கிறார்.

ஏ, நெஞ்சே! சலனம் வேண்டாம். ஒரு முறை ஏற்பட்ட சலனத்துக்கு அங்கே ஆழமாக ரணப்பட்டு ஏறத்தாழ ஆறு மாத காலம் படுக்கையிலிருந்தது போதும்! இனியும் இப்படியான சலனத்துக்குட்பட்டுப் பசியத் துளிர்த்து இருக்கும் இலைகளைச் சருகாக்க முனையாதே! அந்த இலைகளுக்கிடையே மொட்டரும்பி மலர்ந்து மணக்கப் போவது மாக்கதையாம் திருத்தொண்டர் புராணம்! அந்த இறவாப் புகழ் இப்போது துளிர்த்து இருக்கும் இலைகளில்தாம் இருக்கிறது...!

"ஆயிரம் பேர் பேசட்டும். நாம் மனச்சாட்சியுடன் தவம் செய்கிறோமா? அது போதும்!"

"அப்படியானால் இங்கே மட்டும் ஏன் தடை?"

"இது என் வீடு."

"அப்படியானால் நீங்கள் உண்ணுகிற போது நான் வந்து பிச்சை கேட்பேன். பலர் இருந்தும் ஒரு பிச்சைக்காரிக்கு அளிப்பது போல் ஒரு கவளம் எச்சில் உணவை அளிக்கலாம் அல்லவா?"

மீண்டும் யோசிக்கிறார் சேக்கிழார்.

"இந்த நாடகமும் ஒரு சந்தேகக் காட்சியே! இந்த ரேவதியில் மட்டும் இதனை மறந்து விடு ஜோதி!"

ஜோதியின் நீல நயனங்களில் நித்திலங்கள் இரண்டு அரும்பி வெடிக்கின்றன. வெடித்ததால் ஏற்பட்ட நீர்ப்படர்வில், சேக்கிழார் முகம், கலைபட்ட தடாகத்து நீர்ப் பிம்பமாய் மங்கலாக அலைமோதுகிறது!

"நேரமாகிறது ஜோதி! பலரும் காத்திருக்கிறார்கள்!"

"சென்று வாருங்கள் பிரபோ! இனி ஜோதியைப் பொறுத்தமட்டில் இருபத்து ஆறு நட்சத்திரங்கள்தாம்! அவளுக்கு இனி ரேவதி நட்சத்திரமில்லை; அவளும் ரேவதி நட்சத்திரமல்ல."

கரம் கூப்புகிறாள் ஜோதி; கண்கலங்குகிறது.

சேக்கிழார் புறப்படுமுன் ஜோதியே அலைமோதிய கடற்புயலாய்ச் சீற்றம் கொண்டு நடந்து விரைந்தாள்.

இனி ரேவதியில்லை, ரேவதி இல்லை......

சேக்கிழார் நெஞ்சில் மீண்டும் இரகசிய சலனம்; இதயத் தடாகத்தில் பசிய இலைகள் அசைகின்றன.



"நான் விளையாட்டில் இன்ட்ரஸ்ட்டா இருக்கிறது, என் மனைவிக்குப் பிடிக்கலே."

"அடடா, என்ன விளையாடறே, நீ?"

"ரம்மிதான்!"

— கதிர்வேல்

ஓ... திருத்தொண்டர் புராணம் அங்கே அரும்பாகி, மலர்ந்து, மணம்வீச வேண்டுமே!

அன்று மாலையே அனைவரும் தலைநகர் நோக்கிப் புறப்பட்டாக வேண்டும். அரசியல் விவகாரங்கள் கங்காபுரியில் தலைக்குமேலிருந்தன.

ஆயினும் சேக்கிழார் இருதினங்கள் குன்றத்தூரில் தங்கியே புறப்பட இருந்தார்.

சித்திரை வெயில் கொடுமையால் அரச குடும்பம் மாலைப் போதிலேயே புறப்பட்டது.

அனைவருக்கும் விடை தருகின்றனர், சேக்கிழாரும் அவரது அன்னையாரும்.

தம்பி பாலறாவாயனும் சோழமன்னனுடனேயே புறப்பட்டுக் கொண்டான்.

"சேக்கிழாரே! ரோகிணியில் புறப்பட்டு நேரே தில்லைக்கு வந்து விடுங்கள். நாங்களும் வந்து விடுகிறோம். உங்கள் விருப்பம் போலச் சித்திரைத் திருவாதிரையில் திருத்தொண்டர் புராணத்தை அம்பலவன் முன் ஆரம்பித்து வைக்கிறீர்கள். எனது எதிர்பார்ப்பு அடுத்த சித்திரைத் திருவாதிரையில் முடித்து விடுவீர்கள் என்பது! எனது வாழ்நாளில் நான் கண்ட மிகப் பெரும் தமிழ்க் கருவூலம் இதுதான்!"

அப்படியே செய்வேன் அநபாயா!"

குலோத்துங்க சோழ மாமன்னன் புறப்படுகிறான்.

"ஆமாம்; ஜோதி எங்கே?" என்றான் அநபாயன்.

சேக்கிழாரும், "நானும் அவளைத்தான் தேடுகிறேன். என்னிடம் விடைபெறாமல் போக மாட்டாளே!" என்று கூறிச் சுற்றுமுற்றும் கவனிக்கிற போது...

பவானி அப்போதுதான் நாவசைத்தாள்: "நல்ல வெயிலில் வல்லரசியை அழைத்துக் கொண்டு புறப்பட்டு விட்டார்கள். நானும் வெயில் கொளுத்துகிறது என்று சொல்லிப் பார்த்தேன். 'நான் சுட்டுக் கொண்ட சூட்டை விட இந்த வெயில் என்னையொன்றும் சுடாது' என்றார்கள்."

சேக்கிழார் கண்ட அதிர்ச்சியைக் காட்டிலும் அநபாயன் கண்ட அதிர்ச்சிதான் அளவுக்கு மீறியதாக இருந்தது.

அநபாய குலோத்துங்க சோழ மாமன்னன் குடும்பம், கங்கை கொண்ட சோழபுரத்தையடைந்தது.

அரண்மனையடைந்த நேர முதல் மனம் ஒரு நிலைப்படவில்லை. ஒருவாறு உண்டு முடித்துச் சயன அறையில் ஓய்வெடுக்கலானான் குலோத்துங்கன்.

இன்னமும் மலரிக்குச் சென்ற ஆசான் ஒட்டக்கூத்தர் வேறு திரும்பவில்லை.

இன்றைக்கு ஆறும் நாள்...

தில்லையில் திருத்தொண்டர் புராணம் தொடங்கும் திவ்வியத் திருநாள். ஆசானில்லாமல் இந்த வைபவமா?

முன்பு, பொன் வேய்ந்த திருநாளன்று ஏனோ மறுப்புக் கூறிவிட்டார். பின்பு கேள்விப்பட்டதில் புலமைக் காய்ச்சல் என்று காற்று சுமந்து வந்தது.

ஒட்டக்கூத்தன் என்ன கெட்டா போய் விட்டான்?

ஒட்டக்கூத்தருக்கு ஏனோ இந்த ஒழுங்கிலாச் சிந்தனை? ஜோதிபால் சொப்பனம் காண்பதோ, பவானிபால் சுப்பணம் காண்பதோ கவிஞர்க்குரிய காமர்சனையாக இருந்தாலும் எல்லாருமே சுஜாதையாக இருந்துவிட முடியுமா? எல்லா நாட்களும் பௌர்ணமிகளாக இருந்துவிட முடியுமா? அதிலும் ஜோதி சித்திரா பௌர்ணமி! பவானியோ மகாளய அமாவாசை! இவை புரியாமல் போனதென்ன?

மஞ்சத்தில் புரண்டு இவ்விதமாக மனத்தை அலைமோத விட்டுக் கொண்டிருந்தான் குலோத்துங்க சோழ மாமன்னன்.

சூரிய குலத்தில் பிறந்து, கோவிந்தராசப் பெருமான் சிலையைக் கடலில் தூக்கி எறிந்தது கூட இப்போது பெரிதாகத் தோன்றவில்லை.

ஜோதி ஏன் குன்றத்தூரை விட்டு, எவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்டு விட்டாள் என்பதுதான் இப்போது கவலைக்குரியதாக இருந்தது.

திருத்தொண்டர் புராணத்தை இனிது நிறைக்க எடுத்துக் கொண்ட முயற்சி, ஆசானையே — ஒட்டக்கூத்தரையே வெறுக்கச் செய்துவிட்டது என்றால்...

நீண்ட பெருமூச்சு.

எதிர்ப்புறத்துச் சாளரத்தின் வழியாகச் சூரிய வெளிச்சம் பளிச்சிட்டதால் சற்றே ஒருக்களித்துப் படுக்கிறான் குலோத்துங்கன்.

அப்போது...

எங்கோ காற்சிலம்பொலி காதுகளில் லயப் பிரமாணத்தை ஓதுகிறது.

ஆ! ஜோதி வருகிறாளோ?

காற்சிலம்பொலி கதவண்டை நிற்கிறது.

எழுந்து கொள்ள முயன்ற போது கேட்ட குரலொலி...

"உள்ளே வரலாமா?"

தியாகவல்லியா?

தென்றலை எதிர்பார்த்தோம்; புயல் வந்து நிற்கிறது!

(தொடரும்)



ஸர்ஃப் வாங்குவது மேலும் புத்திசாலித்தனம்
''தெரிஞ்சே சொல்றேன்: ஸர்ஃப் வாங்கறதைப் போல புத்தியுள்ள காரியம் எதுவுமே இல்லே. பவர் பேக்டு தயாரிப்பு ஆச்சே. அபார சக்தி— கொடுத்த பணத்துக்கு அமோகமாப் பலன்.''
அமோகமாப் பலனா? ஸர்ஃப் விலைதான் அதிகமாச்சே, லலிதாம்மா?
''அண்ணாச்சி, எத்தனை விதமா லாபம் தருது. உங்க கண்ணுல படலியா? ஸர்ஃப் ஒண்ணுதானே எதையும் வெள்ளைவெளேர்னு வெளுக்குது. அதனால, பார்வைக்கு எப்பவுமே புதுக்கருக்குதான். எந்த நாளுமே பண மிச்சம். கணக்குப் பாருங்க— அமோகமாப் பலன்னு இதானே?''
சரி, அப்படி என்னதான் இருக்கு ஸர்ஃப்லே?
''நிறையவே இருக்கு. அளவுக்கு அளவு 1 கிலோ சாதா பவுடருக்கு ஈடு ஒரு ½ கிலோ ஸர்ஃப். அதாவது 1 கிலோ சாதாப் பவுடர் எவ்வளவு துணிகளை வெளுக்குமோ, அதையே பாதி அளவு ஸர்ஃப் வெளுத்திடும். பார்த்துக்குங்களேன், ஸர்ஃப் நமக்கு அதிக லாபம்தானே?''
1 கிலோ சாதா பவுடர்
½ கிலோ ஸர்ஃப்
அப்ப ஸர்ஃப் ஒரு வகையில ஈடு செய்துடுது?
''ஏன், பல வகையில லாபம் நமக்கு. மலிவுச் சரக்கு வாங்கறதுக்கும் மதிப்புள்ள பண்டம் வாங்கறதுக்கும் வித்தியாசம் உண்டே. அதனாலதான் சொல்றேன் ஸர்ஃப் வாங்கறதுதான் மேலும் புத்திசாலித்தனம்.''
POWER PACKED
Surf
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு



கறுப்புக் கொடிகள் கண்டனங்கள்!

②

பம்பாய்ப் பேச்சு வார்த்தைகளுக்கு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு பூரண சுயாதிக்க உரிமையுடன் சுதந்திர பாகிஸ்தானைப் பெற்றார் ஜின்னா. சுதந்திரம் பெற்ற இந்தியாவிடமிருந்து அல்லாமல் நேரடியாக பிரிட்டிஷாரிடமிருந்தே பெறவும் செய்தார். ஆனால் அந்தப் பாகிஸ்தான் பரப்பளவில் காந்தியும் ஸி. ஆரும் 1944 இல் எதை அளிக்க முன்வந்தார்களோ அதுவாகவே இருந்தது. ஓர் அங்குலம் கூட அதிகமில்லை. வங்கத்திலும் பஞ்சாபிலும் முஸ்லிம்கள் சிறுபான்மையினராய் இருந்த பகுதிகள் பாகிஸ்தானில் சேர்க்கப்படவில்லை. கல்கத்தாவும் அமிர்தசரஸும் இடம்பெறவில்லை. ஜின்னா 'உமி' என்று எதை ஒதுக்கித் தள்ளினாரோ அதை மட்டுமே அடைந்தார். 'இதை அவர் 1944 லேயே ஒப்புக் கொண்டிருக்கக் கூடாதா? அப்படி ஏற்றுக் கொண்டிருந்தால் 1947 இல் நடந்த படுகொலைகளும் மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்ததும் தவிர்க்கப்பட்டிருக்கலாமே? தொண்ணூறு சதவித சுயாட்சியானது, பூரண சுதந்திரமாக மலர அதிக காலமாகியிராதே' என்றால் நம்பிக்கையின்மைதான் காரணம். சரியோ, தப்போ ஜின்னா காங்கிரஸை நம்பவில்லை. காங்கிரஸ் பதவிக்கு வந்த பிறகு ஏற்கெனவே கொடுத்த வாக்குறுதிகளை அது மதிக்காது என்று கருதினார் ஜின்னா. ஒருவேளை பிரிட்டிஷாரே நாட்டைப் பகிர்ந்தளித்தால் தாம் எதிர்பார்த்த அளவில் அகண்ட பாகிஸ்தான் கிடைக்கும் என்று ஜின்னா எண்ணியிருக்கக் கூடும். நிகழ்ச்சிகளின் போக்கும் சந்தர்ப்பச் சூழ்நிலையும் அதற்கு உதவும் என்று அவர் நினைத்திருக்கலாம்.

எனவே இன்று ஜின்னா, ராஜாஜி திட்டத்தை ஏற்கவில்லை. பேச்சு வார்த்தைகள் முறிந்த பிறகு காந்திஜி சொன்னார்: "நாங்கள் நண்பர்களாகவே பிரிந்திருக்கிறோம். இந்த (பத்தொன்பது) நாட்கள் வீணானதாக நான் எண்ணவில்லை. ஜின்னா நல்ல மனிதர் என்று நான் நம்புகிறேன். மறுபடியும் சந்திப்போம் என்று எதிர்பார்க்கிறேன். எனக்குப் பிரார்த்தனைகளில் நம்பிக்கை உண்டு. ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளப் பிரார்த்திப்பேன்.

ஜின்னாவுடன் காந்தி பேச்சு வார்த்தை நடத்துவதையே ஆட்சேபித்த சில காங்கிரஸ்காரர்கள், ராஜாஜி மீது பழி சுமத்தினர். மகாத்மா மீது அவர் ஆபத்தான ஆளுமை கொண்டிருப்பதாகக் கருதினர். இது காந்திக்கு வேடிக்கையாக இருந்தது. ஸி. ஆருடன் தமாஷாக உரையாட வழி வகுத்தது. ஸி. ஆர். சேவா கிராமத்திலிருந்து புறப்பட்ட போது, முப்பதாம் தேதி வாக்கில்தான் திரும்பி வரக் கூடும்" என்று கூறி விடைபெற்றார். "உங்கள் வருகையை எதிர்பார்த்திருப்பேன்" என்றார் காந்தி. ஸி. ஆர்: "உங்கள் விருப்பம் அது

ராஜாஜி வாழ்க்கை வரலாறு — III
ராஜ்மோகன் காந்தி

வானால் சரி." காந்தி: "உங்களை எதிர்பார்த்திருப்பதுஎன்றால்என்ன அர்த்தம்?" ஸி. ஆர்: "சில சமயம் ஆபத்தைக் கூட எதிர்நோக்க வேண்டியிருக்கிறது!" காந்தி: "எனக்கு ஆபத்து வேண்டும். பல விஷயங்கள் குறித்து உங்கள் கருத்துக்களை என் கருத்துக்களுடன் ஒப்பு நோக்க விரும்புகிறேன்."

முஸ்லிம் லீக் குறித்து காந்தி — ஸி. ஆர். போக்கை ஹிந்து தீவிரவாதிகள் எதிர்த்தனர். முஸ்லிம்களைத் திருப்திப்படுத்தும் முயற்சி என்று வர்ணித்தனர். இந்தத்தீவிரவாதிகளில் கணிசமான பேர் நாகபுரியில் இருந்தனர். எனவே அங்கு ஒரு பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் பிரசங்கம் செய்ய அழைக்கப்பட்டபோது ஸி. ஆர். மகிழ்ச்சி அடைந்தார். ரயில் நிலைய பிளாட்ஃபாரத்திலேயே கறுப்புக் கொடிகளுடன் ஒரு கூட்டம் ஸி. ஆரை எதிர்த்துக் கோஷங்கள் எழுப்பியபடி நின்றது. ஸி. ஆர். அவர்களை நெருங்கி, "இவை எனக்குத்தானே?" என்று கேட்டுக் கைநீட்டிக் கறுப்புக் கொடிகளைப் பெற்றுக்கொண்டு நடந்தார். ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு என்ன செய்வது, சொல்வது, யாரை யோசனை கேட்பது என்பதொன்றும் புரியவில்லை. இதற்குள் கொடிகளுக்காக நன்றி கூறிவிட்டு ஸி. ஆர். வெகுதூரம் போய்விட்டார்.

பட்டமளிப்பு விழாச் சொற்பொழிவு நிகழ்த்தத் தமக்கு அளிக்கப்பட்டிருந்த அழைப்பு வாபஸ் பெறப்பட வேண்டும் என்று பலர் கருதியதாக ஸி. ஆருக்குத் தெரிய வர, அவர் தமது பேச்சில் பின்வருமாறு கூறினார்:

"என்னுடைய உரையினால் தீமை ஏற்படும் என்று கருதுகிறவர்களை நான் கேட்கிறேன்: உங்கள் கட்சிக்கு என்னுடைய ஒரு பேச்சினால் ஆபத்து ஏற்பட்டு விடக் கூடுமென்றால் உங்கள் வாதம் என்ன அவ்வளவு பலவீனமானதா? அல்லது உங்கள் கருத்தில் உங்களுக்கே நம்பிக்கையில்லையா? அல்லது என் முன்னால் உள்ள இந்தப் பட்டதாரிகள் சுய சிந்தனை அற்றவர்கள் என்று எண்ணுகிறீர்களா? என்னுடைய ஒரே ஒரு தாக்குதலைத் தாங்கமுடியாமல்சரிந்துவிடக்கூடியவர்களா இவர்கள்?


"நான் செய்த குற்றம்தான் என்ன? முஸ்லிம் பிரச்னைக்கு ஒரு தீர்வு காண வேண்டும் என்று நான் சொல்கிறேன். அது தவறு? நான் கூறுவது நமது சுய கௌரவத்துக்கு இழுக்கான ஒரு காரியம் என்றால் அல்லது ஒரு கொடூரமான செயல் என்றால் அதைச் செய்ய வேண்டாம். அதைக் காட்டிலும் பிரச்னை தீராமலே இருந்து விட்டுப் போகட்டும். ஆனால் ஒரு நிலப் பகுதியில் பெரும்பான்மையினராக இருப்பவரை அப்பகுதிக்குப் பொறுப்பேற்குமாறு அனுமதிப்பதில் அகௌரவம் ஏதுமில்லை; அது கொடுங்கோன்மைக்கு அடிபணிவதுமாகாது."

ஸி. ஆரின் கருத்துப்படி, 'நிலையான ஜனநாயகத்தினிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு ஓய்வு பெற வேண்டியதுதான் இப்போது பிரிட்டிஷாரின் கடமை. காங்கிரஸ் தாராள மனப்பான்மை காட்ட வேண்டும் என்று பிரிட்டன் எதிர்பார்க்குமேயானால் அப்படி காங்கிரஸால் நடந்து கொள்ள முடியும் என்பதை ஜின்னாவுடன் காந்தி பேச்சு வார்த்தை நடத்தியதன் மூலம் ஏற்கெனவே நிரூபித்தாகி விட்டது. இனி பிரிட்டிஷார் அதிகார மாற்றம் செய்யலாமா வேண்டாமா என்று யோசிப்பதை விட, எப்போது எப்படிச் செய்யலாம் என்றுதான் யோசிக்க வேண்டும். லீக் ஒத்துழைப்புத் தர வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறது; ஒப்புதல் தரும்.'

(தொடரும்)

தமிழாக்கம்: **கி. ராஜேந்திரன்**

சிக்கலான மாவட்டம்



தென்னாற்காடு மாவட்ட ரோடுகளில் செல்லும் பஸ், லாரி போன்ற பெரிய வாகனங்களுக்குப் பிரச்னையில்லை. கார், வேன் போன்ற சிறிய வாகனங்களில் செல்பவர்களுக்குத்தான் சிக்கல். ஆம்; அது ஒரு வைக்கோல் சிக்கல்! நெல் அறுவடை செய்பவர்கள் தனியாகக் களம் அமைத்து அதில் போரடிக்காமல், ரோடுகளிலேயே போரடித்து, வைக்கோலைப் பரப்பி விடுவதால், சிறு வாகனங்கள் போனால் சிக்கிக்கொண்டு தவிப்பதைத் தவிர வேறு வழியில்லை!

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி — 1986

பரிசு பெற்றவர்கள்— வாழ்க்கையைப் படித்தவர்கள்!

முதல் பரிசு ரூ. 1000: சிபிகள் — மேலாண்மை பொன்னுச்சாமி



மேலாண் மறை நாடு என்ற குக்கிராமத்தில் பிறந்து வளர்ந்த இவர், கற்றது அனுபவக் கல்விதான். பள்ளிப் படிப்பு, ஐந்தாம் வகுப்பு வரைதான். தொழில்கள்: விவசாயம், துணி வியாபாரம். மார்க்ஸிய சித்தாந்தத்தை ஏற்றவர். எழுதியுள்ள இதழ்கள்: செம்மலர் (200 சிறுகதைகள்); ஜனரஞ்சனி (ரூ. 1000 பரிசுக் கதை). இரு முறை இலக்கியச் சிந்தனை பரிசு பெற்றவர். பிரசுரமான நூல்: மானுடம் வெல்லும் — சிறுகதைத் தொகுப்பு.

இரண்டாம் பரிசு ரூ. 500: குஞ்சானியின் டாட்டா — கவிஞர் முத்து பாஸ்கரன்



இவரது கவிதைகளைக் கல்கி பலமுறை தாங்கி வெளி வந்திருக்கிறது. பரிசு பெறும் கதை இவரது முதல் சிறுகதை. எம். ஏ. பட்டதாரி. புதுக்கோட்டை மாவட்டம், செம்பாட்டூர் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர். கலை ஆர்வத்துடன் நாடகக் குழு அமைத்து, அவ்வப்போது நாடகங்கள் அரங்கேற்றி வருகிறார்.

மூன்றும் பரிசு ரூ. 250: அடுத்த அத்தியாயம் — ஜி. நாராயணன்



எழுத்தில் சொற்செட்டு கையாள்வது இவரது பாணி. தஞ்சை மாவட்டம் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்று அறிமுகமானவர். கலைமகளில் குறுநாவலுக்குப் பரிசு. மாலை மதி நாவல் ஒன்று. பூஜைக்குரியவராகவே இவர் வைத்திருக்கும் சிறு படம் தி. ஜானகிராமனுடையது. டன்லப் கம்பெனியில் பணியாற்றும் நாராயணனுக்கு கம்ப்யூட்டர் இயக்கம் தெரியும். கொச்சியில் ரப்பர் வாங்கும் பிரிவில் ஆபரேடிவ் மேனேஜராக வேலை.

மூன்றும் பரிசு ரூ. 250: சொல்லாமல் போன அப்பா — அண்ணாதுரை

பெருந்துறை அரசினர் ஆண்கள் மேல்



நிலைப் பள்ளியில் ஓவிய ஆசிரியர். வயது 28. இதற்குள் முப்பதுக்கும் மேற்பட்ட சிறு கதைகளும் ஒரு குறுநாவலும் பிரசுரமாகக் கண்டவர்.

நாலாம் பரிசு ரூ. 150: இது எப்படி சாத்தியம்? — ஆர். விஜி



பி. காம். பட்டதாரியான எஸ். கிருஷ்ண மூர்த்தியும் 28 வயது இளைஞரே. மனைவியின் பெயரில் எழுதும் இவர் திருச்சியில் ஒரு தனியார் நிறுவனத்தில் ஸ்டெனோ. சொந்த ஊர் முசிறி என்றாலும் இவர் எழுத்து பாரீஸ் வரை பாய்ந்திருக்கிறது! பிரான்ஸ் தமிழ்ச் சங்கம் நடத்திய சிறுகதைப் போட்டியில் நாலாவது இடம் பெற்ற பெருமை இவருக்கு உண்டு!

நாலாம் பரிசு ரூ. 150: பட்டணப் பிரவேசம் — லக்ஷ்மி ஸ்ரீனிவாசன்



செங்கை மாவட்டம் மதுராந்தகத்தில் பிறந்து வளர்ந்த லக்ஷ்மி, துணுக்கு எழுத்தாளராகத் தொடங்கி இன்று சிறுகதைக்குப் பரிசு பெறும் அளவுக்கு வளர்ந்திருக்கிறார். பல திருத்தலங்களுக்குச் சென்று அருள் வலம் தொடர் கட்டுரைகளும் எழுதி வருகிறார்.


அடுத்த இதழ்...

தென்னாற்காடு மாவட்டத்தில் கல்கி—II



* "இயை அலைச்சாங்க; லஞ்சமும் கேட்டாங்க!"

* இந்தச் சண்டை எப்போது ஓயும்?



* எட்டு வருடங்களாய் ஒரு போராட்டம்

வேத பிரயோக கிரந்தங்கள்

நாகராக்ஷரம் (Devanagari Script) (விலை தபால் செலவு உட்பட)

1. ரிக்வேத ஸம்ஹிதா — 10 மண்டலங்கள் — விலை ரூ 160/—

2. ஸாமவேத அஷ்டப்ராம்மணம். 3 பாகங்கள் — விலை ரூ 210/—

முதல் பாகம்: தாண்டியம், ஷட்விம்சம், திருவிசநல்லூர் மஹா மஹோபாத்யாய ஸ்ரீ ராமஸுப்ப சாஸ்திரிகளால் இயற்றப்பட்ட ஸாமவேத உத்கர்ஷ மஞ்சரி ஸாமவேத ஸ்வரமாத்ராதி தத்வவிலாசம், மன்னார்குடி மஹா மஹோபாத்யாய ராஜு சாஸ்திரிகளால் இயற்றப்பட்ட ஸாமவேத ஸ்வர விமர்சம் அடங்கியது.

இரண்டாம் பாகம்: ஸாமவிதான பிராம்மணம், ஆர்க்ஷேய பிராம்மணம், ஸாமஸ்வர விமர்சம் பாணிணீய சிக்ஷா, நாரத சிக்ஷா, லோமச சிக்ஷா, கௌதம சிக்ஷா, ஸாமகான சாஸ்த்ரீய சம்ப்ரதாய க்ரமம் அடங்கியது.

மூன்றாம் பாகம்: தேவதாத்யாயம், ஸம்ஹிதோபநிஷத் சாந்தோக்ய, மந்த்ரோப நிஷத், வம்சப்ராம்மணம், உத்ஸர்ஜன கர்ம தேவ தர்ப்பணம். காம்ய ப்ரயோகங்கள் அடங்கியது.

3. ஸாமவேத ஸம்ஹிதா (ஸ்வரத்துடன்) 2 பாகங்கள் விலை ரூ 110/—

பூர்வபாகம் — ரிக் இல்லாமல் ஆக்னேய ஐந்த்ர கானங்கள் மட்டும்

இரண்டாம் பாகம் — பாவமான ஆரண்ய க்ரிய கானங்கள் மட்டும்

கிரந்தாக்ஷரம் (Grantha Script)

1. ஸாமவேத ஸம்ஹிதா. ஸ்வரத்துடன் — 2 பாகம் விலை ரூ 235/—

பூர்வ பாகம் — ரிக் ரிக்பதம், ஸ்தோபபதம், ஆக்னேய ஐந்த்ர பாவமான ஆரண்ய க்ரீய கானங்கள் அடங்கியது

இரண்டாம் பாகம் — உத்தர ரிக், ஊஹ ரஹஸ்ய கானங்கள் மற்றும் சாஸ்த்ரீய ஸம்ப்ரதாய கான விளக்கங்களுடன் கூடியது.

2. சாந்தி குஸுமாகரம் — 2 பாகம் — ரூ 75/—

மணக்கால் பிரம்மஸ்ரீ முத்து ச்ரௌதிகளால் ப்திப்பிக்கப்பட்ட கிரந்தங்களின் மறு பதிப்புகள்

1. ஆபஸ்தம்ப பூர்வாபரப்ப்ரயோகம் — விலை ரூ 65/—
2. போதாயன பூர்வாபர ப்ரயோகம் — விலை ரூ 70/—
3. ஆச்வலாயன பூர்வாபர ப்ரயோகம் — விலை ரூ 60/—
4. ஆபஸ்தம்ப ச்ரார்த்த ப்ரயோகம் — விலை ரூ 30/—
5. ஆச்வலாயன ச்ரார்த்த ப்ரயோகம் — விலை ரூ 25/—

V.P.P.யில் அனுப்புவதில்லை. பூராத் தொகையையும் M.O. (or) Draft மூலம் அனுப்பவும். செக் மூலம் அனுப்ப வேண்டாம்.

தொகை அனுப்ப வேண்டிய முகவரி:

**அத்வைத வித்யாசார்ய மஹாராஜா ஸாஹேப்,
ஸ்ரீகோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி
D76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம்—612 001.**



* டானிக்

இப்போது வயிற்றில் நெருப்பைக் கட்டியிருப்பது யார்?

* மரகதம் மணாளன், ஈரோடு.

? தமிழகத்தைப் பொறுத்தவரை எம். ஜி. ஆர்தான் காந்தி எனத் தாம் நினைப்பதாக, பாக்யராஜ் எதை வைத்துச் சொல்லியிருப்பார்?

! வேறு எதை வைத்துச் சொல்லியிருக்கப் போகிறார்? தமக்குக் காந்தியையும் தெரியாது; எம். ஜி. ஆரையும் தெரியாது என்னும் அறியாமையை அடிப்படையாகக் கொண்டுதான் இப்படிச் சொல்லியிருப்பார்!

* ஆற்காடு எழிலன், திருச்சி — 2.

? ஜனநாயகத்திற்கு எது முக்கியம்?

! மக்களின் அறிவுபூர்வமான சிந்தனை. அது இல்லாததுதான் இந்தத் தேசத்தின் துரதிர்ஷ்டம்.

* எம். எம். ஷர்புதீன், தோப்புத்துறை.

? சமீபத்தில் உம்மை வியக்க வைத்த நிகழ்ச்சி?

! அகில இந்தியக் கட்சிகளில் ஒன்றான ஜனதாவுக்கு, அருப்புக்கோட்டை இடைத் தேர்தலில் கிடைத்த 381 வோட்டுகள்! நெல்லையில் கிடைத்த 1006 வோட்டுக்கள்!

* ஆர். எஸ். இராஜ், சீர்காழி.

? முசிறியார் எப்படி இருக்கிறார்?

! அவருக்கு ஆஸ்பத்திரியில் கொடுக்கப்படும் டானிக்குகளைவிட வீரப்பனின் வெற்றி சக்தி வாய்ந்த டானிக் என்பதில் சந்தேகமே இல்லை.

* கே. பட்டாபிராமன், குடியாத்தம்.

? வரதட்சணைச் சட்டம் புதிய திருத்தங்களுடன் பார்லிமெண்டில் அறிமுகம்செய்யப்பட்டிருப்பது குறித்து?



* வீரப்பன்...



* சார்பாக...

! வரதட்சணைச் சட்டம் மட்டுமல்ல; ஆபாச ஒழிப்புச் சட்டம், விபசாரக் குற்றங்களில் ஆண்களுக்கும் தண்டனை கொடுக்க வகை செய்யும் சட்டம்... ஆகிய மூன்று சட்டத் திருத்தங்களுமே வரவேற்கப்பட வேண்டியவைகளே.

* மா. அய்யப்பன், நாட்டரசன் கோட்டை.

? நமது அமைச்சர்கள் கீழ்வரும் எந்தத் தகுதியில் அமைச்சர்கள் ஆனார்கள்? (I) திறமையின் அடிப்படையில், (II) ஆளும் கட்சிக்கு உழைத்ததன் அடிப்படையில், (III) அரசியல் அனுபவத்தின் அடிப்படையில், (IV) நேர்மையின் அடிப்படையில்.

! இந்த நான்கு தகுதிகளில் ஒன்று கூடத் தங்களுக்கு இல்லை என்று அவர்கள் பலமுறை நிரூபித்ததன் அடிப்படையில்தான் இருக்க வேண்டும்.

நீங்கள் கேட்டவை — தராசு

*** வி. பாலகிருஷ்ணன், மோகனூர்.**

? இந்து மதத்தைக் காப்பாற்ற ஆர். எஸ். எஸ். ஸைத் தவிர வேறு ஏதேனும் உண்டா?

! தாங்கள்தான் இந்து மதத்தைக் காப்பாற்றிக் கொண்டிருப்பதாக ஆர். எஸ். எஸ். காரர்களே சொல்ல மாட்டார்கள். காரணம், 'நான், எனது' என்ற அகம்பாவத்தை ஒழித்தவர்கள்தானே இந்துக்களாக இருக்க முடியும். அதுசரி; காப்பாற்றப்பட வேண்டிய அளவுக்கு இந்து மதத்திற்கு இப்போது என்ன வந்துவிட்டது நண்பரே!

*** பி. எம். பிரபாகரன், திருமருகல்.**

? அரசியலுக்கும், அராஜகத்திற்கும் எந்த விதமான உறவு சார்?



* வோட்டு...



* கேட்டது...

! கள்ளக் காதலில் தொடங்கிக் கணவன், மனைவி உறவாகப் பலப்பட்டு விட்டது.

*** வீ. அருண், சிரமங்கலம்.**

? உடனடி பரிசுச் சீட்டைப் பற்றி உங்கள் கருத்து என்னவோ?

! உடனடியாகத் தடைசெய்யப்பட வேண்டும்.

*** சி. சுப்பு, தேரழுந்தூர்.**

? ஆர். எம். வீரப்பனுக்கு ஆதரவாக, டைரக்டர்கள் பாரதிராஜா, பாக்யராஜ், பாலசந்தர், ஸ்ரீதர் போன்றவர்கள் வோட்டுக் கேட்டது நியாயம்தானா?

! பாரதிராஜா, பாக்யராஜ், ஸ்ரீதர் ஆகியோரைவிட்டுத்தள்ளுங்கள். 'மூன்றாம்பிறை' சினிமா பாராட்டு விழாவில் பேசும்போது, 'மூன்றாம் பிறை'யில் இத்தனை அற்புதமாக நடித்திருக்கும் ஸ்ரீதேவிதான் வடக்கே சென்று செக்ஸியாக நடித்துக் கொண்டிருக்கிறார் என்று கேள்விப்படும்போது, என் இதயம் ரத்தக் கண்ணீர் வடிக்கிறது!' என்று மிகவும் உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார் டைரக்டர் பாலசந்தர். அவருடைய பாஷையிலேயே நாமும் சொல்வதானால், 'தண்ணீர் தண்ணீர்' என்ற மிக உயர்ந்த தரத்தைக் கொண்ட படத்தை எடுத்த பாலசந்தர்தான், இப்போது தேர்தல் பிரசாரத்திற்குச் சென்று வந்திருக்கிறார் என்பதைப் பார்க்கும் போது என் நெஞ்சத்தில் உதிரப் பெருக்கெடுத்து ஓடுகிறது. பாவம், அவருக்கு என்ன நெருக்கடியோ!

*** ஆர். கே. அருள்செல்வன், விக்கிரபாண்டியம்.**

? இப்போது வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு நிற்பது யார்?

! அம்மையார்!

*** க. இளங்கோ, நந்தியநல்லூர்.**

? தமது கண்களைத் தானம் செய்யப் பிரதமர் முன்வந்துள்ளது குறித்து?

! நல்ல விஷயம். பிறருக்கு உதவும் ஓர் உயர்ந்த நாகரிகமான இந்தச் செயல், வெறும் பாராட்டுக்குரியது மட்டுமல்ல; ஒவ்வொருவராலும் பின்பற்றப்பட வேண்டிய செயல். இன்னும் சொல்லப் போனால் பிறருக்கு உதவும் விஷயத்தில் நாம் ரஷ்யர்கள் அளவுக்கு உயர வேண்டும். எப்படி? அண்மையில் ஓர் இருபத்து மூன்று வயது ரஷ்யப் பெண்ணுக்குப் பிரசவ வலி; தவிர்க்க முடியாமல் ஆபரேஷன் செய்து குழந்தையை எடுத்தபோது, எதிர்பாராதவிதத்தில் தாயின் ரத்தம் வீணாகிப் போகிறது. அந்த ரத்தமோ சற்று அரிதான இனத்தைச் சேர்ந்த ரத்தம். என்ன செய்வது? அர்த்தராத்திரிக்கு மேல் அவசரம் அவசரமாக அந்த இன ரத்தம் தேவையென்று ரேடியோவில் ஒலிபரப்பப் படுகிறது. அனைத்தக் கேட்ட அந்த இன ரத்தமுள்ள அத்தனை பேரும் விழுந்தடித்துக் கொண்டு ஓடி வந்து கியூவில் நின்று ரத்தம் தந்தார்களாம்! படித்தபோது நிஜமாகவே சிலிர்த்துப் போனேன். அதுவல்லவோ மானுடத்தின் நாகரிகம்!!

*** ரூ. 10 பரிசு பெறுபவர்:**

பி. எம். பிரபாகரன்,
2/17, மெயின் ரோடு,
திருமருகல் — 609 702.

இரண்டு மறுப்புக் கடிதங்கள்:

"தலைவலிக்குக் காரணம் காப்பி வாரியம் அல்ல!"

கல்கி 24.8.86 இதழில் "எத்தனை காப்பி சாப்பிட்டாலும் எங்கள் தலைவலி தீராது" என்ற கட்டுரையைப் படித்தேன். அதில் வந்திருக்கும் சில தவறான விவரங்களைச் சுட்டிக் காட்டுவது காப்பி வாரியத்தின் உப தலைவர் என்ற முறையிலும், காப்பி விவசாயி என்ற முறையிலும் எனது கடமை.

காப்பி வாரியத்திற்குச் சொந்தமாக நிதி கிடையாது. காப்பி விவசாயிகள், காப்பியை, காப்பி வாரியத்திற்குக் கொடுக்கும் போது, காப்பி வாரியம் கொடுக்கும் முன் விலை, 'ரிஸர்வ் பாங்கிலிருந்து' கடனைப் பெற்றுத்தான் கொடுக்கப்படுகிறது. இந்தக் கடனை அவ்வப்போது காப்பி விற்றுக் கிடைக்கும் பணத்திலிருந்து திருப்பிக் கொடுக்க வேண்டும்.

காப்பி வாரியத்திற்கு ஏலத்தில் உள்நாட்டில் விற்கப்படும் காப்பிக்குக் கிலோவிற்குப் பதினைந்து ரூபாய் என்றால் ஏற்றுமதி செய்யப்படும் காப்பிக்கு ஏலத்தில் இருபத்தைந்து ரூபாய் வரைதான் கிடைக்கின்றது. இந்த இரண்டையும் கணக்கில் எடுத்துக் கொண்டு அவற்றின் சராசரியைத்தான் விவசாயிகளுக்கு வாரியம் தருகின்றது. கட்டுரையில் சொன்னது போல் காப்பிக் கொட்டையின் விலை கிலோவிற்கு முப்பத்தெட்டு ரூபாய் என்றால் அதற்கு வியாபாரிகளே காரணம் ஆவார்கள்; காப்பி போர்டு அல்ல.

காப்பி வாரியம் செயல்படுவது சிறு தோட்ட விவசாயிகளின் நலனுக்கே. காப்பி வாரியம் இல்லை என்றால் சிறு தோட்ட விவசாயிகள் காப்பியை விற்பதற்கு முயற்சி செய்யும் பொழுது அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய விலை மிகவும் குறைவதற்கு வாய்ப்புஇருக்கிறது. ஆனால்பெரியதோட்டக் காரர்கள் காப்பிச் சரக்கை, விலை குறையும் பொழுது விற்காமல் வைத்திருந்து, பின்னர் விலை அதிகம் ஆகும் மாதங்களில் விற்பனை செய்து கொள்ளை லாபம் அடைய முடியும். ஆனால் காப்பி வாரியம் உள்ளதால் எல்லாத் தரத்திலும் உள்ள தோட்டக்காரர்களுக்கு ஒரே விலை கிடைக்க வாய்ப்பு இருக்கின்றது.

காப்பியை வாரியத்திற்குக் கொடுத்தவுடன் முதல் விலையாகப் பாதிக்கு மேல் கொடுக்கப்படுகின்றது. அதற்குப் பின் சரக்கு விற்றுப் பணம் வசூலாவதைப் பொறுத்து, விவசாயிகளுக்குப் பல தவணைகளாகவிலை விநியோகம் செய்யப்படுகின்றது. 'கடந்த ஏழு வருடங்களாக ஒரே விலைதான் விவசாயிகளுக்கு' என்பது தவறு.

வாரியம் விவசாயிகளுக்குப் பணம் கொடுக்க ஓரளவு கால தாமதம் ஆகத்தான் செய்கிறது. ஆனால் காப்பி வாரியத்திற்குச் சொந்தமாக நிதி இல்லாதிருக்கும் வரை இதனைத் தவிர்க்க முடியாது. கோடிக்கணக்கான ரூபாய்களைக் காப்பியிலிருந்து வருடா வருடம் வரியாகப் பிழிந்தெடுக்கும் அரசு, முக்கியமாக மத்திய அரசு, காப்பி வாரியத்திற்குச் சொந்தமாக ஏன் நிதி தரவில்லை என்று கேட்க வேண்டும்.

'விவசாயிகளின் பிரதிநிதிகள், காப்பி வாரியத்தில் சரியாகச் செயல்படவில்லை' எனக் கூறி இருப்பது அபாண்டமான குற்றச் சாட்டு. காப்பி ஏலத்தின் அடிமட்ட விலையை (Reserve Price) உற்பத்திச் செல விற்கு ஏற்றாற்போல் மத்திய அரசு உயர்த்த வில்லை என்பதற்காகவும், காப்பியின் மேல் வசூல் செய்யப்படும் ஏற்றுமதி வரியைக் குறைக்கவில்லை என்பதற்காகவும் நானும் மற்ற விவசாயப் பிரதிநிதிகளும் காப்பி வாரியத்தின் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்ததுடன், டெல்லியில் மத்திய அரசிடம் பல தடவை பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறோம். எங்கள் பணிக்கு மேலும் ஊக்கம் அளிக்க விவசாயிகளின் போராட்டங்களும் தேவை.

'நாற்பது சதவிகிதத் தள்ளுபடி விலையில் ரஷ்யாவிற்குக் காப்பி விற்கப்படுகின்றது' என்பதும் சரி இல்லை. மற்ற நாடுகள் தரும் விலைக்குத்தான் ரஷ்யாவும் இப்போது வாங்குகிறது.

எம். டி. வெங்கிட சுப்பிரமணியன்,
பெங்களூர், துணைத் தலைவர், காப்பி வாரியம்.

இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம் துவக்கப்பட்ட பிறகும் கூட, ஒட்டன் சத்திரத்திலுள்ள சாலையோர உணவு விடுதி செயல்பட்டுக் கொண்டுதானிருந்தது. சில வாரங்களுக்கு முன்னால் அவ்விடுதியை நடத்தி வந்த ஒப்பந்தக்காரர், ஒப்பந்த காலத்திற்கு இடையிலேயே விட்டுவிட்டுச் சென்று விட்டதன் காரணமாக, இப்பொழுது அவ்விடுதி இயங்காமல் உள்ளது. அங்கு காவலுக்கு ஒரு காவலரும் பணியாற்றி வருவதால் கல்கியில் (17.8.86 இதழ்) எழுதியிருப்பது போன்ற சம்பவங்கள் நடக்க வாய்ப்பே யில்லை. அவ்விடுதியைத் தொடர்ந்து நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதால் சில நாட்களில் அந்தச் சாலையோர விடுதி செயல்படத் துவங்கும்.

நா. சபாபதி,
திண்டுக்கல். நிர்வாக இயக்குநர்,
ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம்.

சென்னை -அண்ணா A/c -நாகேஷ் A/c -வசந்தி A/c

தினசரி 4 காட்சிகள் | தினசரி 3 காட்சிகள் | தினசரி பகல் காட்சி

எல்லோராலும் பாராட்டுப்பெற்ற படம்
இதன் தெலுங்கு பிரதி சிறந்த படத்திற்கான
பிலிம்பேர் அவார்டு மற்றும் பல பரிசுகள் பெற்றுள்ளது.



A Hansa Pictures, Madras Release Tele Off: 82368, 81543 Res: 444412, 447735

பெண்கள் பள்ளிக்கு ஒரு போராட்டம்!



● போராடி வரும் நகரக் கல்வி மேம்பாட்டுக் குழுவினர்.

திண்டிவனத்தில் மேல்நிலைப் பள்ளிகள் மொத்தம் ஐந்து. ஆனால் அத்தனையும் தனியார் வசம்! தென்னாற்காடு மாவட்டத்தில் மொத்தமுள்ள 47 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் ஒன்று கூடத் திண்டிவனத்தில் இல்லை. எனவே திண்டிவனம் பொது மக்கள் தனியார் பள்ளிக்கூட நிர்வாகிகளிடம் திண்டாடிப் போகிறார்கள் — எல்லாம் டொனேஷன் சமாசாரம்தான்.

திண்டிவனத்தில், எப்பாடு பட்டாவது ஓர் அரசாங்கப் பெண்கள் மேல்நிலைப்பள்ளியைத் திறக்கச் செய்யும் நோக்கத்துடன் டாக்டர் ராமதாஸின் தலைமையில் நகரக் கல்வி மேம்பாட்டுக் குழு போராடி வருகிறது. புதிதாய் ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பிப்பதை விட, எட்டாவது வரையுள்ள ஒரு பள்ளியை மேல்நிலைப் பள்ளி அந்தஸ்துக்கு உயர்த்துவது சுலபம் என்று தெரிய வந்தது. எனவே, திண்டிவனம் முருங்கப்பாக்கத்தில் உள்ள முனிசிபல் ஹையர் எலிமெண்டரி ஸ்கூலை, அப்படி மாற்றுவது என்று முடிவாயிற்று. அதில் ஒரு சிக்கல். முனிசிபாலிடி அதிகாரத்தில் உள்ள ஹையர் எலிமெண்டரி பள்ளியை, அரசு மேல்நிலைப் பள்ளியாய் மாற்ற, முனிசிபாலிடியின் ஒப்புதல் வேண்டும். இந்த ஒப்புதல் 84 ஆம் வருஷத்திலேயே முனிசிபாலிடி தனியதிகாரியால் வழங்கப்பட்டு விட்டது. ஆனால் என்ன காரணமோ, அப்போதைய பள்ளிக் குழு, அரசாங்கத்துக்குக் கட்ட வேண்டிய 22,500 ரூபாயைக் கட்டாததால் கட்ட வேண்டிய கெடு காலாவதியாகிவிட்டது!

இந்த வருஷம் எப்படியும் அரசாங்கப் பெண்கள் மேல்நிலைப்பள்ளியைத் துவக்கி விடுவது என்கிற லட்சியத்துடன் இப்போதைய குழு செயல்பட்டது. காலம் கடத்தாமல், குழு உறுப்பினர்கள் தாங்களே நன்கொடை அளித்தும், நகர நலனில் அக்கறை கொண்டோரிடமிருந்து பெற்றும் அரசாங்கத்துக்குக் கட்ட வேண்டிய இருபத்திரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாயைக் கட்டி விட்டார்கள்.

பிரச்னை அதோடு தீர்ந்த பாடில்லை. அதன் வசமுள்ள உயர் துவக்கப் பள்ளியை, அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியாய் மாற்றுவதற்கு, புதிதாய்ப் பதவி ஏற்றுள்ள முனிசிபாலிடி உறுப்பினர்கள் தீர்மானம் நிறைவேற்றித் தர வேண்டும். என்ன காரணமோ இதற்கும் சிலரின் எதிர்ப்பு. கடைசியில் விஷயம் ஓட்டுக்கு விடப்பட்ட போது, நகரின் தி. மு. க. உறுப்பினர்களின் ஒட்டுமொத்த ஆதரவினால், தலைவர் எதிர்த் தரப்புக்கு ஓட்டுப் போட்டும் கூடத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுவிட்டது! இதற்கிடையில் மறியல், போராட்டம், துண்டுப் பிரசுர விநியோகம், சந்திரசேகரன் என்கிற இளைஞரின் உண்ணாவிரதப் போராட்டம் என்றெல்லாம் நடத்த வேண்டியிருந்திருக்கிறது!

இந்தவிவரங்களையெல்லாம்சல்யாணியும் செயலாளர் பவனந்தியும் கூற, "இப்போது நகரசபையின் ஒப்புதலும் கிடைத்து விட்டது. அரசுக்குக் கட்ட வேண்டிய தொகையும் கட்டப்பட்டு விட்டது. ஆனாலும் இன்று வரை பள்ளிக்கூடத்துக்கு அனுமதி வந்த பாடில்லை. இப்போதே செப்டம்பர் ஆகிவிட்டது. எப்போது அனுமதி வந்து, எப்போது வகுப்புகளை ஆரம்பிப்பது? பாதி வருஷத்தில் யார் ஸ்கூலில் சேர வருவார்கள்?" என்று கேட்கிறார் பொருளாளரான வக்கீல் பிரசன்ன வெங்கடாஜலபதி.

பெண்கள் பள்ளிக்கூட விவகாரம் ஒரு புறம் இருக்க இந்தக் கல்வி மேம்பாட்டுக் குழுவின் கடும் முயற்சியினால் இந்த வருஷம் டொனேஷன் பிரச்னைகளிலிருந்து திண்டிவனம் வாழ் பெற்றோர்களுக்குப் பெருமளவு நிம்மதி கிடைத்துள்ளதைப் பெருமையுடன் குறிப்பிட்டார் கல்யாணி. அதாவது இந்தக் குழுவின் இடைவிடாத போராட்டம் காரணமாய், இந்த ஆண்டு கல்லூரிப் படிப்புக்காகத் திண்டிவனத்து மாணவிகள் வெளியூர்களுக்குப் போக வேண்டிய அவசியம் இல்லாமல், திண்டிவனம் அரசுக் கல்லூரியிலேயே கோ — எஜுகேஷனுக்கு வழி செய்யப்பட்டு விட்டது. அதேபோல் இப்போது நடத்திக் கொண்டிருக்கும்பெண்கள் அரசு மேல்நிலைப் பள்ளிக்கான போராட்டத்திற்கும் வெற்றி கிடைக்கும் என்று நம்பிக்கையோடு இருக்கிறார்கள். மனித சக்திகள் ஒன்று குவியும் போது, அந்த வானமே பூமிக்கு வராதோ!

— ஜூலி

நிலக்கரிச் சுரங்கங்கள்

பிரச்னைகளுக்கும் சுரங்கங்கள்!


நெய்வேலி —

இரண்டாவது அனல் மின் நிலையத்துக்குப் பின்புறம் மூன்று கி. மீ. யில் உள்ள கிராமம் அரசக்குழி. கம்மாபுரம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த இந்த ஊரும் நெய்வேலிச் சுரங்கங்களால் பாதிக்கப்பட்ட பல ஊர்களில் ஒன்று. ஊராட்சித் தலைவர் சௌந்திர கிருஷ்ணனைச் சந்தித்தபோது, கிணறுகளைக் கொண்டு போய்க் காட்டினார். நூறடி ஆழம் வெட்டிய கிணற்றில் தண்ணீர் இல்லை. இன்னும் கொஞ்சம் வெட்டினால் இன்னொரு சுரங்கம் தோன்றிவிடும் போலிருக்கிறது. அந்த நிலையிலும், அதற்குக் கீழ் நூற்றைம்பது அடிகளுக்கு மேல் போர் போட்டிருந்தது. அப்படியும் எதிர்பார்த்த தண்ணீர் இல்லை. அதற்கு மேலும் ஆழப்படுத்தித் தண்ணீர் எடுக்க வாய்ப்பிருந்தாலும், சாதாரணமாக உள்ள ஐந்து குதிரை சக்தி கொண்ட பம்ப் செட்டை மாற்றிப் பதினைந்து குதிரை சக்தி கொண்ட பம்ப் செட் வைக்க வேண்டும். அதற்கு மின்வெட்டுப் பிரச்னை! என்ன செய்வது? நெய்வேலியில்தான் மின்சாரம் எடுக்கிறார்கள். என்றாலும்பக்கத்தில்உள்ள அவர்களுக்கும் அது ஒரு பிரச்னைதான்!

"நெய்வேலிச் சுரங்கத்திலிருந்து எங்கள் சர்க்கரைக் குளத்துக்குத் தண்ணீர் வர ஏற்பாடு செய்தால், அதன் மூலம் குப்பநத்தம் ஏரிக்கும் தண்ணீர் போகும்! அதனால் சுமார் அறுநூறு ஏக்கர்களுக்கு மேல் பாசன வசதி பெறும். நெய்வேலி நிறுவனம் தண்ணீர் தருவதற்குத் தயாராக இருக்கிறது. ஆனால் தமிழக அரசுதான் அதுபற்றிக் கண்டு கொள்ளாமல் இருக்கிறது" என்றார் சௌந்திர கிருஷ்ணன்.

அரசக் குழியில் இப்படித் தண்ணீர் இல்லாத குறை என்றால், வளையமாதேவி, முத்துகிருஷ்ணபுரம், கருவட்டி, கத்தாழை, கரைமேடு, மும்முடி சோழபுரம், மதுவானை மேடு, குறிஞ்சிக் கொல்லை, கொளகுடி, புது கிருஷ்ணபுரம், கப்பையா நகர் ஆகிய பதினொரு கிராமங்களிலும் இரண்டாவது சுரங்கத்திலிருந்து வெளியே விடப்படும் தண்ணீரால் பிரச்னை! பரவனாற்று ஓடை வழியாக வரும் அந்தத் தண்ணீர் சரியான வடிகால் இல்லாத காரணத்தால் சுமார் ஆயிரம் ஏக்கர் நிலத்தில் தேங்கியிருப்பதால் விவசாய நிலம் அத்தனையும் பாதிக்கப்பட்டு விட்டது.


இரண்டாவது சுரங்கத்திலிருந்து வரும் நீர் இந்தப் பரவனாறு ஓடை வழியாகச் சென்று பின்னலூரில் உள்ள பெருமாள் ஏரிக்குப் போக வேண்டும். வரும் தண்ணீரின் அளவுக்குத் தகுந்தபடி, ஓடை ஆழப்படுத்தப்படாததால், ஏரிக்குப் போகாமல் வழியிலேயே அங்கங்கே தேங்கிக் கிடக்கிறது. இதனால் சுமார் ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் நாசம்! பாதிக்கப்பட்ட இருநூறு விவசாயிகளில், நம்மைச் சந்தித்த ராஜேந்திரன், வீராசாமி, காசிநாதன் ஆகியோர், "ஓர் ஏக்கர் பயிர் செய்தாலே எங்களுக்கு ஐயாயிரம்



முத்துகிருஷ்ணபுரத்து விளைநிலங்கள் நீரில் மூழ்கிக் கிடக்கும் காட்சி.

சௌந்திர கிருஷ்ணன்





* நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் — அனல் மின் நிலையம்.



* சேர்மன் நாராயணன்

ரூபாய் வருட வருமானம் கிடைக்கும் பூமி சார் இது! முதல் சுரங்கத்திலிருந்து வந்த தண்ணீரில் விவசாயம் செழித்தது. ஆனால் இப்போது இரண்டாவது சுரங்கத் தண்ணீரும் சேர்ந்து வருகிறது. அதற்குத் தகுந்தபடி ஓடை ஆழப்படுத்தப்படவில்லை என்பதால் தண்ணீர் தேங்கி, கடந்த இரண்டு ஆண்டுகளாக எங்கள் வயிற்றில் மண்ணைப் போட்டு விட்டது. ஐந்து ஏக்கர், ஆறு ஏக்கர்னு நிலம் வைத்திருந்த நாங்களெல்லாம் இப்போது கூலி வேலைகூடக் கிடைக்காமல் தவிக்கிறோம். என்.எல்.ஸி. முன்னாள் சேர்மன் டாண்டன், பிறகு நாராயணன் ஆகியோரிடமும் முறையிட்டு விட்டோம். பயனில்லை!'' என்றார்கள்.

சரி. இந்த இரண்டு பிரச்னைகளுமே தண்ணீர் சம்பந்தப்பட்டவை என்றால், தண்ணீர் சம்பந்தப்படாத இன்னொரு பிரச்னை அஜீஸ் நகர் பிரச்னை. நெய்வேலி நிறுவனம் தனது இரண்டாவது சுரங்க விஸ்தரிப்புப் பணிகளை மேற்கொண்ட போது, பல கிராமங்களை எடுத்துக் கொண்டு, அந்தக் கிராம மக்களுக்கு வேறு இடங்களில் வீடு கட்டிக் கொடுத்தது. அஜீஸ் நகரும் அப்படிக் கையகப்படுத்தப்பட்ட கிராமங்களில் ஒன்று! இவர்களுக்குப் புதிதாகக் கொடுக்கப்பட்ட இடம் சென்னை, திருச்சி நெடுஞ்சாலையில் உளுந்தூர் பேட்டைக்கு இரண்டு கி. மீ. தள்ளி உள்ள எடைக்கல் என்ற ஓர் இடம். இப்போது புதிய அஜீஸ் நகர் என்று அழைக்கப்படும் அந்த இடத்திலும் எவ்வளவு பிரச்னைகள்!


''முந்நூற்றுப் பத்துக் குடும்பங்கள் இருக்கின்றன. ஆனால், இங்கே இருப்பது ஒரே ஓர் அடிபம்புதான். இன்னும் நிறையப் பேருக்குக் கொடுத்த வாக்குறுதிப்படி விவசாய நிலம் கொடுக்கப்படவில்லை. தண்ணீர் டாங்க் கட்டி வைத்திருக்கிறார்கள். ஆனால் எப்போது தண்ணீர் வரும் என்று தெரியவில்லை. எங்கள் கிராமத்தைச் சேர்ந்த எல்லோருக்கும் வேலை தரப்படுமென்றார்கள். முந்நூற்று அறுபத்து நான்கு பேருக்கு வேலைத் தகுதி இருந்தும் இதுவரை முப்பத்தேழு பேருக்குத்தான் வேலை கொடுத்திருக்கிறார்கள்!'' என்றார்கள் நம்மைச் சந்தித்த பழனியாண்டி, சாரங்கபாணி, பெருமாள் ஆகியோரும் அம்புலி — சுப்பிரமணியம் தம்பதியினரும்.

பி.எஸ்ஸி படித்திருக்கும் ஷீலாதேவி, சுமதி என்ற இரண்டு பெண்களுக்கு, எவ்வளவோ மனுப் போட்டும் இன்னும் வேலை கிடைத்தபாடில்லை. அதிலும் சுமதி என்ற பெண்மணி ஓர் ஊனமுற்ற வாலிபரைக் காதலித்துக் கலப்புத் திருமணம் செய்து கொண்டு குழந்தைகளுடன் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார். என். எல். ஸி. நிர்வாகம் சற்று மனம் வைத்து இவரது கோரிக்கையைக் கவனிக்குமா? நெய்வேலிப் பக்கமிருந்து காலி செய்து கொண்டு வந்தபோது கொண்டு வந்த பல விலை மதிக்கத்தக்க தெய்வ படிமங்கள் — விக்கிரகங்கள் பாதுகாப்பில்லாமல் குடிசையில் வைக்கப்பட்டிருக்கின்றன. என். எல். ஸி. நிர்வாகம் கோயிலைச் சீக்கிரம் கட்டிக்

* வீராசாமி



* காசிநாதன்




* பரமசிவம்



* ராஜேந்திரன்



* சாரங்கபாணி



• ஷீலாதேவி





• புதிய அஜீஸ் நகர்.

கொடுத்தால் என்ன?

என்.எல்.ஸி. நிர்வாகம் என்ன சொல்கிறது?

"**Nothing is Impossible!**" என்று சொல்லும் என்.எல்.ஸி. சேர்மன் நாராயணனைச் சந்தித்து மேற்கண்ட பிரச்னைகளைச் சொன்னோம். உடனே தமது அதிகாரிகளுக்கு இந்தப் பிரச்னைகளைச் சொல்லி விவரங்களைச் சேகரிக்கச் சொன்னார். "இரண்டு நாட்கள் கழித்து வந்து சந்தியுங்கள்!" என்றார்.

இரண்டு நாட்கள் கழித்து...

நீங்கள் சொன்ன பிரச்னைகள் பற்றி நானே நேரடியாகச் சென்று விசாரித்தேன். வளையமாதேவி பகுதியில் அந்தப் பரவனாற்று ஓடை சரியில்லாததால்தான் தண்ணீர் தேங்கியிருக்கிறது. அந்த ஓடையையும் பெருமாள் ஏரியையும் இணைக்க ஒரு கால்வாய் தேவைப்படுகிறது. அந்தக் கால்வாயைத் தமிழக அரசின் பொதுப் பணித் துறையினர்தான் வெட்ட வேண்டும். ஆனால் பிரச்னையின் தீவிரத்தைக் கருதி எங்கள் நிர்வாகமே இன்னும் சில நாட்களில் அந்தக் கால்வாயை வெட்டும்!" என்றார்.

அரசக்குழியில் உள்ள சர்க்கரைக் குளத்துக்குத் தண்ணீர் விடும் விஷயம் பற்றிக் குறிப்பிடும் போது, "எங்கள் இரண்டாவது அனல் மின் நிலையம் முழு வேகத்தோடு செயல்பட ஆரம்பித்தால், டர்பைன்களைக் குளிர்விக்க எங்களுக்கே நிறையத் தண்ணீர் தேவைப்படும். இப்போதே சுடு தண்ணீரை ஒரு செயற்கை ஏரியில் விட்டு ஆற்றி மீண்டும் குளிர்விக்கப் பயன்படுத்துகிறோம். மேலும் நாங்கள் சுரங்கத்தில் 500, 600 அடி தோண்டுகிறோம் என்பதெல்லாம் சரியல்ல. ஒரு குறிப்பிட்ட ஆழத்திற்கு அடியில் போனால் உப்பு (கடல்) நீர் வந்துவிடும். ஆகையால் இருநூறு அடிக்குள்ளேயேதான் தோண்டுகிறோம். மேலும் எங்களுக்குத் தற்போது இருக்கும் உபரித் தண்ணீரில் எழுபத்திரண்டு கிராமங்களுக்குப் பாசன வசதி செய்து தருகிறோம்!

"நீங்கள் சொன்ன அஜீஸ் நகர் பிரச்னை பற்றியும் விசாரித்தேன். என்.எல்.ஸி. என்ன வாக்குறுதி கொடுத்ததோ அதைக் கண்டிப்பாக நிறைவேற்றும்; கொஞ்சமும் சந்தேகம் வேண்டாம். நாங்கள் மட்டும் நன்றாக இருந்தால் போதாது. எங்களைச் சுற்றியுள்ளவர்களும் நன்றாக வாழ வேண்டும். இதுதான் எங்கள் ஆசை!" என்றார் நாராயணன்.

நாம் சொன்ன பிரச்னைகளைப் பற்றி உடனே விசாரித்து நடவடிக்கை எடுக்க ஆவன செய்து கொண்டிருக்கும் நாராயணனால் கூடிய விரைவில் இந்தப் பிரச்னைகளுக்கு ஒரு விடிவு காலம் வருமென்று நம்புகிறோம்.


— ப்ரியன்

• கணவர் குழந்தைகளுடன் சுமதி.






• பெருமாள்



• பழனியாண்டி

தாய்ப் பாசம்



கோபம்! கோபம்! கோபம்!!

முகம் முழுவதும் கோபம் கொப்பளிக்க நின்று கொண்டிருந்தாள் சின்னாத்தா.

'வரட்டும் இந்தக் கோவாலுப் பய. கையை முறிச்சு அடுப்பில் வைக்கிறேன்.

'பாவி மவன்; திருட்டுப்பய புள்ள! பத்துக்காசு சாமி முன்னால வச்சிருந்தேன்; லாவிக்கிட்டுப் போயிட்டானே!' எனப் பொருமியபடி வீட்டிற்குள்ளும் வெளியிலுமாக நடை போட்டுக் கொண்டிருந்தாள்.

ஐந்து வயதுச் சிறுவன் கோவாலு எண்ணெய் காணாத தலையுடன், ஒட்டிப் போன வயிறுடன், கிழிந்த அரைக்கால் சட்டை இடுப்பில் நிற்க மறுத்ததால் அதை இடது கையில் பிடித்தபடி உள்ளே வந்து கொண்டிருந்தான்.

"ஏலே, திருட்டு நாயே! மாடத்தில பத்துக்காசு வச்சிருந்தேன். நீதானல எடுத்த?'' என்றபடி ஓடி அவன் முடிக் கற்றையை ஒரு கையில் பிடித்து முதுகில் ஓர் அடி வைத்தாள்.

வெலவெலத்துப் போய்ப் பதில் சொல்லாமல் நின்றான்.

''நான் கேக்கேனில்ல; வாயில என்ன கொழுக்கட்டையா வச்சு அடைச்சு வச்சிருக்கு? எல்லாம் அப்பன் புத்தி! அது காசை திருடிப் போய் சாராயம் குடிக்குது. நீ எந்த எலவுக்கு எடுத்தடா நாயே.''

''ஆத்தா ரெண்டு நாளா நீ கஞ்சி ஊத்தவேயில்ல. அதான்!''

''கஞ்சி ஊத்தலையா? அதான் பள்ளிக்கூடத்தில் மதிய உணவு கொட்டிக்கிடறியே. போதாதோ! அப்படி என்னடா திருடச் சொல்லுது அந்த வயிறு? அவுக கொடுக்கிறது போதாதுன்னு, நா வேற கொட்டணுமோ? இங்க என்ன உன் அப்பனா சம்பாரிச்சு போடுதான்?'' எனக் கத்தியபடி ஓடிப் போய் அடுப்பில் எரிந்து கொண்டிருந்த கட்டையை எடுத்து வயிற்றில் ஓர் இழு இழுத்தாள்.

''ரெண்டு நாளாய்ப் பெரிய பையன்கள் என் சாப்பாட்டைப் புடுங்கிக்கிடறாங்க; பசி தாங்காமத்தான் பத்துப் பைசா எடுத்துப் போய் பிஸ்கட் வாங்கினேன்'' என்ற அவன் குரல் ஆத்தாவின் கத்தலில் அடங்கி, வயிற்றில் விழுந்த சூட்டில் அலறி விழுந்தான்.

"சனியனே சீக்கிரம் நட!'' என்றபடி கோவாலை இழுத்துக்கொண்டு நடந்துகொண்டிருந்தாள் சின்னாத்தா.

''அட தெய்வமே! டிக்கெட்டு கொடுத்துப் புட்டாங்க போல இருக்குதே. அட மாரியாத்தா! நீதான் டிக்கெட்டுக் கிடைக்கச் செய்யணும்'' எனக் கூவியபடியே தியேட்டருக்குள் ஓடினாள்.

உள்ளே படம் ஓடிக் கொண்டிருந்தது.

''படம் ஆரம்பிச்சிடுச்சி போலிருக்கே! மவராசா, ஒரு டிக்கெட் குடுப்பா!'' என்றாள்.

''என்ன ஆத்தா, சில்லறை இல்லையா? ஒண்ணே காலா இருந்தாக் கொடு'' என்றான் கவுண்டரில் இருந்த ஆள்.

''இல்லையே ராசா, ஒரு ரூபாயும் எட்டணாவும்தான் இருக்கு!'' நீட்டினாள்.

''சரி, சரி, இந்தா பதினைஞ்சு காசு. பத்துக்காசு இல்ல, போ, போ!'' எனச் சொல்ல,

படம் பார்க்கும் அவசரத்தில் மகனை இடுப்பில் தூக்கிக் கொண்டு ஓடினாள்.

தூக்கி இடுப்பில் வைத்த வேகத்தில் வயிற்றில் காலையில் போட்ட சூடு வலிக்க, ''ஸ்... ஆ...'' என்றபடி நிமிர்ந்தான் கோவாலு.

உள்ளே 'தாய்ப்பாசம்' படம் ஓடிக்கொண்டிருந்தது.

— **கலைப்பிரியன்**



பாரதி பற்றி ஒரு சினிமா

மகாகவி பாரதியாரின் வாழ்க்கையில் நடந்த சில முக்கிய நிகழ்ச்சிகளைத் தொகுத்து, 'கொட்டு முரசே' என்ற பெயரில் படமாகத் தயாரித்து இயக்கி வருகிறார் பிரஸ்டீஜ் புரொடக்‌ஷன்ஸ் அதிபர் மல்லிகார்ஜுனன்.

''இது மகாகவியின் வாழ்க்கை வரலாற்றுப் படமுமல்ல. பாரதியாரின் வறுமையை மட்டும் சித்திரிப்பதும் அல்ல. வளமை மிகுந்த காட்சிகளை — குறிப்பாக மகாகவியின் கற்பனைகள், இலக்கியச் சேவை, மாதர் தொண்டு போன்றவற்றைப் படத்தில் தொகுத்தளிக்கவிருக்கிறோம்'' என்கிறார் மல்லிகார்ஜுனன்.

''இந்தப் படம் மகாகவியின் நூற்றாண்டு விழா சமயத்தில் வெளிவந்திருக்க வேண்டியது. (1982) ஆனால் படத்தைத் துவக்கிய சில நாட்களில் எனக்கு 'ஹார்ட் அட்டாக்' ஏற்பட்டுப் பல மாதங்கள் படுக்கையில் இருக்க நேரிட்டது. அதுவும் ஒருவிதத்தில் நல்லதுதான். ஆஸ்பத்திரியிலிருந்த போது மகாகவியைப் பற்றி பி.ஸ்ரீ., வ.ரா., சுத்தானந்த பாரதி, ப. ஜீவானந்தம், ஆக்கூர் அனந்தாச்சாரி, ஆர். ஏ. பத்மநாபன் முதலியோர் எழுதியிருந்த பல புத்தகங்களைப் படித்தேன். பெரும்பாலும் பாரதியார் பயன்படுத்திய வசனங்களையே படத்தில் உபயோகிக்கிறேன். எனக்கு உடல்நிலை சரியில்லாமலிருந்த போது, இன்னொருவரை விட்டுப் படத்தைத் தொடர்ந்து எடுத்திருக்கலாம். என்றாலும் நான் எதிர்பார்க்கும் விதத்தில் படம் அமையுமா என்பது சந்தேகமே. அதனால்தான் படப்பிடிப்பு காலதாமதமாயிற்று'' என்கிறார் மல்லிகார்ஜுனன். இவருடைய புதுப்பெயர்: மகான்.

கொட்டு முரசே படப்பிடிப்பு தொண்ணூற்றைந்து சதவீதம் முடிவடைந்து விட்டது. சக்ரவர்த்தி பாரதியாராக நடிக்கிறார். தவிர மனோரமா, ரம்யா கிருஷ்ணன், ஐ. எஸ். ஆர். முதலியோரும் நடிக்கிறார்கள்.

''பாண்டிச்சேரி, எட்டயபுரம், புதுக்கோட்டை, மதுரை, ராஜபாளையம் போன்ற ஊர்களில் மகாகவி சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளைப் படம் பிடித்திருக்கிறோம். பல ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த நிகழ்ச்சிகளாதலால் அந்நகரங்களின் இன்றைய நிலையைக் காட்டினால் சரிவராது. புராதன பாணி மாறாமலிருக்கும் பகுதிகளையே காட்ட வேண்டும்'' என்று கூறும் மகான், தொடர்ந்து சொல்கிறார்: ''ஞானரதம்' என்ற படைப்பில் மகாகவி, தான் மூன்று லோகங்களுக்கும் சென்று வருவதாகக் கற்பனை செய்து எழுதியுள்ளார். கந்தர்வலோகம் சென்று அங்குள்ள கந்தர்வக் கன்னியுடன் மகிழ்ந்திருப்பதாக ஒரு கட்டம் வரும். இந்நிகழ்ச்சியை ஒரு லட்ச ரூபாய் செலவு செய்து கந்தர்வலோக செட் அமைத்துப் படமாக்கியுள்ளோம்.''

வருகிற டிசம்பர் மாதம் பாரதியாரின் பிறந்ததினத்தின்போது படம் வெளியிடப்படவிருக்கிறது.

மகாகவி பாரதியாரின் வாழ்க்கையைப் பல கோணங்களில் படமாக்கலாம். பாரதியார் ஒரு பொதுச் சொத்து. நான் எடுத்திருப்பது ஒரு சிதறல் மட்டுமே. இதை ஓர் ஆரம்பமாகவே கொள்ள வேண்டும். பாரதியார் பற்றி இன்னும் இதைப் போலப் பல படங்கள் நாட்டுக்குத் தேவை'' என்கிறார் மகான்.

— மன்னை சௌரிராஜன்

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600 032. (Phone: 431543).

Assistant Editor: P. S. Mani. Editor: K. Rajendran.

கைபடாத சேவரிட் சேமியா
மணக்குமே உங்கள் கைபட்டதும்!





சேவரிட் சேமியா மிக நவீனமான அயல் நாட்டு இயந்திரங்களால் மிகச் சுகாதாரமான முறையில் கைபடாமல் தயாரிக்கப்படுகிறது.
உயர்தர சம்பா கோதுமை ரவையில் தயாரிக்கப்படும் சேவரிட் சேமியா சத்து நிறைந்தது. குழைந்து போகாதது. சீக்கிரமாகச் சமைக்கக் கூடியது. மேலும், சேவரிட் சேமியாவை வறுக்க வேண்டிய அவசியமில்லை. இது சமைத்த பின்பும் பால்போல் வெண்மையாக இருக்கும்!
சிற்றுண்டிகளானாலும், பாயசம் போன்ற விசேஷ உணவு வகைகளானாலும் சேவரிட் சேமியா உங்கள் சமையலுக்கு ஊட்டமும் சுவையும் கூட்டுகிறது!
ஆகையினால்தான் குடும்பநலன் கருதும் குடும்பத் தலைவிகள் விரும்பி வாங்குவது சேவரிட் சேமியாவே!

முத்தான அம்மா சமைப்பது
சத்தான சேவரிட் சேமியா!

Savorit
சேமியா

Sista's - UIM.48285.TMA

காலைப் புதுமை மாலைவரை நீடிக்கச் செய்யுங்கள்!





ண்மையான புத்துணர்ச்சி. மற்ற சோப்புகள் தரும்
றைந்த நேர புத்துணர்ச்சி அல்ல. நாள் முழுவதும்
உடலின் வியர்வை நாற்றமின்றி திகழும்
த்துணர்ச்சி! புதிய ஸின்த்தால் மட்டுமே அதனைத்
தரவல்லது. இப்போது, ஒரு புதிய அற்புத
நறுமணம் ஸின்த்தாலில் உள்ளது.

**மேலும் அதன் சக்திவாய்ந்த வியர்வை
துர்நாற்றம் போக்கும் தன்மை, சரும
ருமிகளை ஒழித்து உங்களை நாள் முழுவதும்
நாற்றமின்றி புத்துணர்ச்சியுடன் வைத்திடும்.**

ஸின்த்தால் மட்டுமே

ங்களை புத்துணர்ச்சியுடன் வியர்வை நாற்றமின்றி நாள் முழுவதும் வைத்திடும்.

Godrej